மழை வருவது சகஜம். அதை வைத்துக்கொண்டு ஜூன் 12-13-ம் தேதிக்குப் பிறகு தண்ணீரை திறந்துவிடுவது வழக்கம். மே மாதத்திலிருந்து ஜூன் முற்பகுதி வரையில் வாய்க்கால் மூடப் பட்டிருக்கும், மழை அதிகம் இருக்காது, தண்ணீர் குறைவாக இருக்கக்கூடிய காலம். இந்த ஆண்டில் விசித்திரம் என்ன வென்றால், ஜூன் 19-ம் தேதி வரையில் பாசனத்திற்குத் தண்ணீர் விடவில்லை. தூரதிருஷ்டி இருந்தால் ஜூன் 1-ம் தேதியே மழை வருகிறது என்று இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்து, கொஞ்சம் இப்படி ரிஸ்க் எடுத்திருக்கலாம்—கொஞ்சம் தண்ணீரைத் திறந்து விட்டு ரிஸ்க் எடுத்திருக்கலாம். ஏழு நாட்களுக்குப் பிறகாவது அந்த யோசனை ஏற்பட்டு தண்ணீர் திறந்து விட்டிருப்பது, தண்ணீர் வரும் என்று எதிர்பார்த்திருப்பதை எடுத்துக் காட்டு கிறது. இந்த இடத்தில் இந்தக் குறை இருக்கிறது. இவ்வளவு மழை பெய்து வெள்ளம் அதிகரித்தும், 2-3 நாட்கள் இருந்தால் ஒத்துக்கொள்ள முடியும். ஆனால் 15 நாட்கள் தூங்கவேண்டிய காரணம் என்ன? இவ்வளவு தண்ணீர் எதிர்பார்க்கிறோம் என்று எச்சரிக்கை கொடுத்திருக்கக்கூடாதா? 63,000 கியூசெக்ஸ் விடுவ தாகத் தந்தி கொடுத்தார்களே, சமாசாரம் தெரிவித்து பெருமளவு தண்ணீர் வருகிறது, ஜாக்கிரதையாக இருங்கள் என்பதற்காகவா? அதுவும் ஒரு நிர்வாக வேலையாகத்தான் கருதப்பட்டு, ஏதோ காலை ஆபீசுக்குச் சென்று பைல்களைப் பார்த்துவிட்டு, மாலை வீட்டுக்கு வருவது போன்று நடந்திருக்கிறதே தவிர, பொறுப்புள்ள முறையில் நடக்கவில்லை. எந்த அதிகாரியாக இருந்தாலும் அவர் இதிலே பொறுப்பற்ற முறையிலேதான் நடந்திருக்கிறார்கள். வெள்ளம் அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது, நீர்ப் பிடிப்பு ஏற்பட்டிருக் கிறது என்று தெரிந்தும்கூட இதைச் சாதாரணமான வேலையாக நினைத்துத்தான் பணி புரிந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கொடுத்த விவரத்திலிருந்தே தெரிந்துகொள்ள முடிகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நமக்கு ஜூலை 2-ம் தேதி மாலை 4 மணிக்கு தந்தி கிடைத்தது என்று கூறுகிறார்கள். அதன் பிறகு வெகு வேகமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்றும், இந்த நடவடிக்கையை 20 பிரிவுகளாக இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். அப்படி 20 வகையான நடவடிக்கைகளை எந்த முறையில் எடுத்திருக்கிறார்கள் என்று விழுந்து விழுந்து பார்த்தால், லீவில் இருந்த என்ஜினியரை வரவழைத்தோம், ஆஸ்பத்திரியில் இருந்த மந்திரிக்குத் தகவல் கொடுத்தோம், கம்பியில்லாத தந்தியைக் கொண்டுவந்து வைக்க ஏற்பாடு செய்தோம் அல்லது இவரைக் கூப்பிட்டோம், அவரைக் கூப்பிட்டோம் என்று இருக்கிறதே தவிர, வேறு என்னென்ன நடவடிக்கை எடுத்தார்கள், கலெக்டர்களுக்கு எப்போது தகவல் கொடுத்தார்கள் என்பனவற்றிற்கெல்லாம் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடியவர்களும், இதற்கு முன் இருக்கக்கூடியவற்றிற்கு மைசூரிலே இருக்கக்கூடியவர்களும் பதில் சொல்ல வேண்டும். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரையில் 2-ம் தேதிக்கு

நமக்கு எச்சரிக்கை வந்த பிறகு, ஜில்லாக்களுக்கு எப்போது எச்சரிக்கை போகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். நான் திருச்சி மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே ஒரு கேள்வி கேட்டிருந்தேன். அதற்குக் கொடுத்த பதிலை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். என்னுடைய கேள்வி: சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தைப்பற்றிய முதல் எச்சரிக்கை கலெக்டர் அவர்களுக்கு எப்பொழுது கிடைத்தது? வெள்ள எச்சரிக்கையின் விபரம் யாது? பொது ஜனங்களுக்கு வெள்ளத்தைப்பற்றி எச்சரிக்கை எடுத்த நடவடிக்கை விபரமும், எப்போது என்ற விபரமும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டேன். அதற்கு கலெக்டர் அவர்கள் அளித்த பதில்: இந்த பதில் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் நகல். கையெழுத்துப் போடப்பட்டுள்ளது. வெள்ளத்தைப்பற்றிய முதல் எச்சரிக்கை 5—7—1961-ம் தேதி கிடைத்தது. இரண்டாவது எச்சரிக்கை 8—7—1961-ம் தேதியில் கிடைத்தது. எல்லா அதிகாரிகளும் வெள்ள நிவாரண வேலைகளை மேற்கொள்வதற்கு அனுப்பப்பட்டனர் என்று கூறினார். இந்த 2-வது எச்சரிக்கை கோயிலடி உடைப்பு எடுத்த பிறகு கலெக்டருக்கு கிடைத்திருக்கிறது. கோயிலடி உடைப்பு ஏற்பட்டு, அதன் உச்ச கட்டம் 7-ம் தேதியே ஏற்பட்டு இருக்கிறது. கலெக்டருக்கு 8-ம் தேதிதான் இரண்டாவது எச்சரிக்கை கிடைத்திருக்கிறது. அவரது பதிலிலேயே முதல் எச்சரிக்கை 5-ம் தேதியும், இரண்டாவது எச்சரிக்கை 8-ம் தேதியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கலெக்டர் அவர்கள் வேண்டுமானால் தவறான செய்தி கொடுத்திருக்கலாம், ஆனால் அவர் அப்படி கொடுத்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன். ஆகவே, இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் சற்று சிந்தித்து ஆராய்ச்சி செய்து பார்க்க வேண்டும். இதையெல்லாம் நிர்வாகத் துறையினர் கொடுத்துள்ள அறிக்கையிலிருந்தே, அவர்கள் குறிப்பிட்டுள்ள அடிப்படையிலிருந்தே நான் சொல்கிறேன். ஆனால் ஜனங்களுக்கு அதிகாரிகளைக் காட்டிலும் முன்னெச்சரிக்கையான அறிவும், கூர்மையான அறிவும், அனுபவத்திலிருந்தே தெரிந்துகொள்ளும் திறமையும் எப்போதும் உண்டு. நீரிலே நீர்ச் சுழலையும், நுரையும் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். 1924-ம் வருஷத்திலே நிகழ்ந்த அனுபவத்தையொட்டி, அப்போது எங்கெங்கு உடைப்பு எடுத்துக்கொண்டதோ, அங்கெல்லாம் கரையைப் பலப்படுத்தும் முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். இப்படி திருச்சியில் 3, 4 இடங்களிலே நிகழ்ந்தது எனக்குத் தெரியும். ஆனால் அதிகாரிகளோ 5-ம் தேதி நடவடிக்கை எடுத்தார்கள். அதாவது வெள்ளம் அதிகரித்த பிறகு. அதிலும் அரசாங்கம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை மந்தமாகவே இருந்தது. அப்படி மந்தமாக இருந்தது என்பதற்கு இந்த சில உதாரணங்களே போதும். ஆனால் இங்கு 20 விதமான நடவடிக்கைகள் பெரிய அளவில் பாதுகாப்பதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. வெள்ளம் அதிகமாக வருவதற்கான அறிகுறிகள் முன்கூட்டியே தெரிந்தும்கூட, உடனே

அதாவது 28-ம் தேதியாவது குறைந்தபட்சம் நடவடிக்கை எடுத் திருக்க முடியும். அப்படித் துரிதமாக கொஞ்சம் 28-ம் தேதியே நடவடிக்கை எடுத்திருந்தால், ஓரளவுக்கு கோயிலடி உடைப்பு போன்றவையும், இவ்வளவு ஆபத்தான நிலைமையும் ஏற்பட்டிருக் காது என்று நான் நினைக்கிறேன்.

இந்தக் கோயிலடி உடைப்பை நானும் போய்ப் பார்த்தேன். அமைச்சர்களும், இன்னும் மற்ற அங்கத்தினர்களும் போய்ப் பார்த்திருப்பார்கள். இதைப் போய்ப் பார்த்ததில், இது திடீரென்று ஏற்பட்டிருக்காது என்று நான் நம்புகிறேன். 7-ம் தேதி காலையில் இந்த உடைப்பு தெரிந்தது என்று கூறப்படுகிறது. இதைப்பற்றி சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த உடைப்பு ரோடுக்கு சற்று தள்ளி இருக்கிறது. அதாவது 2 பர்லாங் தூரம் இருக்கும். அதற்குத் தள்ளியே இந்த உடைப்பு ஏற்பட்டிருக் கிறது. ஆகவே, இது ஏற்கனவேயே சற்று பலமற்றதாக இருந்து, கொஞ்சம் கொஞ்சமாக அரிப்பு எடுத்துக்கொண்டு உடைந்திருக்க வேண்டும். ஆகவே, திடீரென்று இந்த உடைப்பு ஏற்படுவதற்கு சாத்தியமல்ல. ஆகவே, இதையெல்லாம் விசாரித்துப் பார்க்க வேண்டும். 2-ம் தேதியே வெள்ளத்திற்கான எச்சரிக்கை தெரிந்தும், தெரிந்த 7 மணி நேரத்திலே இரண்டு மடங்காக தண்ணீர் வருகிறது என்று தகவல் கிடைத்திருந்தும், எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்னவென்று பார்க்கும்போது, எவ்வளவு மந்தமாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பது நன்கு தெரியும். முன்கூட்டியே போதிய நடவடிக்கைகள் எடுத் திருந்தால், கோயிலடி உடைப்பைத் தடுத்திருக்க முடியும் அல்லது இவ்வளவு ஆபத்தான நிலைமை ஏற்படாமல் தடுத்திருக்க முடியும். இதைத்தவிர, இன்னும் சில வாய்க்கால்களைத் திறந்து விட்டிருக்க லாம். அதையும் செய்யவில்லை. "கப்பலேறி பட்ட கடன் தீருமா" என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல் இப்படி ஒருசில வாய்க்கால்களைத் திறந்துவிடுவதால், வெள்ளத்தைத் தடுத்துவிட முடியுமா என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். கல்லணைக் கால்வாயும், வெண்ணாறும், இன்னும் புதிய கட்டளைக் கால்வாயும், புள்ளம்பாடி கால்வாயும் திறந்துவிடப்பட்டதா என்று பார்த்தால், 9-ம் தேதிக்குப் பிறகுதான் அவைகளில் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அப்படி, தண்ணீர் விடப்பட்டதால், அதைச் சார்ந்துள்ள குளங்களிலே இன்னும் தண்ணீர் நிரம்பவில்லை. தண்ணீர் குறைவாகத்தான் போய்க்கொண்டிருக்கிறது. குளங்க ளாவது ரொம்பி இருக்கலாம். அதற்குக்கூட நடவடிக்கை எடுக்க வில்லை. அதற்குக் காரணம், எந்த தேதியில் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அந்த தேதியில்தான் திறந்துவிடுவது என்று பைத்தியக்காரத்தனமான ஒரு பழக்கத்தை வைத்துக்கொண்டிருப்பது தான். அன்பில் என்ற ஒரு இடத் திலும், உத்தமஞ்சேரிக்குப் பக்கத்தில் ஒரு இடத்திலும் தண்ணீர் வேகத்தை கட்டுப்படுத்தி கல்லணையை பாதுகாக்க வேண்டுமென் பதற்காக நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் அதற்கு அங்குள்ள

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

மக்கள் அனுமதிக்கவில்லை. குறுக்கே படுத்துக்கொண்டார்கள். அதற்குமேல் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் **"let the nature take its own course"** என்று விட்டுவிட்டார்கள். பிறகு ஒரு தினுசாக வெள்ளமும் தணிந்தது. இதை இந்த இடத்தில் ஏன் எடுத்துக் காட்டுகிறேன் என்றால், இந்த வெள்ள மானது திடீரென்று ஏற்பட்டு விடவில்லை, அப்படிச் சொல்வது தவறு என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவேதான். ஒரு மாதத் திற்கு மேல் ஓயாது மழை பெய்துகொண்டிருந்தது. ஜூன் 30-ம் தேதி ஓயாது மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது என்று சொல்லப் படுகிறது. ஆனால் இதற்கு முன்பு 1-ம் தேதியிலிருந்து மழை பெய்ய ஆரம்பித்துவிட்டது. 28-ம் தேதியே வெள்ளம் ஏற்படுவதற்கான அறிகுறி தெரிய ஆரம்பித்தது என்று இவ்வளவும் சொல்லிவிட்டு, திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது என்று சொல்வது எவ்வளவு தவறானது, எவ்வளவு பொருத்தமற்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம். முன்னெச்சரிக்கை தெரிந்தும், நிர்வாக எந்திர மானது எந்த அளவுக்கு இதிலே கவனத்தைச் செலுத்தி, தன்னுடைய பொறுப்பை நிறைவேற்றி இருக்கிறது என்பதைப் பற்றி விசாரணை செய்யவேண்டும். எதிர்காலத்தில் மீண்டும் இவ்விதம் ஏற்பட்டால், என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டுமென்று இத்துறையில் புதிய அனுபவம் ஏற்பட் டிருக்கும் அதிகாரிகளுக்கு இந்த விசாரணை உதவியாகவும் இருக்கும். ஆனால் இதிலே மட்டும் நிச்சயமாக பொதுப் பணித் துறையினர் ரொம்பவும் தவறி இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆனால் இப்படி ஒரு வெள்ளம் வந்ததும் ஒரு வகையிலே நன்மைதான். ஆனால், நான் வெள்ளம் வரவேண்டுமென்று விரும்ப வில்லை. சாகுபடி அளவுக்கு காவேரியில் வெள்ளம் வந்தால் போதுமென்றுதான் நான் நினைக்கிறேன். 1924-லே வெள்ளம் வந்திராவிட்டால், இப்போதுள்ள மேட்டூர் அணை ஏற்பட்டிருக் காது. அப்போது வெள்ளம் வந்ததால், அதிலிருந்து ஏற்பட்ட நன்மையே மேட்டூர் அணையாகும். 1924-ல் ஏற்பட்ட வெள்ளத்தின் படிப்பினையை வைத்துக்கொண்டு, அதற்கு மேல் கால் பங்கு வெள்ளம் ஏற்பட்டால் எந்த அளவுக்கு அணை கட்ட வேண்டுமோ அந்த அளவுக்கு மதிப்பிட்டுத்தான் இந்த மேட்டூர் அணையை 120 அடி உயரத்திற்கு கட்டி இருக்கிறார்கள். அதற்கு மேலும் உபரித் தண்ணீர் வந்தால், அவைகளை எப்படி வடிகால்கள் மூலம் வெளியே அனுப்பலாம் என்பதையெல்லாம் சிந்தித்துத்தான் இந்த அணையை 1924-ம் வருஷத்தில் ஏற்பட்ட வெள்ளத்தையும், அதோடு கால் மடங்கு அதிகம் சேர்த்து இந்த மேட்டூர் அணையைக் கட்டினார்கள். ஆனால், 1924-ம் வருஷத்தில் வெள்ளம் வந்த சமயத்தில் கண்ணம் பாடி டாம் கிடையாது. 1927-ம் வருஷத்தில்தான் அது பூர்த்தி செய்யப்பட்டது. அப்பொழுது மேட்டூர் டாம் கிடையாது. பவானி, அமராவதி டாம் கிடையாது. மற்ற நதிகளைப்பற்றி கேட்க வேண்டியதில்லை. 1924-ல் அவ்வளவு ஜலம் வந்து பெரிய அளவுக்கு

12-30 p.m.

நஷ்டம் ஏற்பட்டது. அதோடு இப்பொழுது வந்த வெள்ளத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது 3, 4 மடங்கு அதிகம் இல்லை. முன்பு இருந்ததைவிட இப்பொழுது தண்ணீரை தேக்கி வைக்கும் வசதி அதிகம். கண்ணம்பாடி டாமில் கிட்டத்தட்ட 5,000 கோடி கனஅடி தண்ணீர் தேக்கி வைக்க முடியும். மேட்டூரில் கிட்டத்தட்ட 10,000 கோடி கனஅடி தண்ணீர் தேக்கி வைக்கலாம். எல்லாம் உத்தேச மாகச் சொல்லுகிறேன். பவானி நீர்த்தேக்கம், அமராவதி நீர்த் தேக்கம் எல்லாம் கட்டியிருக்கிறோம். 1924-ம் வருஷத்தில் தண்ணீர் வந்ததைவிட இரு மடங்கு அதிகமாக இப்பொழுது வந்தால்கூட நமக்குப் பெரிய அளவு சேதத்தை விளைவிக்க முடியாது. நான் அரசாங்க அறிக்கையில் கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களை வைத்தே சொல்லுகிறேன். 'வெள்ளம் மிக அதிகமாக வந்து விட்டது. 1924-ம் வருஷத்தைக் காட்டிலும் மிக அதிகம், சமாளிக்க முடியாமல் வந்துவிட்டது. ஆகையினால் பெரிய சேதம் ஏற்படுத்திவிட்டது' என்று சொல்லுவது சரியாக இருக்காது. வெள்ளம் அதிகம்தான். இருந்தாலும் அதை சமாளித்திருக்கக் கூடிய சக்தி உண்டு. 30 வருஷ காலமாக அலட்சிய புத்தி வந்து விட்டது. மேட்டூர் அணை கட்டியவுடன், பவானி, அமராவதி அணைகள் கட்டியவுடன், இனி வெள்ளம் வராது, பெரிய ஆபத்து ஒன்றும் இருக்காது என்ற ஒரு மந்தமான எண்ணம் ஏற்பட்டு விட்டது. இனி வெள்ளம் ஏற்பட்டால் என்ன செய்வது என்பதைப் பற்றிக் கவனம் செலுத்துவதே போய்விட்டது. இதற்கு முன்பு மேட்டூர் அணை கட்டிய நிபுணர்கள் கொடுத்திருக்கக்கூடிய யோசனைகளை என்றாவது பரிசீலனை செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்ற எண்ணமே போய்விட்டது. இந்த அறிக்கையே அதற்கு ஒரு சான்று. நான் எங்கும் போய் சான்று தேடத் தேவையில்லை. அறிக்கையில் கொடுத்திருக்கக்கூடிய பரிகாரம் என்ன? கடைசியில் 14 யோசனைகள் கொடுத்திருக் கிறார்கள். முதலாவதாக, காவேரிக்கும், கொள்ளிடத்திற்கும் இடைப்பட்ட பொதுக் கரையைச் சுமார் 5 மைல் தூரத்திற்கு அதிக அளவில் பலப்படுத்துதல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதுதான் அந்த யோசனை வருகிறது. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் என்று சொல்லுவது போல் இருக்கிறது. இதை யெல்லாம் முன்கூட்டியே யோசனை செய்திருக்க வேண்டும். இவைக ளெல்லாம் புதிய யோசனை இல்லை. எதிர்பார்க்கக்கூடியதுதான். வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு மத்திய அரசாங்கத்தி லிருந்து நிதி கோரவேண்டும் என்பதுகூட புதிய யோசனை இல்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கத் தவறிவிட்டார்கள். அதற்குப் பிறகு வெள்ளம் வரக்கூடிய பகுதிகள் எவை என்று தீர்மானித்து ஒதுக்குகிறார்கள். காவேரியில் வெள்ளம் வராது என்ற ஒரு நிம்மதி யான நம்பிக்கையின் பேரில் அரசாங்கமும், நிர்வாகமும் அதைப் பற்றிச் சிந்திக்கவே இல்லை. இப்பொழுதுதான் சிந்திக்க ஆரம்பித் திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய வெள்ளம் வந்ததினால், நமக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்பட்டது. வெள்ளம் வந்ததுபற்றி

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

பாராட்டுவதா, வருத்தப்படுவதா என்று புரியவில்லை. வெள்ளத்தினால் நமக்கு ஒரு நன்மையும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய வெள்ளம் வந்த பிறகு தான் தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று நான் அவர்களை பாராட்டுகிறேன். இவைகளையெல்லாம் முன்கூட்டியே ஆராய்ந்திருக்கவேண்டும், இவைகள் முன்கூட்டியே ஆராய்ந்திருக்கக்கூடிய விஷயங்கள், இந்தத் துறையிலே கவனம் செலுத்தப்படவில்லை. அதிகமான பாசன வசதி செய்து கொடுப்பது, அதற்கான புதிய திட்டங்களைப் போடுவது என்பதில் மட்டும்தான் கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பதுபற்றி இதற்கு முன்பு சிந்திக்கப்படவே இல்லை. வெள்ளத் தடுப்புக்கு பயன்படுத்தக்கூடிய முறையில் சில நதிகளில் அணை கட்டும் பிரச்னையைக்கூட ஒத்திப் போட்டு வந்திருக்கிறார்கள். சேலம் தொப்பையார், சின்னாறு திட்டம், திருச்சியின் கொல்லிமலைத் திட்டம், நொய்யலாறு திட்டம் இப்படி பல திட்டங்கள் இருந்தன. காவேரியில் வந்து விழக்கூடிய சிற்றாறுகளில் அணைகட்டி தண்ணீரை தேக்கி வைத்து, தேவைப்படும் சமயங்களில் பாசனத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம். மேட்டூர் ரிசர்வாயரில் வந்து விழக்கூடிய சிற்றாறுகளில்கூட அணைகள் கட்டலாம். பாசன வசதி ஒன்றுமட்டுமே குறிக்கோளாக வைத்துக்கொண்டு பிளானிங் கமிஷன் 2 சதவிகிதம் 'ரிடர்ன்' தான் இருக்கிறது, ஆகையினால் அவைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. மூன்றாவது திட்டத்தில்கூட இம்மாதிரியான அணைக்கட்டுகளை கட்டும் திட்டங்கள் இடம் பெறவில்லை. அவைகள் இன்னும் பரிசீலனையில் இருக்கிறதா, கைவிடப்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. அவைகள் கைவிடப்பட்டுவிட்டன என்பது நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னால் கைவிடப்பட்டது என்று அர்த்தமில்லை. நான் சொல்லாத வார்த்தைகளை தயவுசெய்து சொல்லவேண்டாம்.

SRI M. KALYANASUNDARAM : நான் தவறான விவரங்களை வைத்துப் பேசவில்லை. காவேரியில் விழக்கூடிய சிற்றாறுகள், காட்டாறுகள் இவைகளில் அணை கட்டும் திட்டங்களை கட்டாயம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள முற்பட வேண்டும் என்ற ஒரு யோசனையை 14 யோசனைகளோடு 15-வது யோசனையாக வைக்க விரும்புகிறேன். வெள்ளத் தடுப்பு நடவடிக்கை என்ற அடிப்படையில் இதை வற்புறுத்தி அவற்றை நாம் மூன்றாவது திட்டத்தில் கண்டிப்பாக சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காவேரி ஒப்பந்தத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிவிட்டு, நிவாரண வேலைகளைப்பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். காவேரி நதியே நமக்கு சொந்தமா என்ற சந்தேகத்தை சிலர் கிளப்பி விட்டிருக்கிறார்கள். காவேரி நதியில் வரக்கூடிய

[Sri M. Kalyanasundaram] [18th September 1961

தண்ணீரில் எவ்வளவு ஜலம் தமிழ் நாடு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும்—வெள்ளம் ஏற்படும் காலத்தில் எவ்வளவு வேண்டுமானாலும் திறந்துவிடலாம்—தமிழகத்தில் பாசன வசதிக்கு எவ்வளவு விடவேண்டும் என்பதுபற்றி 1924-ம் வருஷத்திய ஒப்பந்தத்தில் இருக்கக்கூடிய ஷரத்துக்களை தமிழ்நாடு அரசாங்கம் மீறிவிட்டனர் என்று அவர்கள் குற்றம் சாட்டுவதும், மைசூர் அரசாங்கம் தவறு செய்துவிட்டது என்று நாம் குற்றம் சாட்டுவதும் தொடர்ந்து நடந்துகொண்டு வருகிறது. 1924-ம் வருஷத்தில் இருந்த நிலைமை வேறு. இதைப் பரிசீலனை செய்ய 1947-ம் வருஷம் வரைக்கும் இதற்காகக் காத்திருக்க வேண்டுமா என்பது ஒரு சந்தேகம். இம்மாதிரி தகராறு நீடித்துக்கொண் டிருப்பதில் யாருக்கும் பிரயோசனமில்லை. அக்ரிமெண்டு காலம் பூர்த்தியாகும் வரையில் இதற்காகக் காத்திருக்க வேண்டாம். அவசியமானால் இப்பொழுதே எல்லா பிரச்னைகளையும் வைப்போம், விவாதிப்போம், காவேரியில் யாருக்கு எவ்வளவு தண்ணீர் என்பதை முடிவு செய்வோம். அதன்படி நாமும் நடக்கலாம், அவர்களும் நடக்கலாம். இம்மாதிரி இந்தப் பிரச்னையை நீடித்து வைத்துக்கொண்டே, வேறு நாடுகள் போல் தகராறை வளர்த்துக் கொண்டே போவது அரசியலுக்கு பிரயோசனப்படுமோ என்னவோ? தேர்தலில் அவரவர்களின் ராஜ்யத்தின் உரிமைக்காக பாடுபடுகிறார்கள் என்று சொல்லிக்கொள்ளுவதற்கு பயன்படுமோ என்னவோ? இரண்டு ராஜ்யங்களும் ஒற்றுமையாக இருந்து இந்தப் பிரச்னையில் முடிவு காண்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். 1974-ம் வருஷம் வரையில் காத்திராமல், தகராறு தொடர்ந்து நீடித்துக்கொண்டிராமல், நாம் உடனடியாக அவற்றில் இருக்கக்கூடிய சிக்கல்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து சரியான முடிவுக்கு துரிதமாக வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளு கிறேன். இல்லாவிட்டால், நாம் போட்ட திட்டங்களை போட்டபடி நிறைவேற்றுவது கஷ்டமாக இருக்கும். வெள்ளம் ஏற்பட்டதினால் திடீரென்று எவ்வளவு பணம் அதிகமாகத் தேவையாக இருக் கிறது? 25 லட்சம் ரூபாய் 'சப்ளிமெண்டரி கிராண்டில்' கோரி யிருக்கிறார்கள். அதோடு நிற்கும் என்று நான் நினைக்கவில்லை. இன்னும் பல துறைகளில் விவரங்கள் வந்து சேரவில்லை. டிசம்ப ரில் ஒரு கோடி ரூபாய் இன்னும் அதிகமாக நிவாரண வேலை களுக்கு தேவைப்படும் என்று கோரினால் நாம் அதுபற்றி ஆச்சரியப்படுவதற்கில்லை. அம்மாதிரி தேவைப்படலாம். அந்த அளவுக்கு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று மதிப்பிடப்பட்டிருக் கிறது. திடீரென்று ஒரு வருஷம் ஒரு கோடி ரூபாய் அதிகமாக தேவைப்பட்டால் எவ்வளவு கஷ்டம்? அதோடுகூட விவசாயத் திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும்? ஜூன் 19-ம் தேதி தண்ணீர் திறந்து விட்டார்கள். அதில் நன்மையும் இருக்கிறது. 12-ம் தேதியே திறந்துவிட்டிருந்தால் சேதம் அதிகமாக இருக்கும். இப் பொழுது நாத்து நஷ்டத்தோடு போய்விட்டது. இல்லாவிட்டால் பயிரே அழிந்து போயிருக்கும். திருச்சி, தஞ்சை ஜில்லாக்களில் நாத்து நஷ்டத்தோடு போய்விட்டது. ஒரு போகம் சாகுபடி

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

பாதிக்கப்பட்டிருக்கிறது. மண் ஏறியிருக்கக்கூடிய பிராந்தியம் வெகு அதிகமாக இருக்கிறது. திருச்சி ஜில்லாவில் நான் நேராகப் பார்த்தேன். இரண்டு கிராமங்களில் மட்டும் 300 ஏக்கராவுக்கு மேல், 4, 5 அடி உயரத்திற்கு மண் ஏறியிருக்கிறது. இவைகளை சீர்திருத்தி விவசாயத்திற்குக் கொண்டு வருவதற்கு எவ்வளவு நாட்கள் பிடிக்கும் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஒரு போகம் வெள்ளாமை பாதிக்கப்பட்டிருக்கிறது. அடுத்த போகம் சாகுபடி தொடங்குவதற்குள்ளாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது இன்னும் சந்தேகத்தில் இருக்கிறது. ஆகவே, இந்த திட்டங்களெல்லாம் வெற்றிகரமாக நடக்க வேண்டும். காவிரி பெரிய நதி; அதிகமாகப் பாசன வசதி கொடுக்கும் நதி. ஆகவே, பாசன திட்டங்கள், உற்பத்தித் திட்டங்கள் இவைகளுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. இதை ஒரு சர்ச்சைக்குரிய பிரச்னையாக வைத்து விடக்கூடாது. ஒவ்வொரு நதிக்கும் ஒரு 'மாஸ்டர் ப்ளான்' இருக்கிறதாகப் பேசுகிறார்கள், ஒவ்வொரு நதிக்கும் என்று சொல்லும் போது, காவிரிக்கும் ஒரு மாஸ்டர் ப்ளான் தேவைப்படுகிறது. அம்மாதிரி ஒரு ப்ளானைப் போடவேண்டும்; சம்மந்தப்பட்ட அரசாங்கங்களும், மைசூரும், நம் அரசாங்கமும், அப்பேர்ப்பட்ட ஒரு மாஸ்டர் ப்ளானைத் தயார் செய்து, ஒரு சொட்டுத் தண்ணீர் கூட வீணாகாமல், உபயோகிக்க வேண்டும். நிபுணர்கள் அறிக்கையிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட நம் ராஜ்யத்தில் வீணாக்குவதில்லை என்று தெரிகிறது. அதேபோல அதிக மழை பெய்தாலும் அதைக்கூடப் பயன்படுத்த முடியும் என்றும் தெரிகிறது. ஆகவே, இந்தப் பெரிய பாசன நதியைப் பலப்படுத்த முடியும். அதற்காக இன்னொரு அணையைக் கட்ட வேண்டும். எங்கே, எப்படி என்பதையெல்லாம் நிபுணர்கள் தீர்மானத்திற்கு விட்டுவிடலாம். ஆனால், மேட்டூர் ரிசர்வாயரைத் தவிர இன்னொரு மட்டத்தில், காவிரித் தண்ணீரைத் தேக்கிவைத்து, தேவைப்படும் போது, விவசாயத்திற்கு ஏற்றாற்போல, மேட்டூருக்கு மேலே நம் பகுதியிலேயே ஒரு அணைக்கட்டைக் கட்ட வேண்டும். அதற்கு ஹொகனகல் பொருத்தமாக இருக்கும் என்று ஒரு அபிப்பிராயம் இருக்கிறது. நிபுணர்கள் அதை ஆராய்ந்து என்ன கஷ்டம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். ஆகவேதான் இதற்காகவெல்லாம் ஒரு மாஸ்டர் ப்ளான் தேவைப்படுகிறது. காவிரியில் வந்து சேரும் எல்லா சிற்றாறுகளுக்கும் அணைகள் வேண்டும்.

திருச்சி மேலணை, அப்பர் அணைக்கட்டு, கொள்ளிடத்தில் அதிகத் தண்ணீர் போவதைத் தடுக்க உபயோகமாக இருக்கிறது. ஆனால், காவிரியில் அதிகமாகத் தண்ணீர் போனால் என்ன செய்வது கொள்ளிடத்தில் திறந்து விடுவதால், காவிரியில் குறையும். ஆனாலும், காவிரியில் தண்ணீரைத் தடுக்க முடியாது. அதற்கும் இந்த அறிக்கையிலே ஒரு யோசனை கூறப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். எந்த இடத்திலும், காவிரித் தண்ணீரைத் தடுக்க, அதை வேண்டிய அளவுக்கு விட, அந்த தண்ணீரை ஒழுங்குபடுத்த, ஒரு மேம்பாலம் கட்டி, அதை போக்குவரத்துக்குக்கூட உபயோகிக்கலாமா என்று ஆராய்ந்து பார்க்க

வேண்டும். அதற்காகத்தான் நான் ஒரு மாஸ்டர் ப்ளான் வேண்டும், ஒரு நிபுணர் கமிட்டி நியமிக்க வேண்டும் என்று கோருகிறேன். இதனால் ஏதோ எந்த அதிகாரியின் மீதோ குற்றப் பத்திரிகை வாசிப்பதாகவோ, சில அதிகாரிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்றோ செய்வது அல்ல நோக்கம்.

கங்கைத் தண்ணீரை காவிரிக்குக் கொண்டு வருவதென்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆந்திரா, மைசூர், தமிழ்நாடு, கேரளம் இந்த நான்கு ராஜ்யங்களுக்கும் சேர்ந்த ஒரு மாஸ்டர் ப்ளான் வேண்டும். எல்லோரும் சொல்லுகிறோம், ஒற்றுமையாக இருக்க வேண்டும், இந்தியர்கள் எல்லோரும் ஒன்று என்றெல்லாம். அப்படியிருக்கும்போது, இந்த நான்கு ராஜ்யங்களுக்கும் சேர்ந்து ஒரு ப்ளான் இருக்கவேண்டாமா? இன்றைக்கு தமிழ் நாட்டில் ஜலம் விணுவதில்லை. அதேமாதிரிச் சொல்ல முடியாது ஆந்திராவைப் பொருத்தமட்டில். ஆந்திராவில், கிருஷ்ணா, கோதாவரி நதிகள் அவர்களுக்கும் அநேகக் கஷ்டங்களைக் கொடுக்கின்றன. ஆனாலும், பிறருக்கு தண்ணீர் கொடுக்க அவர்களுக்கு விருப்பமில்லை. ஆனால், நான் சொல்லுவது, யாருடைய உரிமையையும் பாதித்து தமிழ் நாட்டுக்கு நன்மை தேட வேண்டுமென்ற நோக்கத்தில் அல்ல. இந்த நான்கு ராஜ்யங்களையும் ஒன்று சேர்த்து, இங்கே ஓடும் எல்லா நதிகளையும் பூராவாகப் பயன் படுத்தும் முறையிலே, ஒரு மாஸ்டர் ப்ளான் போடவேண்டும். இது சம்மந்தமாக திட்ட கமிஷன் முன்பும், மத்திய சர்க்காரில் சம்மந்தப்பட்ட இலாகாக்களிலும் வற்புறுத்தி மாஸ்டர் ப்ளானைத் தயார் செய்யவேண்டும். ஏதாவது ராஜ்யங்களுக்குள் தகராறு ஏற்பட்டால், நமக்கும் மைசூருக்கும் போல, உடனடியாக ஒரு கமிஷனைப் போட்டு—ஆந்திராவுக்கும் சென்னைக்கும் எல்லைத் தகராறு ஏற்பட்டபோது செய்ததுபோல—அந்தக் குழுவின் முடிவை இரண்டு பேரும், லாபமோ நஷ்டமோ, ஒத்துக்கொள்ளும் முறையில் செய்யவேண்டும். அந்த முறையில் பிரச்சினைகளைத் தொடர்ந்து நீடிக்க விடாமல், அவைகளைத் துரிதமாகத் தீர்த்து வைக்கும் முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நிவாரண வேலை சம்மந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர்களும் வெகு வேகமாகச் சுற்றுப் பிரயாணம் செய்தார்கள்; அமைச்சர்களும், நிவாரணமும் கூடவே போன மாதிரிச் செய்தார்கள். செய்த அளவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். இதற்கும் மேலாக, பொது மக்கள் எல்லாரும், தாங்களாகவே நிவாரண வேலையில் ஈடுபட்டும், உடைப்பைத் தடுத்தும், பலர் பலத் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு முதலாவதாக நாம் நன்றி செலுத்த வேண்டும். அமைச்சர்களுக்கு விமானம் இருந்தது, ஜீப்புகள் இருந்தன, அந்த வசதிகளெல்லாம் அவர்களுக்கு உண்டு, அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகலாம், சுற்றலாம். ஆனால் பொது மக்கள் அப்படியில்லை. அவர்கள் பலத் தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். திருச்சியிலும், தஞ்சையிலும் தடுப்பு நடவடிக்கைகளில்

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

அவர்கள் செய்திருக்கும் தியாகங்களுக்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். சர்க்காரும் ஏதோ செய்தார்கள். சாப்பாடு எந்த அளவுக்கு அரசியலுக்கும் பயன்படுத்தப்பட்டது என்பது போகட்டும். நிவாரண வேலைகளும் அரசியலுக்கு எந்த அளவுக்குப் பயன்படுத்தப்பட்டது என்பதும் போகட்டும். அந்த கட்சிக்காரர்கள், நிவாரண வேலைகளையும் அரசியல் நோக்குடனேயே செய்திருக்கிறார்கள். பொட்டலம் கொடுப்பதில் கூட, ஐ.ஆர்.ஆர். பொட்டலங்கள் போல, பெயரிட்டுக் கொடுத்தார்கள். (குறுக்கிடு) திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டிதான் செய்தார்கள். எழுத்துக்காகச் செலவழித்த காலணாவையும் சேர்த்து நிவாரணத்திற்குக் கொடுத்திருக்கலாம். ஆனால், அது விளம்பரத்திற்காக கொடுக்கப்பட்டதாக ஆகிறது. சர்க்கார் வண்டிகளிலேயே போய்க்கொண்டு, இம்மாதிரிப் பொட்டலங்களைக் கொடுத்துக் கொண்டு, தங்கள் அரசியல் செல்வாக்கை, கட்சியின் செல்வாக்கை வளர்க்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது. துரதிர்ஷ்ட வசமாக அதற்கு ஒரு பெரிய வெள்ள நெருக்கடி பயன்படுத்தப்பட்டது. இம்மாதிரியான கெட்ட எண்ணத்தை ஆளும் கட்சி கடைப்பிடித்திருக்க வேண்டாம். அமைச்சர்கள் செய்திருக்க வேண்டாம். எல்லா எம்.எல்.ஏ.-க்களையும் கூட்டி மகாநாடு கூட்டினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது விஷயமே எனக்குத் தெரியாது. நான் கொடுத்த தந்திக்குக்கூட பதில் கிடையாது. எல்லோரும் சேர்ந்து வேலைகள் செய்திருந்தும், அதைப் பற்றி, மற்ற கட்சியினர் செய்த வேலைகள் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. அமைச்சர்கள், அந்தக் கட்சிக்காரர்கள் செய்ததைப் பெரிய அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN: எவ்வளவு உடனடியாக, விரைவாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் அங்கத்தினர் என்பது தெரிகிறது! விஜயம் செய்யும்பொழுது நடவடிக்கை எடுத்திருக்கலாமே!

SRI M. KALYANASUNDARAM: இப்படி அமைச்சர்கள் வருவதும் போவதும் எங்களுக்கு எங்கே தெரிகிறது? மேலும் நாங்கள் அப்பொழுது ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கவில்லை. அது இருக்கட்டும். மணல் ஏரி உள்ள பிரதேசங்களில், மணலை அப்புறப்படுத்தி அவற்றைச் சீர்படுத்த நடவடிக்கைகள் துரிதமாக எடுக்க வேண்டும். கொடுத்திருக்கும் 14 யோசனைகள் நீண்டகால திட்டமாக இருக்கிறது. ராணுவத்தில் இருக்கும் இயந்திர வசதி, ஆள் வசதி இவற்றைப் பெற்று, மணலை வாரி எடுத்து நிலத்தைச் சீர்படுத்த வேண்டும். மணலை அப்புறப்படுத்துவது ஒரு பெரிய பிரச்சினை. விவசாயிகளிடத்திலேயே இந்த வேலையை விட்டாலும் அதிகப் பிரயோசனமாக இருக்காது. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் உள்ளவர்கள், தங்கள் நிலத்தில் அரை ஏக்கரில்தான் மணலைப் போட்டு மற்ற நிலத்தைச் சீரியதாகச் செய்யும் நிர்ப்பந்தம் இருக்கும். முன்பு ஏற்பட்ட வெள்ளக்காலத்தில் மண் அடித்துப்போன முத்தரசநல்லூரில், பல நாட்களாக மணல்

[Sri M. Kalyanasundaram] [18th September 1961

அடித்துப்போன நிலங்கள் சீர்படுத்தப்படவில்லை. இரண்டாவது யுத்தம் ஆரம்பித்த பிறகுதான் உணவு உற்பத்தியை உத்தேசித்து அதைச் சரிப்படுத்தினார்கள். பத்து ஏக்கர் நிலம் உள்ளவர்கள்கூட, 5 ஏக்கர் மணலை எடுத்து மற்ற 5 ஏக்கரில் போட்டு நஷ்டப்பட்டிருக்கிறார்கள். அப்படி இப்பொழுதும் விட்டுவிடாமல், மணலை வாரி எடுத்து அப்புறப்படுத்தி ஒவ்வொரு ஏக்கர் நிலத்தையும் உடனடியாக சாகுபடிக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்யவேண்டும். அம்மாதிரிச் செய்யக்கூடிய வசதிகள் சர்க்காருக்கு இருக்கிறது என்ற காரணத்தினால், இதைச் சொல்லுகிறேன். ராணுவத்தை உபயோகித்து கோவிலடி உடைப்பைத் தடுத்ததைவிட துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இம்மாதிரிச் செய்வதில் சிறிய விவசாயிகளுக்குக் கடன் முதலிய வசதிகளும் கொடுத்து வேண்டியதைச் செய்ய வேண்டும். சிறு நிலச்சுவாந்தார்கள், குடியானவர்கள் பெருத்த நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு விதை பெறும் வசதியில்லை. திருச்சி ஜில்லாவில் எனக்குத் தெரியும், பல விவசாயிகளுக்கு நல்ல விதை தேவைப்படுகிறது. இன்னும் கடன் வசதிகளையும் கொடுத்து, அந்தக் கடனைச் சுலபமாகத் திருப்பித் தரக்கூடிய ஏற்பாட்டையும் செய்தாக வேண்டும்.

இனி இவ்வாறு எவ்வளவு வெள்ளம் வந்தாலும் அதைச் சமாளிக்கக் கூடிய ஏற்பாடுகள் தேவை. நமக்கு இருக்கும் நிலப் பரப்பு எவ்வளவு என்று தெரியும். தென்மேற்கு பருவ காலத்தில் எவ்வளவு மழை பெய்துவிடும் என்றும் சொல்லலாம். காவிரியில் கிட்டத்தட்ட 10,000 சதுர மைலுக்கு இருக்கும். இந்த பத்தாயிரம் சதுர மைலில் எவ்வளவு மழை பெய்யும். அறுபது அல்லது ஐம்பது நாளும் இருபத்தி நாலு மணி நேரமும் மழை பெய்தாலும்கூட ஒரேயடியாக வெள்ளம் வந்து விடும் என்று சொல்வதற்கில்லை. அதற்கு ஒரு லிமிட் உண்டு, லிமிட் கிடையாது என்று சொல்வதற்கு இல்லை. கட்டுப்படுத்த முடியாத அளவில் பிரளயம் வந்து விடாது, வந்து விடப்போவதில்லை. ஆகவே அந்த அளவில் முன் கூட்டியே திட்டம் போட்டு அதைக் காவந்து பண்ணுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி திட்டமிடவும் முடியும். அதற்கு அந்த இலாகா கவனம் செலுத்த வேண்டும். துரதிருஷ்டவசமாக அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI M. A. MUTHIAH CHETTIAR : கனம் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட சேதத்தைப்பற்றி எனக்கு முன் பேசிய கனம் கலியாணசுந்தரம் அவர்கள் விரிவாகச் சொல்லி விட்டார். எல்லாவற்றையும் அவர் பேசி விட்டதால் அதைவிட அதிகமாக பேசுவதற்கு அவ்வளவாக இல்லை. ஆனால் மற்றவர்களும் அதிகமாகப் பேசாமல் இருப்பதற்கும் சிரமம்தான். இருந்தபோதிலும் வெள்ளத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். மைசூர் அரசாங்கத்திலுள்ள பி.டபிள்யூ.டி. உத்யோகஸ்தர்களும், நம்முடைய உத்யோகஸ்தர்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கை

18th September 1961] [Sri M. A. Muthiah Chettiar]

களைப்பற்றி கூறத்தான் வேண்டும். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டு பெருமைப்படத்தான் வேண்டும். ஆனால் சில விஷயங்களில் மைசூர் அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கத்தின் மீது பொருமையாகக்கூட இருந்திருக்கலாம். அதன் காரணமாக தகுந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். ஆகவே இனிமேலாவது அப்படி நடவாமல் இருக்க இங்குள்ள ஸ்பெஷல் டிவிஷனல் இஞ்சினியர் அவர்களும் சூப்ரண்டண்டிங் இஞ்சினியர் அவர்களும் இப்படி பெரிய உத்யோகஸ்தர்கள் எல்லோரும் சேர்ந்து இதைப்பற்றி விரிவாக விவாதம் செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி அவர்கள் விவாதம் நடத்தி ஒரு முடிவுக்கு வந்தால் அதற்கு இனிமேல் பரிகாரம் காணலாம். இனிமேல் இப்படிப்பட்ட வெள்ளம் வராமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளலாம். இப்பொழுது ஏதோ அகஸ்மாத்தாக வெள்ளம் ஏற்பட்டுவிட்டது. இனிமேல் அப்படி வராமல் தடுத்துக் கொள்ளவேண்டும். (ஸ்ரீ எம். கலியாணசுந்தரம்: அகஸ்மாத்தாக ஏற்படவில்லை). தண்ணீரைத் திறந்து விட்டார்கள். அதிகப்படியான சேதம் ஏற்படாமல் நடவடிக்கை எடுத்துக்கொண்டதற்கு அங்கு வேலை செய்த உத்யோகஸ்தர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. வெள்ளம் ஏற்பட்டதன் காரணமாக பெரிய சேதம் ஏற்படாமல் தடுத்ததற்கு அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பெரிய சேதம் ஏற்படக்கூடிய நிலைமையை சமாளித்திருக்கிறார்கள். அதற்காக நாம் மராமத்து இலாகா உத்யோகஸ்தர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. இதே சட்டசபையில் சுமார் பத்து வருஷ காலமாக பல தடவை சொல்லிக் கொண்டேதான் வருகிறோம். அதாவது காவேரி ஆற்றில், மேட்டூர் அணையுடன் இன்னும்கூட அதிகப்படியாக இரண்டொரு அணைகளைக் கட்ட வேண்டும் என்று. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதற்காக டில்லி அரசாங்கத்துடன் இந்த அரசாங்கம் வாதாடி வற்புறுத்தி அதற்கு வேண்டிய பணத்தை வாங்கி வந்து அதிகப்படியான இரண்டொரு அணைகளைக் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். அங்கு இதைப்பற்றி அதிகப்படியாக வற்புறுத்திச் சொல்லவேண்டும். நடந்த இரண்டு ஐந்தாண்டு திட்ட காலங்களில் எவ்வளவோ பெரிய வேலைகளைச் செய்திருக்கிறார்கள். நானூறு, ஐந்நூறு கோடி ரூபாய்களைச் செலவு செய்து பல திட்டங்களை செய்திருக்கிறார்கள். அவற்றுடன் காவிரி ஆற்றின் திட்டத்தையும் எடுத்துக்கொண்டு நடத்தி இருக்க வேண்டும். இந்த விவாதத்திற்கு கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியதில்லை. பதில் சொல்லும்போது நான் டில்லி சென்று அங்கேயே உட்கார்ந்து கொண்டு டில்லி அரசாங்கத்துடன் வாதாடி அதிகப்படியாக பத்து கோடி ரூபாய் வாங்கி வந்து காவிரி ஆற்றின் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுகிறேன் என்று பதில் சொன்னால் போதுமானது. இப்பொழுது வெள்ளம் ஏற்பட்டதைக் காட்டி இப்பொழுது அதை வைத்துக்கொண்டு காவிரி ஆற்றில் இன்னும் இரண்டு அணைகளைக் கட்டுவதற்கு பணத்தை வாங்கி வருவதற்கு நடவடிக்கை

எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கவேண்டும். ஏற்கெனவே இதற்கு என்று இரண்டு திட்டங்களைப் பற்றி சொல்லி வந்திருக்கிறோம். அதாவது ஹோக்கனகல், ஜாடார்பாளையம் அணைக்கட்டு திட்டங்களைப்பற்றி சொல்லிக்கொண்டு வந்திருக்கிறோம். இங்கு உட்கார்ந்து கொண்டு பேச வேண்டியதில்லை. பேசிப் பேசி பயனில்லை. உடனடியாக டில்லிக்குச் சென்று பணத்தை வாங்கி வந்து திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். வாட்டர் போர்டு கமிஷன் நடக்கிறது. இப்பொழுதே சுடச்சுட அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்குத் தெரியும் இதன் அவசியம். அதனால் இதற்கு இப்பொழுது பணம் கொடுத்து விடுவார்கள். கனம் அமைச்சர் அங்கு சென்று உட்கார்ந்து பணத்தை வாங்கிக் கொண்டு வரவேண்டும். அதையும் வாங்கி வந்து டிசம்பர் மாதத்திற்குள்ளாகவே அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். முதுகுளத்தூரில் கலவரம் நடந்த போது அங்கு ரோடுகள் போட வேண்டும் என்றும் இன்னும் மற்ற சீர்திருத்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொன்னோம். அங்கு இன்னும் தகுந்தபடி போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவில்லை.

THE HON. SRI P. KAKKAN : முதுகுளத்தூரில் நல்ல போக்குவரத்து வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. பணத்தைக் கொட்டி அங்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அது கனம் அங்கத்தினருக்கே நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன்.

* SRI M. A. MUTHIAH CHETTIAR : கொஞ்சம் ரோடுகள் போட்டிருக்கிறார்கள். பரமக்குடியில் போட்டிருக்கிறார்கள். ஆகவே பொதுவாக இந்த ஆண்டுக்குள் காவிரி ஆற்றின் மத்தியில் இன்னும் அதிகப்படியாக இரண்டு அணைக்கட்டுகளைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பற்றி பேசுவதற்கு இன்னும் இடம் இல்லை. எவ்வளவோ பேசியாகி விட்டது. காவிரிக்கு அணைகள் கட்டுவதற்கு மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் இல்லை என்று சொல்லக்கூடாது. மூன்றாவது திட்டத்தில் அதை சப்ளிமெண்டரி லிஸ்டிலாவது சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் எவ்வளவோ யோசனைகளையெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். அதாவது ஐந்து மைலுக்கு கரையை உயர்த்த வேண்டும் என்றும், ஐந்து மைலுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவைகள் எல்லாம் சிறிய வேலைகள். இன்னும் அணைகள் கட்டுவது போன்று பெரிய விஷயங்கள் இருக்கின்றன. பாசனம் சம்பந்தமாக எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று சொல்லப்படுகிறது. காவிரியில் அணை கட்டுவது போன்ற பல பெரிய திட்டங்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. புதுக்கோட்டையிலும், இராமனாத

18th September 1961] [Sri M. A. Muthiah Chettiar]

புரத்திலும் நான்கு வருஷங்களுக்கு ஒரு தடவை மழை இல்லாமல் இருக்கிறது. அதேபோன்று மைசூரில் நான்கு வருஷங்களுக்கு ஒரு தடவை வெள்ளம் ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டையும் நிவர்த்தி செய்ய தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மைசூர் அரசாங்கத்துடன் கலந்து கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த முறையில் புதுக்கோட்டை, அரந்தாங்கி பகுதிகளுக்கு பாசன வசதி செய்துகொடுக்கலாம். இதைப்பற்றி சுமார் பத்து வருஷ காலமாக சொல்லப்பட்டு வருகிறது. இதைப்பற்றி டில்லியில் போய் உட்கார்ந்து கொண்டு திட்டத்திற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். நமது பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் அங்கு இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடாது. அவர்கள் அங்கு இருந்து பிரயோசனம் இல்லை என்று தான் சொல்லவேண்டும். இது சாதாரண விஷயம்தான். அன்று ஸர் சி. பி. இராமசாமி அய்யர் மேட்டூர் திட்டத்திற்கு என்று ஆறு கோடி ரூபாய் வாங்கி வந்தார். அன்று இருந்தது அன்னிய ஆட்சி. அந்த ஆறு கோடி ரூபாய் இப்பொழுது அறுபது கோடி ரூபாய்க்குச் சமம். ஆகவே அதை வாங்கி வந்து செலவு செய்ய வேண்டும். லிக்னைட் ப்ராஜெக்ட் என்றும், பக்ராநங்கல் ப்ராஜெக்ட் என்றும் சேதுசமுத்திர ப்ராஜெக்ட் என்றும் சொல்லுகிறார்கள். இன்னும் 100 அல்லது 200 கோடி ரூபாய் இண்டஸ்ட்ரியல் டெவலப்மெண்டுக்கு என்று சொல்லுகிறார்கள். அதெல்லாம் வேறு விஷயம். இர்ரிகேஷன் சம்பந்தமாக இது ஒரு பெரிய விஷயம். இன்னும் பல ஜில்லாக்களிலும் பல தாலூகாக்களிலும் பல சிறிய சிறிய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றுவதற்கு இருக்கின்றன. எல்லா திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு விட்டன என்று சொல்லிவிட முடியாது. பல ஜில்லாக்களில் மழை பெய்கிறது. மலைகள் இருக்கின்றன. தண்ணீர் எல்லாம் போய் விடுகிறது. அதைத் தேக்கி வைத்து பாசனத்திற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வதெல்லாம் சிறிய விஷயங்கள். அதனால் பத்தாயிரம் அல்லது ஐயாயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதி கிடைக்கலாம். பாசன திட்டங்கள் எல்லாம் தமிழ் நாட்டில் முடிந்துவிட்டன என்று சொல்வதெல்லாம் தவறான அபிப்பிராயம். ஆகவே இப்படிப்பட்ட சிறிய பாசன திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. அவைகளுக்கும் கவனம் செலுத்தவேண்டும். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு காவிரியில் அதிகப்படியான இன்னும் இரண்டு அணைகளைக் கட்டுவதற்கு டில்லி சர்க்காரை அணுகி பணம் வாங்கிவரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri N. S. RAMALINGAM): I fix a time-limit of ten minutes for each hon. Member. Sri R Srinivasa Iyer may now speak.

* Sri R. SRINIVASA IYER: கனம் தலைவர் அவர்களே, இந்தப் பிரேரேபணையைப் பிரேரேபித்தவருக்கு ஏறக்குறைய 45 நிமிடங்கள் அவகாசம் கொடுத்துவிட்டு, அதன் பிறகு பேசுகிற எனக்கும் மற்றவர்களுக்கும் பத்து நிமிடங்கள் கொடுக்கப்படு

[Sri R. Srinivasa Iyer] [18th September 1961

கிறது. இது போதாது. அதனால் அவசியம் ஏற்பட்டால் அதிகப் படியாக ஒன்றிரண்டு நிமிஷங்கள் கொடுக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன்:

பொதுவாக இந்தப் பிரச்னையின்மீது பேசும்போது, சர்க்கார்த் துறையில் அமைச்சர்களும், ஹைவேஸ் இன்ஜினியர்களும், பாய்ச்சல் துறை இஞ்சினியர்களும், தஞ்சை, திருச்சி ஜில்லாக் கலெக்டர்களும், இன்னும் வேறு துறைகளில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களும் அதிகாரிகளும் செய்திருக்கிற நல்ல சேவையை முதலில் பாராட்டாமல் இருக்க முடியாது. அவர்களுக்கு நாமெல்லோரும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அதை ஒருவரும் மறந்துவிடக்கூடாது. பெரிய அளவிற்கு, நாம் எதிர்பார்த்த அளவிற்கு அப்பாற்பட்டு வெள்ளம் வந்திருக்கிறது. இவ்வளவு வெள்ளம் வந்தும்கூட, ஒருவரும் இறக்காமல், கால்நடைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படாமல் பார்த்துக் கொண்டதற்கும் அவர்களை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. (குறுக்கீடு) எனக்கு இருப்பது பத்து நிமிஷங்கள்தான். அதற்குள் குறுக்கே பேசவேண்டாம். குறுக்கே, குறுக்கே பேசி என்னுடைய அவகாசத்தைக் குறைத்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(Deputy Speaker in the Chair.)

எனக்குத் தெரிந்த வரையில் பேசுகிறேன். அதில் குறுக்கே பேசுவது தவறு. அது சபையின் சட்டத்திற்கு விரோதமானது. சட்டசபையின் விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஏதோ ஒரு காரணத்திற்காக மராமத்து இலாகாவின் மீது குறை சொல்வது சரியல்ல. செய்திருக்கக்கூடிய வேலையைக் கண்டு பாராட்ட வேண்டும். அதை விட்டுவிட்டு, மற்றவைகளையெல்லாம் சொல்வது சரியல்ல.

1-00 p.m. முக்கியமாக இதில் கவனிக்கவேண்டியது என்ன ? தண்ணீர்ப் பற்றுக் குறைவினால் 1961-ம் வருஷம் ஜூன் மாதம் 12-ம் தேதியில் வழக்கம்போல் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிடவில்லை. அப்பொழுது தண்ணீர் குறைவாக இருந்தது. அதனால் ஜூன் மாதம் 12-ந் தேதி திறந்துவிடாமல் 19-ந் தேதி திறந்துவிடப்பட்டது. 19-ந் தேதி திறந்து விட்டால் அந்த மாத இறுதியில்தான் தஞ்சை ஜில்லாவிற்குத் தண்ணீர் வரும். ஜூலை முதல் வாரத்தில் வெள்ளம் உடைப்பு. அப்பொழுது எவ்வளவு ஏக்கரில் குறுவை நாற்று விடப்பட்டிருந்தது, எவ்வளவு ஏக்கரில் நாற்று நட்டிருந்தார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அதிருஷ்டவசமாக இந்த வெள்ளம் முன்கூட்டியே வந்து விட்டது. நடவு ஆவதற்கு முன்னதாகவே வந்துவிட்டது. அது தஞ்சை ஜில்லாவாசிகளின் அதிருஷ்டம் என்றே சொல்லலாம். இல்லாவிட்டால் காலப்பிற்பாடாக வெள்ளம் வந்திருந்தால், குறுவை நடவு, சம்பா நடவு அத்தனையும் அதோ கதியாகி, இரண்டு மகசூல்களும் குட்டிச் சுவராகியிருக்கும். பஞ்சம் இந்த ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கும்.

18th September 1961] [Sri R. Srinivasa Iyer]

ஒரு சிறிய விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். 1961-ம் வருஷம் ஜூன் மாதம் 28-ம் தேதியிலிருந்து மழை பெய்து விட்டது. 'உடனடியாகத் தொடர்ச்சியாக மழை பெய்தாலுங் கூட, இதை எதிர்த்திருக்கலாம், எச்சரிக்கை செய்திருக்கலாம், என்று கூறப்பட்டது—குறைவாக நேரம் கொடுத்திருப்பதால் சில வார்த்தைகள் மட்டுமே சொல்ல விரும்புகிறேன்—சில வருஷங் களுக்கு முன் இரண்டு மணி நேரத்தில் ஒரு 'க்ளௌட் பர்ஸ்ட்' ஏற்பட்டு, பட்டுக் கோட்டையிலே பெரு வெள்ளம் ஏற்பட்டு, ரயில் பாதையே உடைந்து, ரயில் விழுந்து விட்டது. இதை எல்லாம் கட்டுப்படுத்த முடியுமா? எதிர்பார்க்க முடியுமா? முடியாது. ஓரளவுதான் எதிர்பார்க்க முடியும்.

கிருஷ்ணராஜ சாகரத்திலிருந்து 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 2-ம் தேதியில் 63,000 கன அடிதான் தண்ணீர் வெளியே விடப் பட்டது. அன்றிரவு 11 மணிக்கு 115,000 கன அடித் தண்ணீர் வெளியே விடப்பட்டது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 3-ம் தேதியில் 170,000 கன அடித் தண்ணீர் விடப்பட்டது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ம் தேதி அன்று 180,000 கன அடித் தண்ணீர் விடப்பட்டது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 5-ம் தேதி அன்று 190,000 கன அடித் தண்ணீர் விடப்பட்டது. கிருஷ்ணராஜசாகரத்திற்குக் கீழாக கபினி ஆற்றுத் தண்ணீர் வருகிறது. மேட்டூர் அணைக்குக் கீழாகவும் பல நதிகள் வருகின் றன. அவற்றின் தண்ணீரெல்லாம் கீழே வருகிறது. காவிரி, வெண்ணாறு, ஜி.ஏ. கனல் மூன்றும் சேர்ந்து 26 ஆயிரம் கன அடித் தண்ணீர்தான் கொள்ளும். புள்ளம்பாடி, கட்டளை கால் வாய்கள் 200 கன அடி வீதம் தண்ணீர் கொள்ளும். "ஆடிக் காற்றில் அம்மி பறக்கும்போது, பஞ்சு என்ன கதி" என்று கேட்டதாம். அந்த முறையில் அபரிமிதமான, எதிர்பாராத வெள்ளம் வந்தபோது இந்த ஆறுகளைத் திறந்துவிட்டால் போதுமா? இந்த நிலையில் அதிகாரிகள் சரியான முறையில், உடனடியாக வேலை பார்த்தார்கள் என்றுதான் கருதவேண்டும்.

1961-ம் வருஷம் ஜூலை மாதம் 5-ம் தேதியிலே, ஏராளமான தண்ணீர் வருகிறது. மேட்டூரிலே ஏராளமான 'சர்ப்ளஸ்' விட வேண்டியிருக்கிறது. நூற்று ஐந்து அடிக்கு மேல் வந்தால்தான் எல்லிஸ் ஸாடிலில் உபரி தண்ணீர் விட முடியும். மேட்டூர் அணையின் முழு லெவல் 120-இல் இருக்கிறது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 3-ம் தேதியில் 89·75 அடிதான் மேட்டூரில் இருந்தது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ம் தேதியில் 105 அடிதான் இருந்தது. 1961-ம் வருஷம் ஜூலை மாதம் 4-ம் தேதிக்குப் பிறகு தண்ணீரைத் தேக்காமல், தண்ணீரை ஸ்லூயிஸ்ஸில் விட்டாலும் எவ்வளவு விட முடியும்? எல்லிஸ் ஸாடிலில் எவ்வளவு விட முடியுமோ அவ்வளவு விடப்பட்டிருக்கிறது. வெள்ள எச்சரிக்கை தெரிந்ததும், திருச்சி சூபரின்டெண்டிங் இன்ஜினீயர் அவர்கள் மேட்டூரில் இருந்து கொண்டு, இரவு பகலாக இருந்து, எவ்வளவு தண்ணீர் காபந் துக்கு பாதகம் இல்லாமல் விட முடியுமோ அந்த அளவு விட்டிருக் கிறார்கள்.

[Sri R. Srinivasa Iyer] [18th September 1961

இதிலே சிலர் பொய்ப் பீதியைக் கிளப்பி விட்டு விடுகிருர்கள். ஏராளமாகத் தண்ணீர் விட்டுவிட்டார்கள் என்று நினைத்துக் கொண்டு, ரோடுகளை எவ்வளவோ இடங்களில் எத்தனையோ பேர்கள் உடைத்து விட்டிருக்கிருர்கள். **man-made breaches** அதிகம் ஏற்பட்டன. இதையெல்லாம் யார் எதிர்பார்த்து என்ன செய்ய முடியும்? இதற்காக ஒரு கமிட்டி நியமிக்க வேண்டும் என்று பல பேர் பலவிதமாகச் சொல்லுகிருர்கள். நம் ராஜ்யத்தில் இருக்கும் இன்ஜினீயர்கள் உலகப் பிரசித்தி பெற்ற இன்ஜினீயர்கள். இவர்கள் செய்வதைப் பார்க்கிலும், இவர்களுக்கு மேற்கொண்டு தனிக்கமிட்டி தேவை இல்லை. இந்தத் தீர்மானத்தைப் பார்த்தால், ஏதோ அதிகாரிகள் சரியாகக் காரியங்கள் நடத்தவில்லை என்று தொனிக்கும்படியாக இருக்கிறது. சந்தர்ப்பம் எப்படிப்பட்டது? இந்தச் சந்தர்ப்பத்திலே அவர்கள் வேகமாக, துரிதமாக, நல்ல முறையிலே வேலை செய்திருக்கிருர்களே என்று அவர்களை நாம் பாராட்ட வேண்டாமா?

இம்மாதிரி வெள்ளம் இனிமேல் வராமல் தடுக்க வேண்டியது தான். அதற்கெல்லாம், 'எக்ஸ்பர்ட் ஒபினியன்' தேவை. 1931-ம் வருஷத்திலே பிரதம இன்ஜினீயராக மிஸ்டர் ஹார்ட் என்பவர் இருந்தார். 'மேட்டூர் அணை உடைந்தால் என்ன கதி?' என்று கேட்டதற்கு, 'எட்டு அடித் தண்ணீர் பட்டுக்கோட்டையில் ஓடும்' என்று சொன்னர். மேட்டூரில் தேக்கி வைப்பதை 120-லிருந்து 130 அடிக்கு உயர்த்திஞல் என்ன ஆகும்? இருபத்தைந்து வருஷம் ஆச்சே அந்த அணையைக் கட்டி! இதெல்லாம் நிபுணர்கள் பார்க்கவேண்டிய வேலை. எப்படிக் கட்டுப்பாடு பண்ணலாம் என்றெல்லாம் ஆராய வேண்டியது நிபுணர்களின் வேலை. இனி மேல் வெள்ளம் வந்தால் என்ன செய்யலாம், வரும் வெள்ளத்தை எப்படிக் கட்டுப்படுத்தலாம் என்று இப்பொழுது இருக்கும் இன்ஜினீயர்களும் ஆராயவேண்டும். இன்னும் காவிரிப் பாசனத்தில் ரொம்ப நாளாக அனுபவம் உள்ள இன்ஜினீயர்களும் நம் சர்க்கார் சேவையில் இருக்கிருர்கள்—ஆந்திரா மற்றும் பல இடங்களிலும் இருக்கிருர்கள். திரு கே. வி. ஏகாம்பரம் அவர்களும், ரிடையர்டு பிரதம இன்ஜினீயர் திரு. ஏ. ஆர். வெங்கடாச்சாரி அவர்களும் இன்னும் பல இஞ்சினீயர்களும் இருக்கிருர்கள். ஆகையால், கமிட்டி தேவையில்லை. இவர்கள் ஆலோசனை செய்து முடிவு செய்யலாம்.

இனி, என்ன நிவாரணம் பண்ணப்போகிறேம் என்று சர்க்கார் அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே நான் குறை கூறவில்லை. அனுபவம் இல்லாத என்போன்றவர்கள் இன்னதான் செய்யவேண்டுமென்று சொல்வது தவறு. ஆனல், தஞ்சை, திருச்சி ஜில்லா வாசிகளுக்கு இந்த வெள்ளம் ஒரு படிப்பினையும், எச்சரிக்கையும் ஆகும். இவர்களுக்குள்ளே ஒற்றுமை கிடையாது. ஒவ்வொருவரும் அவரவர் இஷ்டம்போல் சொல்வது என்று வரக்கூடாது. ஒற்றுமையாக இருந்து ஆலோசனை சொல்லவேண்டும். இந்த இரண்டு ஜில்லாக்களிலும்

18th September 1961] [Sri R. Srinivasa Iyer]

பாசனம் இல்லாத தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. புதுக்கோட்டைப் பிராந்தியத்திற்கு ஜி.ஏ. கனலைக் கொண்டு போய், புதுக்கோட்டை வழியாக அரந்தாங்கிக்குக் கொண்டு போகலாம். ஏற்கனவே திட்டம் அப்படித்தான் வகுக்கப்பட்டது. துரதிருஷ்டவசமாக அப்பொழுதிருந்த புதுக்கோட்டை ராஜா அவர்கள் வழிவிட மறுத்துவிட்டார்கள். அதையே இப்பொழுதும் ஏற்பாடு செய்யலாம். அந்த முயற்சி வேண்டாமென்று சொன்னால், கட்டளை வாய்க்காலை அகலப்படுத்தி ஜாஸ்தி தண்ணீர் கொண்டு போகலாம். நம் ராஜ்யத்தில் எவ்வளவு உபயோகப் படுத்த முடியுமோ அவ்வளவு உபயோகப்படுத்துவதைவிட்டு வரக் கூடிய உபரி தண்ணீரை ஏன் கொள்ளிடத்தில் விட்டு சமுத்திரத் திற்கு விடவேண்டும்?

இன்னும் எங்கள் கதி எப்படி இருக்கிறதென்றால், "ஆறு கரை புரண்டு போனாலும், நாய் நக்கித்தான் குடிக்கவேண்டும்" என்று சொல்வது போல, பட்டுக்கோட்டை, அரந்தாங்கி தாலுகாக்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஊசித் தொண்டையும் தாழி வயறும் என்று சொல்வார்கள். அந்தப்படி ஜி.ஏ. கனல் சிஸ்டத் துக்கு பாய்ச்சலுக்கு 73 ட்யூடி என்று போட்டிருக்கிறது. பழைய டெல்டாவில் 50 ட்யூடி, அதாவது பழைய டெல்டாவில் 50 ஏக்க ருக்குப் பாய்ச்சும் தண்ணீர் எங்கள் பகுதியில் 73 ஏக்கருக்குப் பாயவேண்டியிருக்கிறது. பழைய டெல்டாவில் தண்ணீர் வந்தால், 15 நாளைக்குத் தண்ணீர் தங்கும். ஆனால் எங்கள் பகுதி யில் ஒருநாள்தான் தங்கும். அதற்கு மேல் மறுபடியும் தண்ணீர் பாயவேண்டும். இம்மாதிரி தண்ணீர் கொடுத்தும் மேட்டுப் பாங்கில், முதல் மடையிலே இருப்பவர்கள் ஜாஸ்தி தண்ணீரை எடுத்துக்கொண்டு போய் குறுவை அறுப்பு அறுக்கும் காலத்தில், கடைசி மடை பாசன ஏரியாவில் இப்பொழுதுதான் சம்பா நாற்று விட்டுக்கொண்டிருக்கிறோம். தண்ணீர் வருவதைத்தானே இன்ஜினீர்கள் கொடுப்பார்கள்.

மேட்டூர் அணை கட்டும் காலத்தில் ஜி.ஏ. கனல் பகுதிக்கு 301,000 ஏக்கருக்கும் பாசனம் ஏற்படவேண்டுமென்று திட்டம் போட்டார்கள். அதற்குள்ள தண்ணீரை மட்டும் கொள்வதற்கு ஹெட் ஸ்லூயிஸ் கட்டினார்கள். பெரிய வெள்ளம் வந்தால், அது பத்து வருஷத்திற்கு ஒரு தடவையோ 50 வருஷத்திற்கு ஒரு தடவையோ எப்பொழுது வந்தாலும், வரும் தண்ணீரை ஜாஸ்தி யாக விடுவதற்கு அதிகமாக இதில் ஒரு கண்கூட விடவில்லை. அந்த முறையிலே கொஞ்சமாக கணக்கு எடுத்து, இதையும் தலைப்பி லேயே ஒரு வளைவு வைத்து, கால்வாய் வெட்டியிருக்கிறார்கள். அதனால் தலைப்பில் மணல் தூர்ந்து போய்விட்டது. நாலரை லட்சம் ரூபாய் செலவு செய்து மணலை எடுத்தார்கள். ஆனால் இவ் வருஷம் பூராவும் மண் வந்து ரொம்பிவிட்டது. ஜி.ஏ. கனலின் ஹெட்டை பழைய வெண்ணார் ஹெட்டிலே கொண்டுபோய் வைத்து, இன்னும் நான்கு கண்கள்கூட வைத்து கட்டி இருக்க வேண்டும். அதை இப்போதாவது உடனடியாகச் செய்ய

[Sri R. Srinivasa Iyer] [18th September 1961

வேண்டும். வெள்ள நிவாரண வழிகள் 1921-ம் வருஷத்திய காவேரி கமிட்டி ரிப்போர்ட்டிலே இருக்கிறது. இருக்கும் ஆறுகளை ஆழப்படுத்தி கரைகளைப் பலப்படுத்தி உயர்த்தி ஆக வேண்டும். புது வாய்க்கால்களும் ஏற்படுத்தலாம். எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் இதற்கு ஒரு வழி வகுக்க வேண்டும். இது தான் இன்ஜினீயருடைய கவனத்திற்கு, எக்ஸ்பெர்ட்டினுடைய கவனத்திற்கு விடப்படவேண்டும்.

1924-ம் வருஷ அக்ரிமென்டை 1974-ம் வருஷத்திற்குள்ளாக மாற்றியமைக்க நாம் இடம் கொடுக்கக்கூடாது. இன்றைக்கு ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று நாம் சொல்ல ஆரம்பித்தால், அதற்கு மைசூர் அரசாங்கத்தார் தயாராயிருப்பார்கள். அது தான் அவர்களுடைய முயற்சி. சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு பெரிய இன்ஜினீயர்—டாக்டர் பட்டம் வாங்கியவர்—'இன்டர் நாஷனல் லா ஆப் வாட்டர்ஸ்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். மேல் இருப்பவன் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், ஆனால், அக்ரிமென்ட் இருந்தால் அதன்படிதான் செய்யலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். 1892-ம் வருஷ, 1924-ம் வருஷத்திய இரண்டு அக்ரிமெண்டையும் மீறிக்கூட இருக்கிறார்கள் மைசூர் அரசாங்கத்தார் என்று நான் ஒரு ரிப்போர்ட் எழுதியிருக்கிறேன். அந்த இடத்திற்கே நான் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். மைசூரில் நமக்காக ஒரு எக்ஸிக்யூடிவ் என்ஜினீயரோ, ஸப்டிவிஷனல் ஆபீசரோ இருந்தால் மட்டும் பிரயோஜனம் இல்லை. அங்கு நல்ல முறையில் கண்காணிக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும், தஞ்சை, திருச்சி ஜில்லாவின் பாசனத்திற்குக் குந்தகம் விளையும் வகையில் 1924-ம் ஆண்டு அக்ரிமென்டைத் திருத்தியமைக்கக் கூடாது. 1974-ம் வருஷத்தில் அதைப் பற்றிப் பார்த்துக் கொள்ளலாம். 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று சொல்வார்கள். ஆனதால் இந்த ஒரு வெள்ளத்தை வைத்துக்கொண்டு அவசரப்பட்டு ஒரு முடிவும் செய்யக்கூடாது. ஐம்பது வருஷங்களுக்கு ஒரு தடவைதானே வெள்ளம் வருகிறது? அதை ஒரு காரணமாகக் கொண்டு, இங்கே கொடுக்கலாம் தண்ணீர், அங்கே கொடுக்கலாம் தண்ணீர் என்று சொல்லி தற்போது இருக்கும் நீர்ப்பாசனத்தைக் கெடுத்துவிடக்கூடாது. மேட்டுக் காலிலே தண்ணீரைப் பிரித்துவிட்டு விட்டு, பிறகு காவிரி, திருச்சி, தஞ்சை ஜில்லாவிலே வரும்போது ஜலமே இல்லாமல் காவேரி ஆற்றை பாலாறுபோல் ஆக்கிவிடக்கூடாது. (கனம் வி. ராமையா : சமுத்திரத்தில் விடுவதா?) உபரியாகக் கடலிலே விழக்கூடிய தண்ணீரை உபயோகப்படுத்த வேண்டுமென்றும், 50 வருஷங்களுக்கு சராசரிக் கணக்கு எடுத்து, அதை எந்த எந்த வழியிலே பிரயோஜனப்படுத்தவேண்டுமோ அப்படிச் செய்யவேண்டும் என்றுதான் சொல்லுகிறேன். அதற்காக கொள்ளிடத்திலே போய், சமுத்திரத்திலே விட்டுவிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. 1924-ம் வருஷ அக்ரிமெண்டின்படி மைசூரில் 5 அணைகள் கட்டலாம், 5 அணைகளும் சேர்ந்து ஓர்

18th September 1961] [Sri R. Srinivasa Iyer]

குறிப்பிட்ட அளவுக்குத்தான் கட்டலாம். அதைப்பற்றி ஜாஸ்தி விவாதிக்க வேண்டாமென்று நிதி அமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார். இரண்டு சர்க்காருக்கும் உள்ள சுமுகமான உறவைக் கெடுக்க நான் தயாராயில்லை. ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று மட்டும் சொல்கிறேன். இப்பொழுது கமிட்டியிலே இதை வைத்து, அவசரத்திற்காக ஒரு காரியத்தைச் செய்துவிடக் கூடாது.

ஆனால், அதே நேரத்தில் வெள்ள நிவாரணத்திற்காக என்ன என்ன திட்டங்கள் வகுப்பதாக இந்தப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளைத் துரிதமாகச் செய்யவேண்டும். இரண்டாயிரம் வருஷங்களாகப் பால் கறந்து கொடுத்த பசுமாடு போன்றது காவிரி. அதை நன்றாகப் பராமரிக்க வேண்டும். அதன் கரைகளை உயர்த்தவேண்டும். ஆற்றை ஆழப்படுத்த வேண்டும். இதுபற்றி 1959-60-ம் வருத்திய எஸ்டிமேட் கமிட்டி ரிப்போர்ட்டில் 101-வது பாராவில் " ஆறுகளைச் சரியாகப் பராமரிக்காவிட்டால், 'the result will be disartrous' என்று சொல்லியிருக்கிறோம். சமீபத்தில் ஹிந்து பேப்பரில்கூட எழுதியிருக்கிறேன். அந்த முறையில், காவிரி, வெண்ணாறு, குடமுருட்டி, அரசலாறு, வெட்டாறு, முடிகொண்டான், திருமல்ராஜன், முதலிய நதிகள் எல்லாவற்றின் கரைகளையும் பராமரித்து வலுப்படுத்த வேண்டும். மாக்ஸிமம் வாட்டர் லெவலுக்கு மேல் மூன்று அடி அதிகமாக இருக்கும்படி கரைகளை உயர்த்த வேண்டும். ஆற்றை ஆழப்படுத்தவேண்டும். கரைகளை ரோடுகளாகச் செய்துவிட்டாலும் பரவாயில்லை. நல்லது. ரோடுகளை மெட்டல் பண்ணினால் கூட நல்லது. எப்படியோ கரைகளைப் பலப்படுத்த வேண்டும். ஏராளமான தண்ணீர் வடிகிற காலத்தில் அந்தச் சமயத்திலாவது புதுக்கோட்டை தாலுகா, அரந்தாங்கி தாலுகா முதலிய இடங்களுக்குத் தண்ணீர் நிறையக் கொடுக்கலாம். அதற்காக ஜி.ஏ. கனலின் கண்களை அதிகப்படுத்த வேண்டும். ஆனால், வேறு எந்தக் காரணத்தைக் கொண்டும் தஞ்சை, திருச்சி ஜில்லாக்களில் இப்போது தண்ணீர் கிடைத்துக்கொண்டிருக்கும் பாசன விஸ்தீர்ணத்துக்கும் குந்தகம் ஏற்படும்படி செய்யக்கூடாது. தஞ்சை, திருச்சி ஜில்லா வாசிகளின் சார்பாக இந்த வேண்டுகோளை நான் சொல்லிக்கொண்டு இன்னமும் செய்யவேண்டிய காரியங்களைச் சீக்கிரம் செய்தால் நன்மைகள் ஏற்படும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. R. NALLASIVAM :** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ஆண்டு வெள்ளம் வந்த காலத்தில் என்னுடைய பகுதியைத் தவிர பாக்கியுள்ள பகுதிகளைப்பற்றி இந்த அறிக்கையில் இருந்துதான் நான் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கிறது. கோவை ஜில்லாவைப் பொருத்தவரையில் நான் 10, 15 நாட்கள் அதிகாரிகளுடன் இருந்தேன். ரெவின்யூ அதிகாரிகளும், மராமத்திலாகா அதிகாரிகளும் இந்த வெள்ள நிவாரண வேலைகளில் எந்த அளவு நல்ல முறையில் பங்கு கொள்ள முடியுமோ அந்த அளவு பங்கு கொண்டிருக்கிறார்கள். அதை

மறைக்கவோ அல்லது மாற்றிச் சொல்லவோ நான் விரும்பவில்லை. நிச்சயமாக அவர்கள் நல்ல செயலைச் செய்திருக்கிறார்கள். அதுவும் எனக்கு மிகவும் நன்றாகத் தெரியும். வெள்ளப் பகுதிகளில் உள்ள மக்களை வெளியேற்றுவது மிகமிகக் கடினம். வெள்ளம் வீட்டுக்குள் வந்துவிட்ட போதிலும்கூட இனிமேல் ஏறாது, நாங்கள் இங்கேயே இருக்கிறோம். எங்கள் வீடு வெள்ளத்தில் போகுமானால் அதோடு நாங்களும் போகிறோம் என்கிற மனப்பான்மையோடுதான் இருந்தார்கள். என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில். (கனம் ஸ்ரீ வி. ராமையா : எல்லாப் பகுதிகளிலும் அப்படித்தான்.) ஆகவே அதிகாரிகளைக் குறை சொல்ல என் மனம் ஒப்புக்கொள்ளாது. ஒரு சில குறைகளை மனதில் கொள்ளாமல் அவர்கள் செய்திருக்கும் படியான நல்ல காரியங்களை குறிப்பிட்டு பரிபூரணமாக நான் இங்கே பாராட்ட விரும்புகிறேன். ஆனால் ஒரே ஒரு குறை. அந்தச் சமயத்தில் எவ்வளவு அதிக ஊக்கமும் உற்சாகமும் காட்டினார்களோ, அது இப்பொழுது பெருமளவு குறைந்துவிட்டது. அந்த வேகம் இப்பொழுது இல்லவே இல்லை. அந்த வேகம் இருந்திருந்தால் இன்னும் சில நாட்களுக்கு முன்பாகவே இந்த விவாதம் இந்த அவையில் வந்திருக்கலாம். வெள்ள நிவாரண வேலைகளை சிறந்த முறையில் நடத்துவதற்கு உதவியாக இருந்திருக்கும். முன்பு வெள்ளத்தால் வீடு இழந்தவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்படும் என்பதாகவெல்லாம் பத்திரிகையில் வந்திருக்கிறது. ஆனால், குடிசைகளுக்குத்தான் முப்பது, நாற்பது கொடுக்கப்பட்டது. மற்றவர்களுக்கு தக்காவிக் கடன் போன்ற அடிப்படையில் கொடுக்கப்படுகிறதாகத் தெரிகிறதே தவிர வெள்ள நிவாரண அடிப்படையில் நடைபெறுவதாகத் தெரியவில்லை. சர்க்காருக்கு இதை அழுத்தந்திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆரம்பத்திலிருந்த வேகம் இப்பொழுது கிடையாது. வெள்ள சமயத்தில் இது வரையிலும் வெள்ளத்தைப் பார்க்காத ஜனங்களாக இருந்த காரணத்தினால் அதை சரியான அளவு மதிப்பிட முடியவில்லை. குறிப்பாக கண்ணம்பாடி அணையில் தண்ணீர் உயருகின்ற வேகத்தைப் பார்த்தால் கோவை மாவட்டத்தில் சில பகுதிகளில் 10 அடிக்கு மேல் தண்ணீர் வரலாம் என்று நானே பல அதிகாரிகளிடத்திலே சொல்லியிருக்கிறேன். பிறகு பார்த்தால் அது 3 அடிக்கு மேல் ஏறவில்லை. இதனால் ஜனங்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் போய்விட்டது. காட்டுப் பாளையம் என்ற இடத்தில் ஒரு தந்தி நிலையம் இருக்கிறது. அங்கே தண்ணீர் ஏறிக்கொண்டிருந்தபொழுது கொஞ்சம் மண்ணைப் போட்டால் அடைத்து விடலாம் என்று சொன்னோம். இந்த இடம் அடைபட்டால் ஊருக்கு ஆபத்து என்று லேசாக அந்த இடத்தை காலால் நெண்டிவிட்டுப் போனார்கள். இப்படி யதார்த்த நிலையோடு பார்த்தால் அதிகாரிகளை முழுக்கக் குறை சொல்ல முடியாது. கோவை ஜில்லாவைப் பொறுத்தவரையில் முன்னிருந்த மதிப்பீட்டைவிட அதிகமாகும். முன்பு ஏக்கருக்கு 100 ரூபாய் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டது. ஆனால் இப்பொழுது 500 ரூபா

15th September 1961] [Sri K. R. Nallasivam]

யிலிருந்து 1,000 ரூபாய் வரை இருக்கும். இன்னும் ஒகனக்கல், ஜாடர்பாளையம் போன்ற இடங்களில் கழிவு நீரை வெளியேற்ற கால்வாய் வெட்ட வேண்டும். வெள்ளம் வரும் காலத்தில் இப்படி வெட்டப்படுகிற கால்வாய்கள் உதவியாகக்கூட இருக்கலாம். காசிப் பாளையம் வாய்க்காலுக்கு 5, 6 லட்ச ரூபாய் செலவில் இணைப்பு வாய்க்கால்கள் போடப்பட்டிருந்தன. அவைகள் முழுக்க முழுக்கத் தூர்ந்து போய்விட்டதால் அந்த வாய்க்காலுக்கு சர்க்கார் விசேஷமாக பணம் ஒதுக்கிக்கொண்டிருக்கிறார்கள். அது என்ன காரணத்தினாலோ இங்கே குறிப்பிடப்படவில்லை. ராஜன் வாய்க்காலில் ஒரு பகுதி காவேரியோடு சேர்ந்துப் போய்விட்டது. சேலம் ஜில்லாவில் உள்ள ராஜன் வாய்க்காலும் கோயம்பத்தூர் ஜில்லாவில் இருந்து திருச்சி ஜில்லாவிற்கு வருகிறது. காசிப் பாளையம் வாய்க்காலுக்கு மீண்டும் மணல்போட்டு கரையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சிறிய வெள்ளம் வந்தாலும்கூட அவைகள் நாசம் ஆகிவிடும். ஆகையால் அவற்றை நல்லமுறையில் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். அநேக இடங்களில் மணல் மேடிட்டுப் போய்விட்டது. ஆகையால் அவர்களுக்கு 250 ரூபாய் மான்யமாகவும், 250 ரூபாய் கடனாகவும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வாழை, கரும்பு வைத்திருந்தவர்களுக்கு சேதம் ஏற்பட்டதற்கு 500 ரூபாய் மான்யமாகவும், 500 ரூபாய் கடனாகவும் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அதனால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மீண்டும் தலைத்தூக்க முடியும் என்று கூற விரும்புகிறேன்.

நஞ்சை பிரதேசத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுபடியும் நஞ்சைப் பகுதியில் இடம் கிடைப்பது கஷ்டம். ஹைவேஸுக்கு சொந்தமாக ரோட்டு ஓரங்களில் இருக்கும் நிலங்களில் 5 சென்ட், 10 சென்ட் என்று இல்லாவிட்டாலும் இரண்டு சென்டாகிலும் குடியிருப்பதற்கு ஏழை விவசாயிகளுக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும். குடியிருக்க இடம் இல்லாத விவசாயிகளுக்கு இதைக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு முன்னால் பட்டா இருந்ததா இல்லையா என்பதைப் பற்றி சர்க்கார் கவலைப்படக்கூடாது. இதை கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொண்டு நிவாரண வேலையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். முன் ஈடு உற்ற நிலங்களுக்கும் கடன் கொடுக்க வேண்டும்.

Sri P. G. KARUTHIRUMAN : ஸார், சமீபத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலைமையைக் குறித்து அறிக்கை மீது விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதில் நண்பர் கல்யாண சுந்தரம் அவர்கள் அதிக நேரம் எடுத்துக்கொண்டு பேசினார். ஸ்ரீ ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் பாராட்டுதல் தெரிவித்ததை நான் வரவேற்று சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முதன் முதலாக எங்கள் பகுதியில் இருக்கும் பவானி நதியில் இருந்துதான் எதிர்பாராத விதமாக வெள்ளம் வந்தது. எங்கோ மழை பெய்ததின் காரணமாக ஜூலை இரண்டாம் தேதி காலையில்

[Sri P. G. Karuthiruman] [18th September 1961

கீழ் பவானி அளவின் பாதி அளவுதான் தண்ணீர் இருந்தது. ஆனால் அன்றிரவு நான் ஊரிலே இருக்கும்படியான சந்தர்ப்பம் இருந்தது. 1924-ம் வருஷத்திலேதான் முதல் வெள்ளம் வந்தது. அதே மாதிரியாக 1930-ல் இன்னொரு வெள்ளம் வந்தது. அப்பொழுது கீழ்பவானி அணை கட்டப்படவில்லை. ஆனால் 1961-ம் வருஷத்தில் வந்த வெள்ளத்தினால் ஏற்பட இருந்த பல கோடிக் கணக்கான ரூபாய் நஷ்டத்தை, கீழ் பவானி அணையின் காரணமாகத் தடுக்கப்பட்டது என்பதை சந்தோஷத்துடன் சொல்ல விரும்புகிறேன். காச்மென்ட் ஏரியாவில் எவ்வளவு மழை பெய்யும் என்ற கணக்குப் போட்டு வைத்திருந்தும், இயற்கையானது செயற்கையை மீறி விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். இங்கே அதிகாரிகள், குறிப்பாக மராமத்திலாகா அதிகாரிகள், ரெவின்யூ அதிகாரிகள், பொது மக்கள், பொது ஜன சேவை செய்ய வேண்டுமென்று நினைக்கக்கூடிய ஊழியர்கள் பரிபூரணமாக ஒத்துழைத்தார்கள். நஷ்டம் ஏற்படாத வண்ணம் பாதுகாத்தார்கள், என்ற நம்பிக்கை மக்களிடத்திலே பரவியிருக்கிறது. ஒருவரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னபோதிலும் வேண்டாத மனைவி கைப்பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம் என்று சொல்லக்கூடியவர்களாகத்தான் இருக்கவேண்டும். அப்படி சொல்லக்கூடிய மாற்றுக்கட்சிக்காரர்கள் எவ்வளவு நன்மை செய்தார்கள் என்று பார்த்தால் நன்றாக சாப்பாடு போட்டதற்கு பின்னால், நல்ல அரிசி சோறு போடவில்லை என்று சொல்வது போலத்தான் சொல்கிறார்கள். தஞ்சையில் உள்ள சில நண்பர்களே இம்மாதிரி சொன்னதை நான் பார்த்தேன். வெள்ளத்தைப் பற்றி தந்தி வருவதற்கு முன்னால் தண்ணீர் வந்து கீழ்ப்பவானியில் நிரம்பி விட்டதால் எவ்வளவு வேகமாக வெள்ளம் வந்திருக்கிறது என்பதை சிந்திக்க வேண்டும். 1924-ம் வருஷத்தில் வந்த வெள்ளத்தின்போது ஒரு லட்சத்தி பத்தாயிரம் க்யூசெக்ஸ்தான் தண்ணீர் இருந்திருக்கிறது. ஆனால் சமீபத்தில் லோயர் பவானியில் சில மணி நேரத்திற்குள் ஒரு லட்சத்தி எண்பது ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்து குவிந்திருக்கிறது. இந்த அளவு தண்ணீரை தடுத்து ஓரளவு பணிபுரிந்தார்கள் என்றால் இந்த அதிகாரிகளை நாம் பாராட்டாமல் இருந்தால் பிற்காலத்தில் நம்முடைய சந்ததிகள் எப்படித்தான் செய்வார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். வெள்ளம் வந்த உடனே காலையிலே சூப்பரிடெண்டிங் என்ஜினீயர் வாய்க்காலின் மேலே நின்றுக் கொண்டிருந்தார்கள். ஜில்லா கலெக்டர் குடிசைப் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு பொது மக்கள் எல்லாம் முன்வந்தார்கள். குடிசைகள் இழந்த ஆயிரக் கணக்கான பேர்களுக்கு சாப்பாடு போடப்பட்டது; போதும் என்று சொல்லும் நிலையிலே சாப்பாடு போடப்பட்டது. அந்த அளவுக்குப் பாதுகாப்பு அளித்திருக்கிறோம் என்பதைப் பார்த்தோம். இதைவிட மிகவும் சிறப்பாக சொல்ல வேண்டுமென்றால் முதல் அமைச்சர் அவர்கள் பறந்து வந்து அந்த பாதிக்கப்பட்ட இடங்களை நேரிலே பார்த்து வேண்டிய உதவியை அளித்

18th September 1961] [Sri P. G. Karuthiruman]

தார்கள். மின்சார அமைச்சர் அவர்கள் சாப்பாடு பரிமாறினர்கள். ரெவின்யூ அமைச்சர் ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்தார்கள். மராமத்து இலாகா அமைச்சரும் அப்படியே உதவி செய்தார்கள். இதைவிட ஒரு அரசாங்கமோ, அரசாங்கப் பிரதிநிதிகளோ வேறு என்ன செய்து இருக்க முடியும்.

இந்த சூழ்நிலையில் என்ன செய்யவேண்டுமென்றால் லோயர் பவானி ஏரியில் 800 குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆயிரம் ஏக்கர் பூமி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆற்றோரங்களில் இருந்து தண்ணீர் இறைக்கும் பொருட்டு, மின்சார இலாகா, ரெவின்யூ இலாகா, மராமத்திலாகா இந்த மூன்று இலாகாக்களும் ஒத்துழைத்து மின்சார வசதி செய்து கொடுத்தால் ஏழை விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும். இதில் ஒன்றும் தாமதமில்லாமல் ஆற்றோரங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கவலை போன்றவைகளை உபயோகப்படுத்துவதற்கு உதவி செய்தால் மிகவும் நன்மை ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளம் வராதவாறு தடுப்பதற்கு பல அணைக்கட்டுகள் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். முப்பது வருஷ காலத்திற்கு ஒரு தடவை இம்மாதிரி வெள்ளம் வருகிறது. வட தேசத்தில் ஆறு பெருக்கெடுத்து இடம் மாறிக்கூட போகும் நிலையில் இருக்கிறது. ஆனால் நம் ராஜ்யத்தில் ஏதோ 30 வருஷங்களுக்கு ஒரு தடவை இம்மாதிரி நிலையை அனுபவிக்கிறோம். இது நமக்கு அதிக கஷ்டமாகத் தோன்றுகிறது. முதலில் பவானியில் அதிக சேதம் ஏற்பட்டது என்று இங்குள்ளவர்கள் நினைத்திருந்தார்கள். ஆனால் தஞ்சை ஜில்லாவிலும், திருச்சி ஜில்லாவிலும் வெள்ளத்தினால் அதிகமாக பாதிக்கப்பட்டதை நாம் பார்த்தோம். இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில் சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியானது மனித சக்தி எவ்வளவு தூரம் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்து வந்திருக்கிறது. பொது மக்கள் பிரதிநிதிகள் எவ்வளவு பணி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு பணி செய்திருக்கிறார்கள். சர்க்காரை சேர்ந்த அதிகாரிகளும், பொது ஜன ஊழியர்களும் நல்ல முறையில் பணி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாதிக்கப்பட்ட மக்களுக்கு கூடிய வரையில் நிவாரணம் அளிக்கப்பட வேண்டும், அதிலும் முக்கியமாக ஆற்றோரங்களிலே இறவை பாசனம் செய்பவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். வெள்ளத்திலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு எல்லாவிதமான உதவியும் தருவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். மனசாட்சியோடு கூடி பார்த்தால் அந்தப் பகுதியில் நடந்த வேலைகள் சிறப்பாகத்தான் இருக்கிறது. தமிழ்நாட்டின் பண்பாடு உயர்ந்து இருக்கிறது என்பதைக் குறித்து என் பாராட்டுதலை தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

[18th September 1961

DEPUTY SPEAKER : The House will now rise for lunch and meet again at 3 p.m.

The House then rose.

[After lunch—3 p.m.]

* **Sri R. SWAMINATHA MERKONDAR** : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கைமீது பங்கெடுத்துக்கொண்டு பேசுவதற்கு நான் முன் வந்திருக்கிறேன். கோவிலடி உடைப்பு என்று பத்திரிகைகளில் பிரசுரமாகி வந்திருந்தது. அதுபற்றி இந்த மன்றத்திலும் பலர் பேசுகிறார்கள். நான், அந்த பகுதியிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதி என்ற முறையில் பேசுகிறேன். எனக்கு முன் பேசிய எதிர்க்கட்சி நண்பர் ஒருவர் சொன்னார்கள், அங்கு அநேக சேதங்கள் ஏற்பட்டிருக்கிறதென்று. அந்தப் பகுதியில் உள்ள நான் சொல்கிறேன், அங்கு எந்தவிதமான உயிர்ச்சேதமும் கிடையாது என்பதை நான் இந்த மன்றத்தில் உறுதியாகச் சொல்கிறேன். கோழிக்குஞ்சுகூட தண்ணீரில் மிதந்து வந்ததாகச் சொன்னார்கள். அதை வைத்துக்கொண்டு உயிர்ச்சேதம் ஏற்பட்டு விட்டதென்று மிகைப்படுத்தி சொல்கிறார்களோ என்னவோ எனக்கு விளங்கவில்லை. உடைப்பு ஏற்பட்ட காலத்தில் நமது மின்சார அமைச்சர் ராமையா அவர்கள் மின் ஒளி வீசுவது போன்று விரைந்து வந்து, 6-ம் தேதி அன்று தஞ்சையிலுள்ள அதிகாரிகளையும் தஞ்சை ஜில்லாவிலுள்ள சட்டமன்ற அங்கத்தினர்களையும் கூட்டத்திற்கு அழைத்து இம்மாதிரி ஒரு ஆபத்தான நிலைமை வெள்ளத்தால் ஏற்படப்போகிறது, 1924-ம் ஆண்டு ஏற்பட்ட நிலையை விட அதிகப்படியான நீர் வரப்போகிறது, எல்லா அதிகாரிகளும் சேர்ந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும், அங்கத்தினர்களும் பொதுமக்களோடு ஒத்துழைத்து எப்படியாவது அங்குள்ள மக்களைக் காப்பாற்றவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த ஆலோசனைக் கூட்டத்திலே. அன்று இரவே அநேகம் லாரிகளையும், ஜீப்களையும் எடுத்துக்கொண்டு அதிகாரிகள் விரைந்து சென்றார்கள். நீர்ப்பாசன இலாகா தலைமை அதிகாரியான ஏகாம்பரம் அவர்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் தீவிரமாக ஆச்சரியப்படும் வகையில், ராக்ஷஸ வேலை என்றுகூட சொல்லலாம், இரவு பகலாக அதிகாரிகள் நன்றாக ஒத்துழைத்து தஞ்சை ஜில்லாவில் உயிர்ச்சேதம் ஏற்படாமல் மக்களைக் காப்பாற்றினார்கள். ஆகவே, ஏதோ பெருத்த சேதம் ஏற்பட்டுவிட்டது, அதிகாரிகள் கவனிக்கவில்லை, அமைச்சர்கள் கவனிக்கவில்லை என்று சொல்வது பொருத்தமற்றதாகும். நன்றி உடையவர்கள் அவ்வாறு சொல்வது நல்லதல்ல என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் செய்த பேருதவிக்கு, இரவு பகலாக ஓய்வு இன்றி அலைந்து மக்களைக் காப்பாற்றியதற்கு தஞ்சை ஜில்லா வாசிகள் மட்டுமல்ல, சென்னை மாவட்ட வாசிகளும், அங்கத்தினர்களாகிய நாமும், எல்லோரும் அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அடுத்தபடியாக, நமது நீர்ப்பாசன இலாகா அமைச்சர் அவர்கள் 8-ம் தேதி அன்று வந்தார்கள். திட்ட-

18th September 1961] [Sri R. Swaminatha Merkondar]

ஸ்டேஷன் லைனில் உடைப்பு ஏற்பட்டுவிட்டதென்று அறிந்து ட்ராலி மூலம் சென்று கட்டு மரங்களைக் கொண்டு வந்து அவர்கள் முன்னிலையிலேயே அங்குள்ள மக்களை வெளியேற்றினார்கள். இப்படி அரும்பெரும் தொண்டு செய்துள்ளார்கள் அமைச்சர்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த முறை, இப்படி ஒரு வெள்ளச் சேதம் ஏற்படாதபடி என்னென்ன செய்யலாம், செய்யவேண்டுமென்று அதிகாரிகள் கூடி யோசிக்கிறார்கள். ஆனால் நான் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கரைகளை உயர்த்தி கால்வாய்களை வெட்டி ஜலத்தைக் கொண்டுபோக வேண்டும். கரைகளில் உடைப்பு படுக்காதபடி நல்லமுறையில் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று ஆலோசனைகள் சொல்கிறார்கள். அவ்வாறு கரைகளை திரும்பட உயர்த்தி கால்வாய்களையும் வெட்டி அந்த நீர் சமுத்திரத்திற்கு போய் விழாதபடி பாசனத்திற்கு ஏற்ற வகையில் நல்லதொரு திட்டத்தைப் போட்டால் நாட்டிற்கு அது நன்மை பயக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனக்கு முன்பு பேசிய கனம் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள் சொன்னார்கள், டெயில்என்டில் தண்ணீர் தட்டுப்படுகிறது என்றும், 1924-வது ஆண்டு உடன்படிக்கை பிரகாரம்தான் நடக்கவேண்டும் என்ற யோசனையையும் தெரிவித்தார்கள். வெள்ள காலத்தில் வரும் உபரி நீரை சமுத்திரத்தில் போய் வீணாவதை தடுத்து, உபயோகப்படுத்திக்கொள்வதற்கு உடன்படிக்கையும் எந்த மாறுதலும் தேவையில்லை என்று நினைக்கிறேன். மதிப்பிற்குரிய முத்தையா செட்டியார் அவர்கள் ஜேடர்பாளையத்தில் ஒரு அணையைக் கட்டி அதிலிருந்து புதுக்கோட்டை வழியாக தண்ணீரை கொண்டு போகலாம் என்றார்கள். அவ்விதம் கொண்டு போவதாக இருந்தால், அங்குள்ள மக்களுக்கு நன்மை பயக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த காலத்தில், அதாவது காவேரி வெட்டின காலத்தில், அதாவது சோழன் காவேரியை வெட்டின காலத்தில் உபரித் தண்ணீர் வெள்ளத் தண்ணீர் போவதற்கு கொள்ளிடத்தையும் வெட்டினான். அதேபோன்று இப்போது இன்னொரு கொள்ளிடத்தை நம்மால் வெட்டிவிட முடியாவிட்டாலும் மற்றொரு கால்வாயாக, அதாவது ஜேடர்பாளையத்தில் ஓர் அணை கட்டி புதுக்கோட்டை வழியாக விடுவதாக இருந்தால் அங்குள்ள மக்களுக்கு மிக ஆறுதலாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இருக்கின்றன. முக்கியமாக வெள்ளப் பெருக்கு ஏற்படுகின்ற காலத்தில், ஏற்படக்கூடிய உபரித் தண்ணீரை சமுத்திரத்தில் கொண்டு போய் வீணாக்காமல், பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக உபயோகித்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். இப்போது கட்டளை வாய்க்கால் திட்டம் ஒன்று இருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலம் உபரித் தண்ணீரை நல்லமுறையில் உபயோகப்படுத்த முடியும் என்று நினைக்கிறேன். உபரித் தண்ணீரை பம்பிங் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தால் அருகாமையில் இருக்கும் மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இதன் மூலம் விவசாயத்தைப் பெருக்குவதற்கும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **Sri K. B. S. MANI :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சபையில் விவாதித்துக்கொண்டு இருக்கும் வெள்ளம் சம்பந்தமான விஷயத்தில் ஓரளவு நேரடியாக நடவடிக்கையில் ஈடுபட்டவன் நான். இந்த நடவடிக்கைகளைப் பற்றி பலர் பல மாதிரியாக, ஒவ்வொரு அபிப்பிராயத்தை மனதில் இருத்திக்கொண்டு இந்த சபையில் விவாதிக்கிறார்கள். சிலர் குறிப்பிட்டது அரசியல் கருத்துக்கள் நிரம்பியதாகவும், சிலர் பேசியது தன் சொந்த நலன்களைக் கொண்டதாகவும் இருக்கிறதே ஒழிய உண்மையாக அங்கு நடந்தது என்ன என்பதைப் பற்றி இதுவரையிலும் இந்த சபையில் விவாதிக்கத் துவங்கவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். வெள்ளம் வந்தது வாஸ்தவம். பல நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்கள் அழிக்கப்பட்டு விட்டதும் வாஸ்தவம். இதற்காக லட்சக் கணக்காக இன்னும் சொல்லப்போனால் கோடிக்கணக்காக ரூபாய்களை செலவு செய்யவேண்டிய அளவுக்கு பல நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதும் வாஸ்தவம். இது எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்பது தான் இந்த சபையில் இருக்கின்ற பிரச்னை. இதில் அதிகாரிகளுடைய அலட்சிய மனப்பான்மையும், முன் கூட்டியே தக்க நடவடிக்கை எடுக்காததும்தான் காரணம் என்பது சிலருடைய வாதம். அப்படிப்பட்ட வாதத்தைச் சொல்லுகின்றவர்களுக்கு ஒன்று கூற ஆசைப்படுகிறேன். அப்படி அதிகாரிகள் அலட்சிய மனப்பான்மையாக இருக்காமல் உடனடியாக எல்லா வெள்ளத்தையும் நிறுத்த வேண்டுமென்றால், நமது தமிழ் நாட்டில் பழைய புராணத்தில் வருகின்ற அகஸ்தியரைப்போல் ஒருவர் தோன்றி அதிகமாக வருகின்ற தண்ணீரை எல்லாம் சாப்பிட்டு ஸ்டோர் பண்ணி வைத்து, எப்போது தேவையோ அப்போது தண்ணீரை விட்டுக்கொண்டு இருக்கவேண்டும். அம்மாதிரி நம்முடைய அதிகாரிகள் செய்ய முடியாது. தடுப்பு நிவாரணம் போதிய அளவுக்குச் செய்யவில்லை. முன்கூட்டியே வேகமாக வேலை செய்யவில்லை. சமயோசிதமாக வேலைகளை நடத்தவில்லை என்றும் பலர் சொன்னார்கள். முதல் நாள் வரையிலும் ஆற்றில் தண்ணீர் வரவில்லை. பாசனத்திற்கு முன் கூட்டியே தண்ணீர் விடவேண்டும் என்று அங்குள்ள மக்கள் அமைச்சர் அளவு வரை வந்து சொன்னார்கள். அதற்கான முன்னேற்பாடுகளை அதிகாரிகளும் செய்துகொண்டுதான் இருந்தார்கள். தண்ணீர் நினைத்தவுடன் விடவேண்டும் என்றால் அதற்கான பருவம் இருக்கவேண்டும், அணையில் தண்ணீர் நிரம்ப வேண்டும். இப்படி வருவதற்கான கால அளவைப் பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் எதிர்பாராவிதமாக மேலே மழை பெய்தது. அதோடு திட்டவட்டமாக இவ்வளவு மழை பெய்யும் என்று சொல்வதற்கு, இந்த ஆற்றின் உற்பத்தி ஸ்தானம் வேறு ஒரு ராஜ்யத்தில் இருந்த

18th September 1961] [Sri K. B. S. Mani]

காரணத்தினல் முடியாத நிலைமையில் இருந்தது. இந்த மழை வந்தவுடன் அங்குள்ள அதிகாரிகளும் இதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டுதான் இருந்தார்கள். இருந்தாலும், அவர்களும் இதை தடுக்க முடியாது என்று தோன்றின காலத்தில்தான் இங்குள்ள அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்களே தவிர ஆரம்ப காலத்தில் தெரிவிக்கவில்லை. தண்ணீர் அதிகமாக வருகிறது என்று பிறகு தெரிவித்தார்கள். உடனேயே இதைப்பற்றி நம்முடைய அதிகாரிகள் அரசாங்கத்திற்கு தெரிவித்தார்கள். அரசாங்கம் என்ன செய்தது, வொயர்லஸ், தந்தி இவைகளைத்தான் கொடுத்தது வேறு என் செய்தது என்று சிலர் தெரிவித்தார்கள். வேறு என்ன செய்ய முடியும்? அதிகாரிகளோ, அல்லது அமைச்சர்களோ இமயமலை அல்ல, இதை தடுத்து நிறுத்துவதற்கு. நம்மைப்போல் அவர்களும் மனிதர்கள்தான். அவர்கள் மேலிடத்திற்கு தெரிவித்தார்கள். உடனடியாக மின்சார அமைச்சர் அவர்கள் தஞ்சை ஜில்லாவுக்கு வந்தார்கள். அதிகாரிகளை எல்லாம் அழைத்து எச்சரிக்கையாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதிகாரிகளும் ஆற்றின் கரையோரத்தில் இருக்கின்ற மக்களுக்கு எச்சரிக்கை கொடுத்தார்கள். இவ்வாறு அறிவிப்பு கிடைத்தவுடன் அங்குள்ள சமூக ஊழியர்களும் மற்ற ரெவின்யூ டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகளும் தக்க நடவடிக்கை எடுத்தார்கள். எங்கெங்கெல்லாம் மக்கள் உஷாராய் இருந்தார்களோ அந்த இடங்கள் எல்லாம் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. யார் யார் அலட்சியமாக இருந்தார்களோ, அவர்கள் இருந்த இடங்கள் எல்லாம் சேதமடைந்தன. எங்கள் பகுதியில் மதிப்பிற்குரிய ஆபீஸர்கள் சில இடங்களை காப்பாற்ற முடியாது என்று சொல்லி அங்கு போட்டிருந்த ஆட்களை எல்லாம் வாபஸ் பெற்றுவிட்டார்கள். ஆனல் நாங்கள் அதை விடவில்லை. இராப்பகலாக இருந்து போராடியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு இருந்தோம், வெற்றியும் பெற்றோம். அமைச்சர் அவர்கள்கூட இதைப் பார்த்துவிட்டு எப்படி இதை செய்தீர்கள் என்று கேட்டார்கள். இருபத்தைந்து, முப்பது அடி ஆழத்தில் தண்ணீரில் சில கம்புகளை கட்டி அதில் நின்றுகொண்டு பெரிய "வுட்டன் ஹாமரை" கொண்டு அடித்து "பிக்கட்ஸ்"-களை எல்லாம் போட்டோம். இவ்விதம் உயிரையும் மதிக்காமல் நின்று நாங்கள் போராடியதின் பயனகத்தான் எங்கள் சீர்காழி பகுதி மயிரிழைகூட சேதமில்லாமல் தப்ப முடிந்தது. இந்த நிலைமையில் சட்டசபையில் எதற்கும் சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி பேசுவது என்பது நல்லதல்ல. இந்த வெள்ளத்தை தடுக்கவேண்டுமென்றல் இதற்கு மேலே ஓர் அணையைக் கட்டியிருக்கவேண்டும், கீழே ஓர் அணையைக் கட்டியிருக்கவேண்டும், என்றெல்லாம் சொல்லுகிறார்கள். இதைப் பற்றி எல்லாம் பேசும்போது சிறிதளவாவது நமக்கு "என்ஜினியரிங் காலேஜ்" இருக்க வேண்டும். அதல்லாமல் ஏதோ அரசாங்கத்தைப் பற்றி குறை கூறுவதும், அதிகாரிகளைப்பற்றி குறை கூறுவதும் நல்லதல்ல. அது நாட்டுக்கும்,

நாட்டு மக்களுக்கும் நல்லது செய்வதாகாது, மக்களுக்கு ஒரு நல்ல நிலேயை உண்டாக்க முடியாது, நாட்டுக்கு நல்லது உண்டாக்க முடியாது. இப்போது சொல்லப்படுகிற முறையில் ஒரு கமிட்டி அமைத்து பரிசீலனே செய்யவேண்டுமென்ற அவசியம் இல்லே. இன்னும் அழகாகச் சொல்லவேண்டுமானல் இந்தியாவில் இருக்கின்ற சகல ராஜ்யங்களிலும் நம்முடைய ராஜ்ய என்ஜினீயர்கள் தேவைப்படுகிறது என்று அங்கே அழைத்துப் போகப்படுகிருர்களே தவிர மற்ற நாட்டு என்ஜினீயர்களே இங்கே கூப்பிடுவது இல்லே, கூப்பிட்டது இல்லே, இனி மேல் கூப்பிடப்போவதும் இல்லே, கூப்பிட வேண்டிய அவசியமும் இல்லே. அத்தகைய திறன் படைத்தவர்களே வைத்துக்கொண்டு, அவர்களே வைத்து வேலே வாங்கும் திறன் இல்லாமல் அவர்கள் பேரில் பழியைப் போட்டு, செய்யத் தவறிவிட்டார்கள் என்று சொல்லுவது நகைப்புக்கு இடமாக இருக்கிறதே தவிர, ஏதோ சொல்லி விட்டோம் என்று வேண்டுமானல் இருக்குமே தவிர, இந்த மாதிரி சொல்லுவது அர்த்தமற்றது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கிட்டத்தட்ட 20-22 நாட்கள் எங்கள் தாலூகாவி லுள்ள அவ்வளவு ஊழியர்களும் 13 மைல் நீள கரையை காவல் காத்திருந்தோம். ஒவ்வொரு நிமிஷமும் வேலே செய்தோம். போலீஸ்காரர் முதல் ஒவ்வொருவரும் ஊழியம் செய்தோம். இன்னும் அரசாங்கம் கரைகளே பலப்படுத்தவேண்டுமென்று சொல்ல வேண்டியதில்லே. அவர்களே இந்தக் காரியத்தைச் செய்து விட்டார்கள். தனி இலாகா அமைக்கப்பட்டு வேலே துவங்கப்பட்டு விட்டது. இந்தமாதிரி வெள்ளம் வந்த காலத்தில், வெள்ளேயர் ஆண்ட காலத்திலும்கூட ஒரு உயிருக்குக்கூட சேதம் இல்லாமல் காப்பாற்றியது கிடையாது. இதை நான் சொல்லவில்லே, இந்தப் பணியில் ஈடுபட்ட ஊழியர்கள் சொல்லவில்லே, பொதுமக்கள் சொல்லுகிருர்கள் என்று சொல்லிக்கொண்டு, இந்த விவாதம்கூட அவசியமற்றது என்று சொல்லிக்கொண்டு எனது வார்த்தைகளே முடித்துக்கொள்கிறேன். **வணக்கம்.**

* **Sri S. RAMASAMI THEVAR :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்திலே நானும் கலந்துகொண்டு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எதிர்க் கட்சிகளாகிய நாங்கள் சொல்வதெல்லாம் வம்புக்காக, வீணுக்காகச் சொல்லுகிருர்கள் என்று சீறி விழுகிருர்கள். உண்மையில் நாங்கள் சொல்லவில்லே, முக்கியமாக இந்த வெள்ளத்தை ஓரளவு தடுத்திருக்கலாம், ஏற்பட்ட சேதத்தை ஓரளவு குறைத்திருக்கலாம் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலேவரே சொல்லியிருக்கிருர்கள். அவருடைய அறிக்கையைப் படித்தால் ஆளும் கட்சியினருக்கு இதில் உள்ள உண்மை தெரியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

முக்கியமாக காலாகாலத்தில் தண்ணீரை விட்டு, பாயக்கூடிய ஏரிகளுக்குப் பாயும்படி திறந்து விட்டிருந்தால் இவ்வளவு சேதம் இருந்திருக்காது என்று நான் சொல்லத் தேவையில்லே. **முக்கிய**

18th September 1961] [Sri Ramasami Thevar]

மாக நம் நாட்டிலே ஒரு பழமொழி இருக்கிறது. அதாவது "காவேரி கரை புறண்டு ஓடினாலும் வீராணம் ஏரிக்கு ஒரு வெடிப் புக்குக் காணாது" என்று அனுபவ ரீதியாக மக்கள் கண்டிருப்பது இது. சிறிது எச்சரிக்கையாக இருந்திருந்தால் இவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்காது. ஆனால் எப்படியோ சேதம் ஏற்பட்டுவிட்டது. இதிலே சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், பொது மக்களும், அவதிப் பட்டவர்களுக்கு உதவி புரிந்திருக்கிறார்கள் என்பது பாராட்டத் தகுந்தது. இனிமேல் இந்த மாதிரி வெள்ளச் சேதம் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கரைகளை நல்ல முறையில் உயர்த்தி, வாய்க்கால்களை ஆழப்படுத்தி தூர் எடுத்தாலன்றி இந்த மாதிரி சேதங்கள் அடிக்கடி ஏற்படும் என்பது சொல்லத் தேவையில்லை. அதிகமாக வாய்க்கால்களில் தூர் எடுக்கக்கூடிய வேலை காண்டிராக்டுக்கு விடப்படுகிறது. தண்ணீர்விட 10 அல்லது 20 நாட்கள் இருப்பதற்கு முன்பு வேலையைத் துவங்குகிறார்கள். மண்ணை எடுத்து கரைகளில்கூட போடாமல் கங்கில் சார்த்தி விடுகிறார்கள். இது நான் கண்ணால் கண்டது. இந்த மாதிரி செய்வதால் அடிக்கடி வாய்க்கால்களும் ஏரிகளும் தூர்ந்து விடுகின்றன. நாட்டின் நன்மையைக் கருதி இதில் அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யரும் மற்ற வர்களும் சொன்னமாதிரி புதுக்கோட்டை வழியாக ஒரு வாய்க் கால் வெட்டிக்கொடுத்தால் இந்த மாதிரி வெள்ளம் வரும்போது கூட தண்ணீர் சேதம் ஆகாமல் இந்தப் பகுதிகளில் போய்ப் பாயக்கூடும். புதுக்கோட்டை வழியாக அரந்தாங்கி மற்ற பகுதிகளில் பாய வேண்டியது, புதுக்கோட்டை குறுக்கே நின்ற காரணத்தினால், புதுக்கோட்டை, அரந்தாங்கி, போன்ற தாலூகா மக்கள் இன்னும் கஷ்டத்தை அடைந்து கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் கனம் மின்சார அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை வழியாக தண்ணீர் வர நிபுணர்கள் சொன்னால் விடமுடியும் என்று சொன்னார்கள். இதைப்பற்றி நான் பத்திரிகைகளில் பார்த்தேன். உண்மையில் ஏற்கனவே அவ்வழியாகத்தான் பாய வேண்டிய ருந்தது. அதற்காக நிலங்கள் வாங்கப்பட்டிருக்கிறது. சர்வேயும் ஆகியிருக்கிறது. கொண்டு செல்வதற்கு வழி இருக்கிறது. நல்ல எண்ணம் இருக்குமாயின் அப்பகுதி மக்கள் வாழ வழி செய்வார் கள் என்று நம்புகிறேன்.

இன்று டெயில்எண்ட் பகுதியில், பட்டுகோட்டை, அரந்தாங்கி பகுதியில் தண்ணீர் வரவில்லை. வெள்ளம், வெள்ளம் என்று கூறப் படுகிறது. சேதம், சேதம் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் அந்தப் பகுதியில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட இன்னும் குளங் களில் பாயவில்லை என்றால் அது வருத்தப்படவேண்டிய விஷயம். இன்றைய தினம் அவரவர் சொந்தத்தில் பைப் போட்டுக்கொள்கி றார்கள். கண்டவிடமெல்லாம் கரையை வெட்டி விடுகிறார்கள். சர்க்கார் கண்டிப்பது கிடையாது. சர்க்கார் இதையெல்லாம்

[Sri Ramasami Thevar] [18th September 1961

கண்டித்தாலன்றி நல்ல முறையில் நடைபெறுது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். முக்கியமாக கழனிவாசல் போன்ற வாய்க்கால்களில் கரைகள் வெட்டப்பட்டிருக்கின்றது. உத்தியோ கஸ்தர்களிடம் சொன்னுல் எங்களால் கண்டிக்க முடியாது என்று சொல்லுகிறுர்கள். நாங்கள் என்ன செய்வோம் என்று சொல்லு கிறுர்கள். ஆங்காங்கு இதை கவனித்தாலன்றி நாட்டில் நல்ல நிலே உண்டாகாது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இனிமேல் இந்தமாதிரி சேதங்கள் வெள்ளப் பெருக்கினுல் ஏற் படாதபடி கரைகளே அதிகப்படியாக உயர்த்தி வாய்க்கால்களே ஆழப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* SRI T. SAMPATH : Mr. Deputy Speaker, before I begin to speak on the Resolution under discussion, I wish to thank the Government and also the Hon. Chief Minister and other Ministers for the prompt action taken to meet the flood situation as soon as the warning was received. I wish also to place on record our appreciation of the services rendered by the Chief Engineers, other Engineers and other Officers of the Public Works Department, the Revenue Department, the Police Department and other Departments, for the prompt action taken by them to meet the flood situation. In particular, I wish to mention the yeoman services rendered by our Collector and other Revenue Officials of the district to save Tanjore district from a terrible disaster. In fact, but for our Collector's bold all out efforts, things would have been quite different in our district. Having regard to the magnitude of the situation, our officials rose to the occasion and did yeoman service.

Sir, Hon. Minister has placed a statement on the table of the House regarding the Cauvery floods. In paragraph 10 of the statement, it has been stated, 'It is unfortunate that notwithstanding the timely precautionary measures taken by the Government to petrol the banks of the Aganda Cauvery and the Coleroon and other vulnerable points, there was breach at Koiladi.'. There is another strong view, Sir, about 'Koiladi breach'. That is this. If this breach had been attended to at the earliest point of time it would not have widened to the extent it had done, i.e., 1,000 feet or so. I have some reliable information that the Revenue Divisional Officer, Tanjore, while on patrol duty noticed this breach on the 7th morning at 4 a.m. when it was only 10 feet wide and gave this information through the Collector to the Superintending Engineer. If it had been attended to then, I wish to submit that the loss would not have been so much.

There is also another complaint and it had also been referred to by other speakers who preceded me. That is, more water could have been let out from the Mettur Dam earlier than the evening of the 5th August. I am not able to understand the exact difficulty in opening the irrigation vents of the Mettur Dam. If only those vents had been opened, it would have been possible to let out

18th September 1961] [Sri T. Sampath]

10,000 cusecs of water per day. Calculating at the rate of 10,000 cusecs of water, in 4 or 5 days, it would have been possible to let out 50,000 cusecs of water. That would have moderated the intensity of the floods in other areas. That is why I am referring to it. Instead of that water was impounded to 103 feet.

In paragraph 19 of the statement, long term measures to be 3-30 p.m.
investigated and to be implemented have been mentioned. A suggestion has been made for the construction of a dam in the upper reaches of Mettur. A suggestion has also been made in the statement for the diversion of Cauvery water to Pennar, Palar, Vellar and other rivers. This suggestion has been made as a permanent remedial measure to meet the extraordinary flood situation. These suggestions have to be thought of without affecting the existing irrigation rights of the Tanjore district. In fact, hon. Member, Sri Srinivasa Iyer, referred to this aspect of the matter and warned the authorities also about it. Before taking a decision on this matter it has got to be carefully considered in all aspects and then a decision taken finally. It is quite natural that when unprecedented floods occur, these suggestions also occur to our minds. The Cauvery has already got two big dams and there are a number of anicuts and irrigation systems. It has to be very seriously considered whether the present disaster is due to the absence of another dam or due to defects in the safeguards which are usually provided against floods. It must be very clear to everyone who toured the affected areas and also the breach spots that the bunds of the Cauvery, Coleroon and other rivers in the Tanjore district need to be strengthened immediately because they have become weak in many places. They are not able to resist the impact of flood water. As a matter of fact, in my town, Kumbakonam, there is no bund worth the name of the river Arasalar. So much so, there was very heavy in-flow of water into the town. I may say that no protection work has been done to these bunds after the last breaches which occurred in 1924 excepting minor repairs.

More than this, if Tanjore is to be saved from future floods, I wish to emphasise that Coleroon bunds must be strengthened immediately and the level of the bunds also must be raised immediately. In fact, Coleroon river is intended as a flood-carrier and it is not a river of irrigation for our district. So attention must be diverted to this work.

During the time of floods, while some rivers were in spate in some of the rivers in our district there was dearth of water so much so the ryots were complaining that there was not adequate supply of water for irrigation. Particularly in river Vennar, adequate and full supply of water was not let in.

Further, Vettar is also a river intended to carry the flood water like Coleroon. Vettar and other channels have become highly silted and therefore they were not in a position to receive full supply and I suggest that the river must be deepened immediately and channels also desilted.

[Sri T. Sampath] [18th September 1961

A suggestion has been made to provide shutters in the Upper Anicut to divert flood waters to Coleroon. I welcome this proposal. In this connection, I would even suggest that, a scheme to inter-connect all rivers lower down the Grand Anicut and for the regulation of water during the time of emergency particularly during the time of the flood season must be evolved. It will be remembered that the floods of the present magnitude have never happened in living memories. I find that year after year there has been complaint from the delta people that there has been not adequate water for irrigation purposes. Why I am mentioning all these things is that if the suggestion for the construction of a dam in the upper reaches of Mettur is to be thought of, it has to be considered very carefully and then a decision arrived at because it will very definitely be harmful to the ryots of Tanjore and Tiruchirappalli districts. It may be said that at the time of the construction of the dam, these things will be remembered and the rights of the ryots of the area lower down the dam will be safeguarded. But when once the ayacuts of Palar and Pennar get included there will be clash of interest which will affect food production.

DEPUTY SPEAKER: The hon. Member's time is up.

SRI T. SAMPATH: One word more. At the time of floods, many individuals came to the rescue. They helped the department financially in strengthening the bunds. They expended money from their pockets and they were assured that their amounts would be reimbursed. But I am sorry to say that though more than two or three months have passed, payments have not been made to persons and to institutions like panchayats. I think that early orders should be issued for reimbursing the amounts spent by them.

As regards the Resolution, I do not think that there is any need for appointing a Committee. Already a Special Superintending Engineer has been appointed to study various aspects of the problem and I do not think that a Committee need be appointed now at this stage.

DEPUTY SPEAKER: Now the time-limit is reduced to five minutes. The hon. Member, Sri Nallaswami, will now speak.

* SRI T. M. NALLASWAMI: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பொதுவாக, காவேரியில் ஏற்பட்ட பிரவாகத்தை, அதனால் ஏற்பட்ட கஷ்டத்தை தவிர்ப்பதற்காக சர்க்காரும், சம்பந்தப்பட்ட இலாகாவினரும் தீவிரமாகவும், உடனடியாகவும் நடவடிக்கை எடுத்ததைப் பொதுவாக அந்தக் காவேரிக் கரைகளிலே வசிக்கும்படியான அத்தனை பாமர ஜனங்களும், சாதாரண ஜனங்களும் பெருமையோடு பாராட்டி இருக்கிறார்கள் என்பதிலே சந்தேகமே வேண்டியதில்லை. இருந்தபோதிலும்கூட, இன்று காலையில் என்னுடைய மதிப்பிற்

18th September 1961] [Sri T. M. Nallaswami]

குரிய நண்பர் கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் சில குறைகளைக் குறிப்பிட்டார்கள். வெள்ளம் வருவதற்கு முன்னமே, அதைப் பாதுகாப்பதற்கு இந்த இலாகாவினர் தவறி விட்டார்கள் என்ற ஒரு குற்றச்சாட்டை அவர்கள் குறிப்பிட்டார்கள். இது மிகவும் குறிப்பிடத்தக்க விஷயமாகும். நாம் இதை அலட்சியம் செய்யக் கூடாது என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். அவர்கள், பல கால்வாய்களில் தண்ணீரைவிட்டு அதன் மூலம் குளங்களை நிரப்பி இருக்கலாம், இது ஓரளவுக்கு வெள்ள வேகத்தைத் தடுத்திருக்கும்; அதேபோல் இன்னும் மேலே இருந்து வரக்கூடிய தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு அதன் படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டு வெள்ள வேகத்தைத் தடுத்திருக்கலாம் என்றும், அதன் மூலம் பெரிய நஷ்டம் ஏற்படாத அளவுக்கு தடுத்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொல்வது உண்மையாகவே இருக்குமானல், அது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உண்மையாகவே எந்த அளவுக்கு மந்த புத்தி உள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை ஆராய்ச்சி செய்து வைப்பது நல்லது. ஆகவே, இதைப்பற்றி விசாரிப்பதற்கு, தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்பதை நான் வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

அதோடு நிரந்தரமாக பிரவாகம் வராமல் தடுப்பதற்கு என்று சில ஆலோசனைகளை இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் பலர் கூறினர்கள். அதன்படி அணைகள் கட்டலாம். அதன்படி, காவேரிக்கு வரக்கூடிய உப நதிகளில் பல இடங்களில் வெள்ளத்தைத் தடுப்பதற்கு ஆங்காங்கு அணைகள் கட்டலாம். இதுவும் குறிப்பிடத்தக்க ஆலோசனை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இப்போது குறிப்பாக பிரவாக காலத்திலே என்னுடைய அதாவது நான் வசிக்கக்கூடிய தாலுகாவிலே 2 நதிகள் காவேரியோடு கலக்கின்றன. என்னுடைய தாலுகா என்று சொல்வதைவிட, என்னுடைய தொகுதி என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். நொய்யல், அமராவதி என்று இரண்டு நதிகள் வந்து கலக்கின்றன. அவைகளிலும்கூட பிரவாகம் ஏற்பட்டு, பாதிக்கக்கூடிய அளவிலே நிலைமை இருந்தது என்று சொன்னல் மிகையாகாது. அந்த மாதிரி இருக்கக்கூடிய நதிகளை எடுத்துக்கொண்டு, அங்கு அணைகள் கட்டி, தாராளமாக தண்ணீர் வருகின்ற காலத்தில் தண்ணீரைச் சேமித்து, வெள்ளத்தைத் தடுக்கலாம். அதோடு அந்தத் தண்ணீரை பாசனத்திற்கும் உபயோகப் படுத்திக் கொள்ளலாம். ஆகவே இந்தச் சந்தர்ப்பத்திலே மீண்டும் இதை ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நொய்யல் நதி, கொட்டமறை, கொள்ளிமலை, மருதையாறு முதலிய இடங்களுக்கு எல்லாம் முன்பே திட்டங்கள் போடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களையெல்லாம் இப்போது உடனடியாக எடுத்துக்கொண்டு, நிறைவேற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[Sri T. M. Nallaswami] [18th September 1961

அடுத்து, இந்த வெள்ள ஏற்பாட்டின் காரணமாக மூன்று பரிகாரங்களை நாம் செய்ய வேண்டி இருக்கிறது. (1) நிரந்தரமாக பிரவாகம் வருகின்றபோது, அவைகளை எப்படித் தடுப்பது என்பது. (2) ஏற்கனவே வெள்ளம் வந்தால், நமக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. வாய்க்கால்கள் எல்லாம் வெள்ளப் பிரவாகத்தினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பாதிக்கப்பட்ட வாய்க்கால்களை எல்லாம் உடனடியாக சீர்திருத்தம் செய்து, தண்ணீர் பஞ்சம் ஏற்படாதபடி ஏற்கனவே பாசனத்தில் இருந்து வரும் நிலங்களுக்க தண்ணீர் கொடுத்து, மேலும் நஷ்டம் ஏற்படாதபடி செய்வது. அதாவது, சாதாரணமாக டிசம்பர், ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தண்ணீர் கஷ்டம் இருந்திருக்கிறது. குறிப்பாக கரூர் வட்டத்திலே பாசனத்திற்கு நீர் கொடுக்கக்கூடிய புகளூர் கால்வாயில் 3 மைல் தூரம் கரையை அரித்துக்கொண்டுபோய் விட்டது. மீண்டும் அதற்காக ஒரு கப்-டிவிஷன் போட்டு வேலை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன், அதிகாரிகளிடத்திலும் சொன்னேன். அதை கவனிப்பதாகக் கூறினார்கள். இதை துரிதமாகச் செய்து முடிக்கவேண்டும். இல்லாதுபோனால் பல லட்ச ரூபாய் பெறுமான மகசூல் ஒரு கால்வாயினால் நஷ்டம் அடையக்கூடிய அபாயம் இருக்கிறது. அம்மாதிரி நிலை இல்லாமல் வருகிற ஜனவரி, பிப்ரவரி மாதத்திற்குள் அந்த வேலையை முடிக்க வேண்டும். அதேமாதிரி காவேரி பாயக்கூடிய மற்ற பிரதேசங்களிலும், எங்கெங்கே பாதகம் ஏற்பட்டிருக்கிறதோ அவற்றையெல்லாம் துரிதமாக சீர்திருத்தம் செய்யாவிட்டால் நஷ்டக்கணக்கு ஏறிக்கொண்டே போகும் என்பதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1924-ம் வருஷத்தில் வந்த பிரவாக காலத்தில் 'ப்ளட் (flood) பாங்குகள்' பல இடங்களில் உடைந்துபோய் விட்டன. அவைகள் மறுபடியும் சீர்திருத்தம் செய்யப்படவேயில்லை. கடந்த 30 வருஷ காலமாக இவ்வளவு பெரிய அளவுக்கு வெள்ளம் வராததால் 'ப்ளட் பாங்குகளுக்கு' அவசியம் இல்லாத சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது. இப்பொழுது ஏற்பட்ட வெள்ள சேதத்தை படிப்பினையாகக்கொண்டு, 'ப்ளட் பாங்குகளை' மீண்டும் கட்டவேண்டும். அப்படிக் கட்டினால்தான் மீண்டும் எதிர்பாராமல் இம்மாதிரி வெள்ளம் வருமானால் அதனால் கரைக்கு அருகாமையில் இருக்கக்கூடிய விவசாய நிலங்கள் பாதிக்கப்படாமல் இருக்கும். ஏற்கனவே பாதிக்கப்பட்ட இடங்களில் சர்க்கார் 'ப்ளட் பாங்குகளை' துரிதமாக சீர்திருத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். (மணி அடிக்கப்பட்டது). தயவு செய்து உதவி சபாநாயகர் அவர்கள் எனக்கு இன்னும் இரண்டு நிமிஷங்கள் அவகாசம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். நஷ்டஈடு சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் 10, 12 கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனது நண்பர் நல்ல

18th September 1961] [Sri T. M. Nallaswami]

சிவம் ரூ. 250 அல்லது 500 போதும் என்று சொன்னார்கள். அதை வைத்துக்கொண்டு மணலை அப்புறப்படுத்துவது என்பது முடியாது. சர்க்காரே இந்தத் திட்டத்தை மேற்கொண்டு மணலை அப்புறப்படுத்துவதற்கு ஒரு திட்டம் தீட்டவேண்டும். அப்படியில்லையென்றால் நிரந்திரமான பரிகாரம் காணுவதற்கு என்ன செலவாகும் என்பதைப் பரிசீலனை செய்து, கணிசமான தொகையை 'ஸப்ஸிடி' யாக, நன்கொடையாகக் கொடுத்து உதவ வேண்டும். விலை உயர்ந்த நிலங்கள், நல்ல விளைச்சல் கொடுக்கக் கூடிய நிலங்கள், ஒரு ஏக்கர் வைத்திருந்தால் ஒரு குடும்பம் ஜீவிக்க முடியும், அந்த நிலங்களில் 3 அடி, 4 அடி மண் அடித்திருக்கிறது. இதைப்பற்றி கலெக்டரிடமும், என்ஜினியரிடமும் பேசினேன். 1,000, 1,500 ரூபாய் செலவு செய்து புல்டோசர்களை வைத்து மண்ணை அப்புறப்படுத்தலாம் என்று சொன்னார்கள். ஒரு புல்டோசர் 145 மணி நேரம் வேலை செய்ததில் 50 செண்டு நிலத்தில் கூட மண் எடுக்க முடியவில்லை. ஒரு மணிக்கு ரூ. 12 சார்ஜ். இதற்கு என்ன செலவாகும் என்பதை நடைமுறையில் ஏற்பட்டதை வைத்து நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எல்லா இடங்களிலும் 4 அடி மணல் அடித்திருக்கிறது என்று நான் சொல்லவில்லை. சில இடத்தில் ½ அடி, 1 அடி மணல் அடித்திருக்கலாம். இதற்கெல்லாம் 100, 200 ரூபாய் செலவு செய்து மணலை அப்புறப்படுத்தி விடலாம். ஆனால் என்னுடைய தொகுதியில் 40, 50 ஏக்கருக்கு அதிகப்படியான நிலங்கள் மணல் அடித்திருக்கிறது. எந்தெந்த இடத்தில் மணல் அதிகமாக அடித்திருக்கிறதோ அதை அப்புறப்படுத்துவதற்கு சர்க்காரே திட்டம் வகுக்கவேண்டும் என்று நான் நேரடியாகப் பார்த்தவன் என்ற முறையில் சர்க்காருக்கு ஆலோசனை கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக மக்களுக்கு நஷ்டஈடு கொடுப்பதுபற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சொந்த நிலம் வைத்திருக்கக்கூடியவர்கள் 2 ஏக்கரில் மணல் அடித்துவிட்டது என்றால், 10 ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்கள் அம்மாதிரி மணல் அடித்துவிட்ட பகுதியை விட்டுவிடப்போவதில்லை. அதை எப்படியாவது அப்புறப்படுத்தி விடுவார்கள். ஆனால், பிறர் இடத்தில் குத்தகைக்கு வாங்கி நிலத்தை உழுபவர்கள், குறிப்பாக வெற்றிலைக் கொடிக்கால் விவசாயிகளுடைய நிலை மிகவும் கஷ்டமானது. ஒரு ஏக்கருக்கு 100, 150 கிடங்குகள் வைத்திருப்பார்கள். 10, 15 கிடங்குகள் வைத்திருந்தால் ஒரு குடும்பமே ஜீவிக்கும். ஒரு ஏக்கருக்கு ரூ. 5,000 செலவாகும். கொடிக்காலே அழிந்துவிட்டது என்றால், அவர்களுக்கு 5,000 ரூபாய் நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. மறுபடியும் அவர்கள் தங்கள் தொழிலை ஆரம்பிப்பதற்கு தேவையான அளவுக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியில் சுமார் 125 ஏக்கர் வெற்றிலைக் கொடிக்கால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த விவசாயிகளுக்கு புனர் வாழ்வு அளிப்பதற்கு கணிசமான உதவிக்கு வழி செய்ய

வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதேமாதிரிதான் கரும்பு, நெல் மகசூல்-க்கு நஷ்டஈடு கொடுப்பதிலும், பூரா தொகையும் கொடுக்காவிட்டாலும், மறுபடியும் அந்த விவசாயிகள் விவசாயத்தை ஆரம்பிப்பதற்கு போதுமான அளவுக்கு நஷ்டஈடு கொடுப்பதற்கு சர்க்கார் உடனே உத்திரவு பிறப்பிக்கவேண்டும். அங்குள்ள கலெக்டர் சர்க்கார் என்ன சொல்லப்போகிறார்கள் என்று எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார். நிதி அமைச்சர் அவர்கள் சொன்ன பொழுது தேவையான உத்தரவுகள் பிறப்பித்திருக்கிறார்கள் என்று கூறினார்கள். ஆனால் நேற்று கலெக்டர் அவர்கள் சர்க்காரிட மிருந்து இன்னும் 'இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்' வரவேண்டுமென்று சொல்லுகிறார்கள். உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இதில் கவனம் செலுத்தி நஷ்டஈடு போதுமான அளவுக்கு கொடுப் பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த உதவி சபாநாயகர் அவர் களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

Sri G. G. GURUMURTHI : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு இருக்கும் விவாதத்தில் கலந்துகொண்டு சில வார்த் தைகள் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக கோவை ஜில்லாவில் பவானி, காவேரி நதியின் வெள்ளத்தினால் மக்களுக்கு ஏற்பட கூடிய பல நஷ்டங்களைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை களை எடுத்துக்கொண்டதற்காக நாம் அரசாங்கத்தை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கலெக்டர் அவர்களும், சம்பந்தப்பட்ட பி. டபிள்யூ. டி. அதிகாரிகளும் மிகுந்த சிரமப்பட்டு துரிதமாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். அவர்கள் அம் மாதிரி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்றால், இன்னும் அதிகமாக வீடுகளுக்கும், வீடுகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கும் ஏராளமான சேதம் ஏற்பட்டிருக்கும் என்பதுபற்றி எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இரவு பகலாக சிரமப்பட்டு அவர்கள் முயற்சி எடுத்துக்கொண்டதால் பல குடும்பங்கள் காப்பாற்றப்பட்டன. அதற்காக அவர்களை நாம் பாராட்டவேண்டும்.

குறிப்பாக கோவை ஜில்லாவில் பவானி தாலுக்காவில் காவேரி நதியைவிட பவானி நதியின் வெள்ளத்தினால்தான் அதிகமாக நஷ்டம் ஏற்பட்டது. அங்குதான் குடிசையில் வசிக்கக்கூடிய ஏழை ஹரிஜன சகோதரர்களுக்கும், மற்றவர்களுக்கும் ஏராள மான நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இரண்டு அணை களிலிருந்து பி. டபிள்யூ. டி. இலாகாவினர் தங்களுடைய சம யோசித புத்தியினால், ஒழுங்காக தண்ணீரை வாங்கி நிதானமாக வெளிவிட்டதினால்தான் பல சேதங்கள் தவிர்க்கப்பட்டிருக்கின்றன என்று இந்தச் சபை முன்பு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக நிவாரண வேலைகளை எடுத்துக்கொண்டு பார்க்கும் பொழுது ஆரம்பத்தில் இருந்த சுறுசுறுப்பு இப்பொழுது இல்லை.

18th September 1961] [Sri G. G. Gurumurthi]

ஆரம்பத்தில் மக்களுக்கு செய்யப்பட்ட நன்மைகள் இப்பொழுது தொடர்ந்து நடைபெறவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஹரிஜன சகோதரர்களுக்கும், மற்றவர்களுக்கும் அப்பொழுது 30 ரூபாய் அளவுக்கு நிவாரணம் அளித்தார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் நிரந்தரமாக தங்கள் வாழ்க்கையை மீண்டும் தொடங்கி, குடும்பத்தை நடத்த முடியாது. அவர்களுக்கு வேறு வசதி கிடையாது. தஞ்சை, திருச்சி ஜில்லாக்கள் போல் அல்லாமல், எங்கள் ஜில்லாவில் அவர்களுக்கு நிரந்தரமான பரிகாரம் கொடுப்பதற்கு வேண்டிய பல வாய்ப்புகள் இருக்கின்றன. கரை ஓரங்களில் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு நிலங்களை 'அக்வயர்' செய்து கொடுத்தால், மிகவும் வசதியாக இருக்கும். வெள்ளத்தினால் எப்பொழுதும் பாதிக்கப்படுவார்கள் என்ற கஷ்டம் இருக்காது. அரசாங்க உத்தரவுப்படி 250 ரூபாய் லோன் கொடுக்கவேண்டும். ஆனால் அந்தப் பணம் நியாயமாக யாருக்குப் போய் சேரவேண்டுமோ, யாருக்கு உதவிகரமாக இருக்கவேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரக்கூடிய வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. நபர் ஜாமீன் பேரில் கொடுப்பதற்கு உத்தரவு இல்லை. சொத்து உள்ளவர்கள் தங்கள் சொத்தை பிறருக்கு ஜாமீன் கொடுக்கவேண்டும் என்பது நடைமுறையில் நடக்கக்கூடிய காரியமில்லை. நபர் ஜாமீனை வைத்துக்கொண்டோ, அல்லது அந்தக் குடியானவர்கள் எந்த இடத்தில் குடியிருக்கிறார்களோ அந்த நிலத்தை செக்யூரிடியாக வைத்துக்கொண்டோ கடன் கொடுக்கவேண்டும். தாராளமாகக் கொடுக்கலாம், விலை குறையாது, அவர்கள் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். ஆகையால் அம்மாதிரி அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்தவரைக்கும், பல பிரதேசங்களில் மணல் அடித்திருக்கிறது. மஞ்சள், கரும்பு, நெல் சாகுபடி செய்யக்கூடிய இடங்களில் 2, 3 அடி மணல் அடிக்கப்பட்டிருக்கிறது. கோவை ஜில்லாவில் பவானி தாலுகாவில் நதி ஓரங்களில் துறவு கிணறுகள் வைத்து நீண்ட காலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். இப்பொழுது வெள்ளம் வந்ததன் காரணமாக இந்தத் துறவு கிணறுகளெல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டுவிட்டன. மறுபடியும் அவைகளை கட்டவேண்டுமென்றால் ஒவ்வொருவருக்கும் 4,000, 5,000 ரூபாய் செலவாகும். மறுபடியும் வெள்ளம் வந்தாலும் அபாயம் இருக்கும். ஆகையால் அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மின்சார சப்ளை செய்துகொடுத்து, 'பெட்' போட்டுக் கொடுத்தால், விவசாயம் ஒழுங்காகச் செய்வதற்கு சௌகரியமாக இருக்கும். இதற்காக விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள். மின்சார இலாகாவினர், பி.டபிள்யூ.டி. இலாகாவினர், ரெவின்யூ இலாகாவினர் மூன்று இலாகாவினரும் கூட்டாகச் சேர்ந்து இவைகளைப் பரிசீலிக்கவேண்டும். தனித்தனியாக பரிசீலனை செய்தால் நீண்ட காலம் ஆகும். அவைகளை

[Sri G. G. Gurumurthi] [18th September 1961

உடனடியாக 3 இலாகாவினரும் சேர்ந்து பரிசீலனை செய்து வேண்டிய வசதிகளை செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI T. KARIA GOUNDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று காலை இந்தத் தீர்மானத்தை கொண்டு வந்த மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் முகவுரையில் குற்றச் சாட்டையும், முடிவுரையில் போற்றியும் பேசினார்கள். அவர்களுடைய போற்றுதல்களுக்கு நன்றி. இன்றைக்கு உத்தியோகத்தில் உள்ள எஞ்ஜினியர்களெல்லாம் இம் மாதிரி வெள்ளம் பற்றி படித்துக்கூட இருக்க மாட்டார்கள், கனவில்கூட இதைப்பற்றி நினைத்திருக்கமாட்டார்கள். பிரதம எஞ்சினியர்—அவர் வயதானவர் என்றாலும்—அமைச்சர் இவர்களெல்லாம் இந்த விதமான வெள்ளத்தின் அனுபவம் இல்லாதவர்கள். நாங்களெல்லாம் சின்னப் பிள்ளைகளாகப் படிக்கும்போது, காவிரி வெள்ளப் பெருக்கினால், பல மைல் விஸ்தீர்ணம் மணல் மேடு இட்டுப் போனதாகப் படித்திருக்கிறோம். இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் அனுபவம் காரணமாக இனி இம்மாதிரி வெள்ளம் வந்து அந்த இலாகா சரிவரக் கவனிக்காமல் இருப்பார்களேயானால், அவர்கள் மேல் குற்றம் சொல்லலாம். மதிப்பிற்குரிய முதல் அமைச்சரவர்களைச் சந்தித்தபோது சொன்னார்கள், காலாகாலத்தில், இந்த எஞ்ஜினியர்கள் நடவடிக்கைகள் எடுக்காமல் இருந்திருப்பார்களேயானால், மேட்டூர் அணையில் 100 அடி உள்ள மணல் போக்கி உடைத்துக் கொண்டு தஞ்சாவூர் ஜில்லா பூராவும் பாதிக்கப்பட்டிருக்கும் என்று சொன்னார்கள். 1924-வது ஆண்டில் வெள்ளம் ஏற்பட்ட காலத்தில், இன்றைக்கு எஞ்ஜினியர்களாக இருப்பவர்கள், எஞ்ஜினியரிங் கல்லூரியில்கூட இருந்திருக்க மாட்டார்கள், பள்ளிக்கூடம்கூட போய் இருக்கமாட்டார்கள், பிறந்துகூட இருக்க மாட்டார்கள்.

இரண்டாவது உலக யுத்தம் நடந்த காலத்தில் நான் சென்னையில் தங்கி இருந்த காலத்தில் சொன்னார்கள் "இங்கே தங்க வேண்டும், இப்படி படுக்க வேண்டும், அப்பொழுதுதான் குண்டிலிருந்து தப்ப முடியும்" என்று சொன்னார்கள். நான் கேட்டேன், "உங்களுக்கு எப்படி அதெல்லாம் தெரியும்? நீங்கள் அனுபவப் பட்டிருக்கிறீர்களா" என்று. "நாங்கள் அது பற்றிப் படித்திருக்கிறோம்" என்றார்கள். இந்த எஞ்ஜினியர்கள் வெள்ளம் எப்படி வரும், வந்தால் எப்படித் தடுக்க வேண்டும் என்று படித்துக்கூட அறிந்ததில்லை. இந்த அனுபவத்தின் காரணத்தினால், இனி ஏதாகிலும் வெள்ளம் வந்து, அதிகாரிகள் தவறுகள் செய்தால், குற்றச் சாட்டு சொல்லுவதற்கு வழிவகை உண்டு. இந்த சமயத்தில் பிரதம எஞ்சினியர் ரஜாவில் இருந்தார்கள். அவர்கள் வந்தார்கள். இலாகா காரியதரிசி, அமைச்சர்கள், இவர்கள் எல்லாம் அங்கெல்லாம் வீடுவீடாகச் சென்று, தெருத் தெருவாகச் சென்று, போலீஸ் படையினரும், தொண்டர்களும், ராணுவ

18th September 1961] [Sri T. Karia Gounder]

படையினரும்கூட அதிகமான உதவிகள் செய்திருக்கிறார்கள் என்று படித்திருக்கிறோம். அதற்காக அவர்களெல்லோருக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி நன்றி செலுத்துவதற்குப் பதிலாக, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பது, உழும் மாட்டை நுகத்தடியால் அடிப்பது போல்தான் இருக்கிறது. இதனால், வேலை செய்பவர்களின் உணர்ச்சிகள் குறைந்து போகும் என்றுதான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில்—ஏதோ தேர்தலுக்காக என்று பேசவில்லை —ஹொகனகல்லில் அணைகட்டி காவிரியில், பெண்ணாற்றில் இணைக்க வேண்டும் என்றிருக்கிறது. அதைப் பாலாற்றில் தான் சேர்க்க வேண்டும் என்று நான் சொல்லுவேன். தஞ்சாவூரில் பலர் நீண்ட காலமாக, எத்தனையோ ஆண்டு காலமாக, உலகம் பிறந்த காலமாக, பாலாறு சுரந்த காலமாக, தஞ்சாவூர் நண்பர்கள் பாலாற்றுக்குத் திருப்பி விட்டால் ஆபத்து என்று அச்சப்படுகிறார்கள். அப்படி அச்சப் படவேண்டிய அவசியம் இல்லை. வெள்ளப் பெருக்கு வரும் காலத்தில், அந்த இடத்தில் வெள்ளத்தைத் தடுத்து, வெள்ள அபாயத்தைத் தடுத்து பாலாற்றில் விடலாம். அதை அமைச்சர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இலாகாவில் உள்ள எல்லா எஞ்ஜினியர்களும் இன்றைக்கு இந்த இடத்தில் இருக்கிறார்கள். அவர்களும் வகுக்கப் போகும் திட்டத்தில், இனிமேல் வெள்ளம் வராமல் இருக்க, (மணியடிக்கப்பட்டது). இந்தக் கருத்தையும் மனதில் கொண்டு, திட்டத்தை வகுக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்வதோடு, உதவி சபாநாயகர் அவர்கள் மணியடித்ததோடு, "உட்காரு" என்று தலையை ஆட்டுகிறார்கள் என்ற காரணத்தினால், இந்த சந்தர்ப்பம் கொடுத்த அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, செக்ரடரி உள்பட எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும், அமைச்சரவர் களுக்கும், மற்ற எல்லா ஊழியர்களுக்கும் என் சார்பிலும், இந்த சபையின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

Sri S. NAGARAJA MONIGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பல அங்கத்தினர்கள் பேசிய பின்பு, நான் இரண்டொரு வார்த்தைகள் மட்டுமே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இந்தத் தீர்மானம் வேண்டியதில்லை என்பதுதான் என் கருத்து. இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கனம் அங்கத்தினர் பல ஆலோசனைகளையும் சொன்னார்கள். அந்த ஆலோசனைகளை மறுக்க வில்லை. இந்தத் தீர்மானம் என்ன சொல்லுகிறது என்றால், ஒரு நிபுணர் கமிட்டியை ஏற்படுத்தி, செய்ய வேண்டியதைச் செய்யத் தவறியிருந்தால் அவைகளைக் கண்டுபிடித்து எப்படிச் செய்ய வேண்டுமென்று சர்க்காருக்கு அறிவிக்க வேண்டும் என்று கோரப் பட்டிருக்கிறது. கடைசியில், யாரிடத்தில் குறைகள் இருந்தாலும் எப்படிப்பட்ட வேலைகளை இனிமேல் மேற்கொள்ள வேண்டும்

[Sri S. Nagaraja Monigar] [18th September 1961

என்று கவனிக்க வேண்டும் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. தவறுகள் இருக்கலாம். பெரிய காரியம் இது. பெரிய அளவில் இயற்கையோடு போராடவேண்டிய சமயத்தில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அந்தத் தவறுகள் இப்படித் தீர்மானம் கொண்டு வருவதால் மட்டுமோ, சர்க்காரையும், அதிகாரிகளையும் கண்டிக்கும் முறையில் இருப்பதால் மட்டுமோ சரியாகி விடுமா என்று பார்க்க வேண்டும். வெளியிலே ஏதாவது கண்டனக் கூட்டம் போட்டார்களா மக்கள்? யாராவது எதிர்த்தார்களா? இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததற்குப் பதிலாக, நன்றி தெரிவிக்கும் தீர்மானமாக இருந்திருந்தால், எதிர்க் கட்சி இன்னுமொரு படி உயர்ந்ததாகக் கருதுவேன். தீர்மானத்தைப் பிரேரித்துப் பேசும்போது கனம் அங்கத்தினர், அமைச்சர்கள் போகும்போதே உதவிகளும் போயிற்று என்று ஒரு மாதிரியாக, சங்கடத்தோடோ அல்லது சந்தோஷத்தோடோ தெரிவித்தார்கள். அது அவர்களையும் அறியாமல் வந்தது. அதை விருப்போடு சொன்னார்களா அல்லது வெறுப்போடு சொன்னார்களா என்று புரியவில்லை. அதே சமயத்தில் அவர்கள், இந்த உதவிகள் கட்சியின் பெயரால் இருக்கக்கூடாது என்று சொல்லிவிட்டு, உடனே இந்த அறிக்கையில் எங்களைப்பற்றிப் பேசவில்லை என்றும் சொன்னார்கள். அது அவ்வளவாக மனதுக்குப் பிடித்ததாக இல்லை. இதையெல்லாம் வெள்ளம் எப்பொழுது வரும், எப்படி வரும் என்றெல்லாம் மிகத் தூரதிருஷ்டி இருந்தால்தான் சொல்ல முடியும். அப்பொழுதுகூட மழை இவ்வளவு வரும் என்று சொல்ல முடியுமா என்று தெரியவில்லை.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அதிசீக்கிரமாக அளிக்க வேண்டும்.

தண்ணீரைத் திருப்புவது பற்றி, அணை கட்டும் விஷயம் பற்றி ராஜா ஸர் முத்தையா செட்டியார் அவர்கள் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார்கள். வழக்கப்படி தன் பாணியில், டில்லியில் சென்று பணம் வாங்கவேண்டும் என்று சொன்னார்கள். அந்தப் பாணி இன்றைக்கு மிகமிக அதிகமாகக்கூட இருந்தது. இப்பொழுதே அவர்களையேகூட டில்லிக்கு அனுப்பலாம், டில்லியிலிருந்து பணம் வரும் என்றால். தண்ணீரை ஹொகனகல்லில் தேக்க வேண்டும் என்பதில் ஒரு சௌகரியம் உண்டு. அங்கே பெண்ணகரத்திற்குப் பக்கத்தில் மேகதாது என்ற இடத்தில் இரண்டு பாறைகளுக்கு இடையே ஆடு தாண்டும் அளவில் காவிரி போகிறது. இதனாலேயே அந்த இடத்திற்கு அப்பெயர். மேகதாது என்ற இடத்தில் மின்சார நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்றது நின்று விட்டது. இது வேறு. அந்த இடத்தில் நீரைத் தேக்கித் திருப்பிவிட்டால் கிருஷ்ணகிரி ரிசர்வாயர் கட்டி நாளாகியும் தண்ணீரில்லாமல் இருப்பதைத் தவிர்க்கமுடியும்; பாலாற்றுக்கும் தண்ணீர் கிடைக்கும், சென்னைக்கும் குடி தண்ணீர் கொடுக்க முடியும். அவைகளையெல்லாம் ஆராய வேண்டும்.

18th September 1961] [Sri S. Nagaraja Monigar]

அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும், பொது மக்களுக்கும் நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொண்டு, இந்த தீர்மானத்தை நண்பர் அவர்கள் வாபஸ் வாங்கிக்கொண்டால் நல்லது என்றும் சொல்லிக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

* **SRI K. ANBAZHAGAN** : கனம் சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தை ஒட்டிய விவாதம் இந்தச் சட்ட மன்றத்தில் விவாதிக்கக்கூடிய வாய்ப்பு இன்றுதான் ஏற்பட்டது. வெள்ளம் ஏற்பட்ட அப்பொழுதே இது நடைபெற்றிருந்தால் ஒரு வேளை அதற்கு வேண்டிய அளவு நிவாரணங்கள்பற்றி குறிப்பிட்டிருக்கலாம். அப்பொழுது விவாதம் நடைபெறுமல் இப்பொழுதுதான் நடைபெறுகிறது. உடனடியாக விவாதம் நடைபெற்றிருக்குமானால் அதற்கு வேண்டிய பரிகாரம் காணவும் வாய்ப்பாக இருந்திருக்கும். அது தவறிவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். அப்பொழுதே அந்த வாய்ப்பு ஏற்படாவிட்டாலும் அதைப்பற்றி விவாதிக்கக் கூடிய நிலை இப்பொழுதாவது ஏற்பட்டிருப்பதால் கடமையைச் செய்யக்கூடிய வாய்ப்பு இப்பொழுதாவது கிடைத்திருப்பதற்கு மகிழ்கிறேன்.

வெள்ளம் ஏற்பட்ட போது வெள்ளத்தின் முழு விவரம், வெள்ளப்பெருக்குச் செய்திகள் பொது மக்களுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படவில்லை என்றுதான் தெரிகிறது. உண்மையிலேயே அதிகாரிகளில் பலருக்குக்கூட உண்மையான செய்திகள் அவ்வப்போது கிடைக்கவில்லை என்றும் தெரிந்து கொள்ளலாம் இந்த அறிக்கையைப் படித்துப் பார்த்தால். அதிகாரிகளுக்குக்கூட வெள்ளப்பெருக்குச் செய்திகள் தாமதமாகவே வந்திருக்கின்றன என்றும் தெரிய வருகிறது. மைசூர் பகுதியில் ஏற்பட்ட வெள்ளம் பற்றிய செய்தி தமிழ் நாட்டிற்கு தக்க சமயத்தில், உடனுக்குடன் கொடுக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. மைசூர் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கைப்பற்றி முன்னதாகத் தெரிவிக்காமல் அவர்களால் எந்த அளவு தாமதிக்க முடியுமோ அந்த அளவு தாமதித்துவிட்டு அதற்குப் பிறகுதான் 4-00 p.m. அங்கிருந்து இங்கு தகவல் கொடுத்திருக்கிறார்கள். சுமார் எட்டு மணி நேரத்திற்கு முன்னதாக ஏறத்தாழ 63 ஆயிரம் க்யூசெக்ஸ் வெள்ளம் வருகிறது என்று அறிவித்துவிட்டு அடுத்த ஆறு மணி நேரத்தில் 1½ லட்சம் க்யூசெக்ஸ் கன அடி தண்ணீர் வருகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவில் அங்கு வெள்ளம் பெருக்கெடுத்துவிட்டதென்று தெரிவித்திருக்கிறார்கள். அதனால் தான் தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட பார்க்க முடியாத அளவில் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் தக்க சமயத்தில் தகவல் கொடுக்காத காரணத்தினாலும், எட்டு மணி நேரத்தில், லட்சம் க்யூசெக்ஸ் கன அடி தண்ணீர் அதிகமாகப் பெருகி வந்த காரணத்தாலும்தான் தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

[Sri K. Anbazhagan] [18th September 1961

மற்ருென்று எந்த அளவில் வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது, அதைத் தடுத்து நிறுத்த எந்த அளவில் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன, முன்னெச்சரிக்கையாக என்ன முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும். கல்லணையில் இவ்வளவு வெள்ளம் ஏற்பட்டும் கூட அதைக் குறைப்பதற்கு அதிகாரிகள் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர்? ஏறத்தாழ ஏழாம் தேதி வெள்ளம் ஏற்பட்டிருக்கிறது. அன்றே வெள்ளம் அதிகமாகப் பெருகி இருக்கிறது. கல்லணையில் முழு அளவிற்குப் பெருகி இருந்தும்கூட ஒன்பதாம் தேதியன்று வெண்ணுற்றில் வெள்ளம் கிடையாது. அதில் விடவேண்டிய முழு அளவு தண்ணீர் விடப்படவில்லை. இதை கனம் அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும். காவேரியில் வெள்ளம் பெருகிக்கொண்டு வரும்போது வெண்ணுற்றில் தண்ணீர் முழு அளவு விடவில்லை. வெண்ணுற்றில் தண்ணீரைத் திருப்பி விடுவதற்கு வேண்டிய வழி செய்யவில்லை. அதன் காரணம் என்னவென்று தெரியவில்லை. அதைப்போலவே சி.எம்.பி. கெனுவில் எவ்வளவு தண்ணீர் விடலாமோ அந்த அளவுக்குத் தண்ணீர் விடவே இல்லை. இவ்வளவு அதிகம் கல்லணையில் தண்ணீர் பெருக்கு எடுத்திருந்தும் இவைகளில் தண்ணீர் விடாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கோவிலடியில் உடைப்பு ஏற்பட்டு வெள்ளம் காவிரியில் பெருகி வரும்போது கல்லணைப் பகுதியில் அரசகுடி என்ற கிராமத்தில் உடைப்பு ஏற்படக்கூடிய ஆபத்து இருக்கிறது என்றும், அதனுல் அந்த ஊரைக் காலி செய்து விட்டு மக்கள் வெளியேற வேண்டும் என்றும் அதிகாரிகள் சொன்னுர்கள். அந்த நேரத்தில் அங்கிருந்த அதிகாரிகள் கரையை உடைத்து விடுவார்கள் என்ற அச்சத்தால் அங்குள்ள கிராமவாசிகள் கரையை உடைக்க விடக்கூடாது என்று தீர்மானித்து ஊரைக் காலி செய்யாமல் இருப்பதற்கென்று கரையைப் பலப்படுத்தி உடைக்காமல் தடுத்து, காத்து விடலாம் என்று ஊராருக்கு தண்டோரா மூலம் தெரிவித்திருக்கிருர்கள். இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்துவதற்குக் காரணம் என்ன? அங்குள்ள கிராம மக்களுக்கு அதிகாரிகளிடத்தில் நம்பிக்கை இல்லாமல் போனதற்குக் காரணம் என்ன? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். கரையை உடைக்க அனுமதிக்க மாட்டோம், மாருகப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னதற்குக் காரணம் என்ன? ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு கரையை உடைக்கவிடாமல் தடுப்பதற்கென்று இரவெல்லாம் காத்து நின்றனர். அத்துடன் அவர்களுக்கு அதிகாரிகளிடத்தில் நம்பிக்கை இல்லை. வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட அந்த நாட்களில் சி.எம்.பி. கெனுலில் எந்த அளவு தண்ணீர் விட்டிருக்கிருர்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். காவிரி ஆற்றில் கொள்ளிடத்துத் தண்ணீர் பெருக்கெடுத்துக்கொண்டிருக்கும் போதுகூட வெண்ணுற்றிலும் சி.எம்.பி. கெனுலிலும் தண்ணீர்

நிரம்பவில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலைமையை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். அரசகுடி கிராமத்தின் கரையை உடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும்போதுகூட வெண்ணாற்றில் தண்ணீர் நிரம்பாத நிலைமைக்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் அங்கு நேரில் சென்று பார்த்தார்களா ? அப்படியானால் என்றைக்குச் சென்று பார்த்தார்கள் ? ஆறும் தேதி அங்கு சென்று விசாரித்ததில் அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. கனம் அங்கத்தினர் என்றைக்கு சென்று பார்த்தார் ?

SRI K. ANBAZHAGAN : நான் ஒன்பதாம் தேதி பகல் அங்கு போய்ப் பார்த்தேன். இதைப்பற்றி அங்கு விசாரித்தேன்.

THE HON. SRI P. KAKKAN : எட்டாம் தேதி காலையில்தானே நாங்கள் சென்று விசாரித்தோம்.

SRI K. ANBAZHAGAN : கனம் அமைச்சருடன் அதிகாரிகள் இருக்கிற காரணத்தினால் மக்கள் நெருங்கிச் சொல்லாமல் இருக்கலாம். இதிலிருந்து கனம் அமைச்சருக்கு பொது மக்களுடன் எவ்வளவு தொடர்பு இருக்கிறது என்று தெரிகிறது. ஒன்பதாம் தேதி பகல் நான் அங்கு சென்றிருக்கிறேன். அங்கு இருந்தது மட்டுமல்ல. . . .

THE HON. SRI V. RAMAIAH : அரசகுடி கிராமம் எங்கு எந்தப் பக்கத்தில் இருக்கிறது ?

SRI K. ANBAZHAGAN : அரசகுடி கிராமம் கல்லணைக்குப் பக்கத்தில் இருக்கிறது. கோயிலடியில் ஏற்பட்ட உடைப்பை அடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக்கொண்ட அதே நாட்களில் அரசகுடியில் பொது மக்கள் கரையை உடைக்காமல் தடுக்க வேண்டிய அவசியம் என்ன ? அங்குள்ள கிராம மக்களின் ஒத்துழைப்பு மூலம் கரையை பாதுகாத்திருக்கிறார்கள். இதைப் பற்றி ஒன்பதாம் தேதி காலை தெரிவித்திருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் சேர்ந்து அரசகுடி வட்டாரத்திலுள்ள கரையை காத்திருக்கிறார்கள். இதைப்பற்றி நான் சொல்லும்போது யாரைப்பற்றியும் குற்றம் சொல்லவில்லை. பொது மக்களுக்கு நம்பிக்கை வரக் கூடிய அளவில் அங்கு அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப் படவில்லை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன்.

மற்றொரு செய்தி. கல்லணையில் வெள்ளம் நிறைந்திருக்கிறது. ஆனால் கீழ்ப் பகுதியில் பல்வேறு பகுதிகளுக்குத் தண்ணீர் இல்லை. காவிரி மூலம் மாயவரம் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைக்கவில்லை, என்று மக்கள் சொல்லி இருக்கிறார்கள். இதைப் பற்றி 'ஹிந்து' பத்திரிகையில் வந்திருக்கிறது. மேல் பகுதியில் வெள்ளம் பெருகி வரும்போது கீழ்ப் பகுதியில் தண்ணீர் இல்லா

மல், அந்த வட்டாரத்தில் தண்ணீர் பாயாமல் பயிர் வாடிக் காய்ந்து கொண்டிருக்கிறது என்று வருத்தத்துடன் எழுதியிருக் கிருர்கள். இந்த நிர்வாகத்தில் ஒரு பக்கத்தில் வெள்ளம் பெருகிக் கொண்டிருக்கிறது. இன்னெரு பக்கத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர் காய்ந்து கொண்டிருக்கிறது. பலப்பல வாய்க்கால்களிலே தண்ணீர் போகவில்லை. இதற்குக் காரணம் என்ன? இந்தப் பொறுப்பு நிர்வாகத்திற்குக் கிடையாதா? இது யாருடைய பொறுப்பு என்பதைக் கவனிக்க வேண்டும். இதை கவனிக்க வேண்டியது எந்த இலாகா? அதுவும் அந்த இலாகா இதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யத்தவறியிருக்கிருர்கள் அல்லவா?

அதைப்போலவே மற்ருென்று, தஞ்சை மாவட்டத்தில் வெண் ணுற்றின் பாசனத்தில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. வெண்ணுற்றில் தண்ணீர் மிகுதியாக விடாமல் கரும்புப்பயிர் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஊரெல்லாம் வெள்ளம் போகும் போது அந்தப் பகுதிக்கு மட்டும் தண்ணீர் விடாமல் இருந்ததற் குக் காரணம் என்ன? ஆற்றில் தண்ணீர் வருகிறது என்று தஞ்சை நகரத்திற்கு ஒரு லட்சம் அல்லது ஐம்பதாயிரத்திற்கு மேல் பாதிக்கப்பட்ட மக்கள் வந்திருக்கிருர்கள். இந்த அறிக்கை யிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஐம்பதாயிரத் திற்கு மேற்பட்டவர்கள் உயிருக்கும், உடமைக்கும், மற்றவைகளுக் கும் ஆபத்து ஏற்பட்டு ஓடி வரும் நிலையிலும் கரும்பு சாகுபடி செய்யக்கூடிய பகுதிக்கு மட்டும் வெள்ளத்தைத் திறந்து விடாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கு எடுத்திருக்கிறது, மற்ருெரு பக்க ஆற்றில் தண்ணீர் கிடையாது. இதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் விரிவாக பரிசீலனை செய்து பார்த்தார்களா? சர்க்கரை ஆலைக்குத் தேவை யான கரும்புப் பயிரை பாதுகாக்கும் நினைப்பில் ஆயிரக்கணக்கான மக்கள் தங்களுடைய மாடு மனை உடமைகளையெல்லாம் இழந்து விட்டு வெளியேறும் நிலை ஏற்படலாமா? இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்க்கவேண்டும்.

அடுத்து, கோயிலடி உடைப்பு ஏற்பட்டதற்குப் பின் அதை அடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையும் முழு அளவில் எடுத்துக்கொள்ளவில்லை. அதன் காரணம் என்ன? ஓடம் போக்கி ஆற்றில் ஏறத்தாழ 13-ந்தேதியன்றுகூட திருவாரூரை அடுத்த அம்மையப்பன் பகுதிகளில் ஏற்பட்ட உடைப்புகளை அடைக்க முடியவில்லை. அவற்றை அடைக்க முடியாமல் அதிகாரி கள் திண்டாடிக்கொண்டிருந்தார்கள். அதனல் திருவாரூர், மாய வரம் சாலையில் கொடிக்கால்பாளையத்திற்கருகில் சாலையை வெள்ளம் கடந்து போக்கு வரத்து பாதிக்கப்பட்டது. இப்படி அம்மையப்பன் உடைப்பை உடனே அடைக்க முடியாததால்— ஏற்பட்ட வெள்ளச்சேதம் அதிகம். இப்படி ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அந்த இலாகாவின் கடமை அல்லவா? அதைப்போலவே கொள்ளிடக்கரையில் வல்லப்படுகைக்கு அருகில் சுமார் ஒன்பது

18th September 1961] [Sri K. Anbazhagan]

மாதத்திற்கு முன்னல் ஏற்பட்ட மழை வெள்ளத்தை ஆற்றில் பாயச்செய்யக் கரையை வெட்டி விட்டிருக்கிறார்கள். அந்த இடத்தின்மூலம் கொள்ளிடத்து வெள்ளம் பெருக்கு எடுத்திருக்கிறது. அந்த உடைப்பு இன்னும் அடைபடவில்லை. அந்த உடைப்பை ஒரு மாதத்திற்கு முன்னதாகவே அடைத்திருந்தால் அங்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கிற வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்காது. அந்தப் பழைய உடைப்பை அடைக்கும் நடவடிக்கைகளை அதிகாரிகள் உடனடியாக எடுத்துக்கொண்டிருக்க வேண்டாமா? கொள்ளிடம் சாதாரண ஆரு? சின்ன வாய்க்காலா? யாரோ ஒரு மிராசுதார் வீட்டு தோட்டத்தில் ஓடுவதா? அவ்வளவு பெரிய கொள்ளிட ஆற்றின் கரைகளை அடைக்காத காரணத்தால், வெள்ளம் வந்தவுடன் நேரிடையாக கிராமங்களிலே புகுந்து விட்டது. அதனல் பல கிராமங்கள் பாழாகிவிட்டன. ஒன்பது மாத காலமாக கரைகளை அடைக்காததற்கு காரணம் என்ன? இந்த வேலையை காண்ட்ராக்டரிடம் விட்டிருக்கிறார்கள். அதனல் வேலை நிறைவேறவில்லை. அதிகாரிகள் எதற்கு இருக்கிறார்கள். காண்ட்ராக்ட்ரிட்டத்தில் சிரித்து பேசுவதற்கு மட்டும்தானு? குறித்த நேரத்தில் அந்த கடமையைச் செய்திருந்தால் இப்பொழுது அந்த வெள்ள சேதம் ஏற்பட்டிருக்காது, பத்து பதினைந்து கிராமங்கள் பாழ்பட்டிருக்காது.

சிதம்பரம் தாலூகாவில் வெள்ளச் சேதத்தினல் உண்டான நஷ்டத்தைக் குறித்து அமைச்சர்களுக்கு இதுவரை சரியான கணக்கு அறிவிக்கப்படவில்லை என்று நான் கருதுகிறேன். வயல்களில் மணல் அடித்து நிரப்பி கிராம மக்களுடைய வாழ்க்கையில் மண் விழச் செய்துவிட்டது. அந்த அளவுக்கு அவர்கள் பரிதாபகரமான நிலைமைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் நிர்வாகக் குறை என்று எதிர்க்கட்சியிலே உள்ள நாங்கள் சொன்னல், 'இவர்களுக்கு நிர்வாகத்தில் குறை காண்பதுதான் வேலை, பாராட்டவே தெரியாது, அதற்கு எங்களிடத்தில் பழக வேண்டும்' என்பார்கள்.

அதே நேரத்தில், ஆளும் கட்சியில் உள்ள மாபெரும் தலைவர் ஒருவர், முன்னல் மத்திய சர்க்கார் அமைச்சராக இருந்த ஒரு பெரியவர், அப்படிப்பட்டவர் வெள்ளச் சேதம்பற்றி என்ன சொன்னர்? 'தண்ணீரைப் பல இடங்களில் பங்கிட்டு விட்டிருக்க வேண்டும்; பல ஆறுகளில் விடாமல் வெள்ளச்சேதம் ஏற்பட வழி வகுத்து விட்டார்கள்; குறித்த காலத்தில் செய்யவேண்டிய கடமையைச் செய்யவில்லை' என்று சொல்லிவிட்டு, 'கொள்ளிடத்தில் முன்னர் ஏற்பட்ட உடைப்பைக் காலத்தில் அடைக்காததால் இப்பொழுது பலப்பல கிராமங்கள் பாழாக நேரிட்டது' என்ற கருத்தையும் தெரிவித்திருக்கிறார். ஒரு வேளை அவரை அதற்குப் பின்னல், 'இப்படியெல்லாம் நீங்கள் பேசினல் காங்கிரஸ் கட்சி என்ன ஆவது?' என்று யாராவது கேட்டிருக்கக் கூடும். அவர் பேசியதை நல்ல வேளையாக பத்திரிகைகள் சில வெளியிட்டு

[Sri K. Anbazhagan] [18th September 1961

விட்டன. உடைப்பை அடைக்காமலிருந்ததற்குக் காரணம் என்ன? யாருக்கு அந்தப் பொறுப்பு? யார் மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

அதே பேலாத்தான், வீராணத்து ஏரி 15 மைல் நீளமுள்ளது. அந்த ஏரியில் நீரைத் தேக்கியிருக்க முடியும். கொள்ளிடத்திலிருந்துதான் அதற்குத் தண்ணீர் பாய்ந்தாக வேண்டும். வெள்ளம் வந்தபோது வீராணத்து ஏரியில் ஓரளவு நீரைத் தேக்கி இருக்கலாம். அதுபோன்ற பிற ஏரிகளிலும், குளங்களிலும் தண்ணீரைப் பாய்ச்சுவது மூலமாக வெள்ளச் சேதத்தைத் தடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டதா என்ற கேள்வியைத்தான் நான் இந்த விவாதத்தின் மீது கேட்க விரும்புகிறேன்.

அப்படிக் கேட்பதன் நோக்கம், இனியாவது அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் கவனிக்கக்கூடிய அளவுக்கு இந்த இலாகா—கொஞ்சம் மத மதப்பாக இருக்கும் இலாகா—சிறிது சுறுசுறுப்பாக இயங்கவேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். சுறுசுறுப்பு கிடையாது, குறித்த காலத்தில் கடமையாற்றுவதில்லை என்று நீண்ட நாட்களாக அந்த இலாகாவுக்கு இருந்துவரும் தீய பெயர் இனியாவது மாறுவதற்கு வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மற்றொன்று; இப்படிக் காவிரி ஆற்றிலே வெள்ளம் முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் வருகிறது என்று பேசுவது அமைச்சரின் திறமையைக் காட்டலாம். ஆனால் இந்த வெள்ளச் சேதம் முப்பது ஆண்டுகளுக்கு ஒரு முறை வருவது போதாதா? இந்த அழிவு அடிக்கடியா வரவேண்டும்? 'சோழ மண்டலத்திற்கு உணவு தருவது காவேரி' என்று பாராட்டிப் பாடியிருக்கிறார்கள். 'மண்ணாவதும் சோழ மண்டலம்' என்றும் பாடியுள்ளனர். அது மண் சிறப்பைக் காட்டவே பாடியதாகும். ஆனால் இப்பொழுது 'மணல் ஆவதும் சோழ மண்டலமே' என்று பாடும் அளவுக்கு மணல் அடித்துவிட்டிருக்கிறது.

இவ்வளவு பெரிய வெள்ளச் சேதத்தை இனியாவது ஏற்படாமல் தடுப்பதற்கு—இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்த கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல்—காவேரி ஆற்றுக்கு ஒரு மாஸ்டர் ப்ளான் தயாரிப்பதற்கு முன்வரவேண்டும். இல்லாவிட்டால், கிடைக்கும் தண்ணீரைக்கூட வகையாகப் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டும், தண்ணீர் அதிகம் வந்துவிட்டால் மக்கள் தவிக்கவேண்டிய வருத்தமான சூழ்நிலையும்தான் மிஞ்ச முடியும். ஆகவே, அப்படிப்பட்ட பெரும் திட்டம் தீட்டுவதற்கு முயன்று, கல்லணையைக் காப்பாற்றுவதற்காவது இன்னும் இரண்டொரு இடத்தில் நிச்சயமாக அணை கட்டித் தீரவேண்டும். கல்லணை ஏறத்தாழ 1,800 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. அப்பொழுதிருந்த பொறியியலாளர்கள் இப்பொழுது போல மேல் நாட்டிலே படித்தவர்களாக இருக்க மாட்டார்கள். ஆனால்,

18th September 1961] [Sri K. Anbazhagan]

அவர்கள் கட்டிய கல்லணைதான் தஞ்சை மாவட்டத்தைக் காத்து மிச்சம் மீதி வைத்தது என்று நான் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அணை மட்டும் காப்பாற்ற முடியாத அளவுக்குக் கல்லணை காப்பாற்றியிருக்கிறது. இதைவிடப் பெருமளவு வெள்ளம் வந்தால், கல்லணை உடைபட்டு விட்டுவிட்டால், அதற்குப் பிறகு தஞ்சை மாவட்டத்தில் எதையும் மிச்சமாக எதிர்பார்க்க முடியாது. அந்த கல்லணையைக் காப்பாற்ற வேண்டுமானுல் அதற்கு மேற்கே ஏறத்தாழ மேல் அணை இருக்கும் இடத்திலோ அல்லது அதற்கு மேலோ, புதுக்கோட்டைக்கு ஒரு நல்ல கால்வாய் வெட்டக்கூடிய அளவுக்கு ஈரோடுக்குப் பக்கத்திலோ ஒரு அணை கட்ட வேண்டும்.

THE HON. SRI V. RAMAIAH : என்ன ஆகும் ?

SRI K. ANBAZHAGAN : நான் சொல்வது ஆலோசனை தான். அதை ஆராயவேண்டியவர்கள் நிபுணர்கள். அமைச்சர் அவசரப்படுவதால் மட்டும் முடிவு ஏற்பட்டுவிடாது. எங்களுக்குப் பதில் அளிப்பதிலே இப்பொழுது காட்டுகிற அவசரத்தை காரியத்திலே அவர் காட்டினுல் வாழ்த்து வழங்க நாங்கள் தயாராயிருக்கிறேரம்.

DEPUTY SPEAKER : இன்னும் இரண்டு நிமிஷங்கள்தான் கனம் அங்கத்தினர் பேசலாம்.

SRI K. ANBAZHAGAN : அப்படியிருக்க, பெரிய அணை கட்டவேண்டிய இடம் எந்த இடம் என்று நான் வற்புறுத்தாதற்குக் காரணம் நான் நிபுணராக இல்லாததுதான். மின்சார அமைச்சர் பெரிய நிபுணர். அணையை அவரே இருந்து கட்டலாம். அவர் ஆலோசித்து நல்ல அணை கட்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். எந்த முயற்சியும் எடுக்காவிட்டால் கல்லணைக்கு ஆபத்து வரக்கூடும்.

நஷ்ட ஈடு வழங்கும் முறையிலே, மக்களுக்கு உதவி செய்யும் முறையிலே, இவ்வளவுதான் நஷ்டம் என்று கணக்கெடுக்கும் முறையிலே அதிகாரிகள் பெரிய தவறு செய்திருக்கிருர்கள். முழு நஷ்டத்தையும் ஒப்புக்கொண்டு கணக்குத்தர ஏனே கூச்சப்படுகிருர்கள். ஏறத்தாழ இரண்டு மூன்று கோடி ரூபாய் அளவுக்கு இன்றையதினம் நான்கு மாவட்டங்களிலும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல், அரசாங்கக் கணக்கு எப்படி இருக்கிறதென்றுல், எல்லாம் சேர்ந்து ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் அளவுக்குத்தான் நஷ்டம் என்று கணக்கிட்டிருக்கிருர்கள்.

மற்றென்று; ஏற்பட்டிருக்கும் நஷ்டத்திற்கு ஈடு செய்யும் முறையில் குடிசையோ, வீடோ இழந்தவர்களுக்கு முப்பது ரூபாயும், உடைக்காகப் பத்து ரூபாயும் வழங்கியிருக்கிருர்கள். இந்த உதவித் தொகையின் அளவு எந்தக் காலத்திலோ

[Sri K. Anbazhagan] [18th September 1961

தீர்மானிக்கப்பட்டது. இருபது ஆண்டு காலமாக இதுவே முறையாக இருக்கிறது. இன்றைக்கும் அதே தொகைதான் அளிக்க வேண்டுமென்றால் இது மிகவும் வருந்தத்தக்கது. இந்தத் தொகை நஷ்டத்திற்கு ஈடாகாது. குறைந்தது அதைப்போன்று நான்கு மடங்கு, ஐந்து மடங்கு அளித்தால்தான் அவர்களுடைய வாழ்க்கையில் ஓரளவு நிம்மதி காண முடியும். அப்படி அளிக்கவேண்டுமென்ற கருத்தை திருச்சி மாவட்டத் தண்டல்நாயகம் தெரிவித்திருக்கிறார். 'முப்பது ரூபாய் போதாது, ஐம்பது ரூபாய் கொடுக்கவேண்டும்' என்று அவர் கூறியிருக்கிறார். அவர்கள் வாங்கும் ஊதியத்திற்கும் ஏற்றுள்ள பதவிக்கும் அதற்குமேல் பேசினால் அந்த பதவி அவ்வளவு நிலையாக இருக்காது. அவர் அவ்வளவுதான் தெரிவிக்க முடியும். கொடுத்த தொகை குறைவு என்பதை அமைச்சர்கள் உணர்ந்து வேறு வழி செய்ய வேண்டும். கொடுத்துக் கணக்குக் காண்பித்தாய்விட்டதே என்ன செய்வது என்று சொல்வார்களானால், அது மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் வேதனையைத் தீர்ப்பதாகாது. ஆற்று மணல் எக்கர் அடித்த நிலங்களிலிருந்து அரசாங்கச் செலவிலேயே அந்த மணலை நீக்க வழி காண வேண்டும். இன்றையதினம் அரசாங்கம் ட்ராக்டரை வாடகைக்கு கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். என்றாலும், அதற்கு உரிய செலவுத் தொகையையும் அளிக்க முன்வர வேண்டும். செலவுத் தொகையைக் கொடுப்பதென்றால் வசதி படைத்த நண்பர் திரு. நல்லசாமி போன்றவர்களுக்குத்தான் முடியுமே தவிர நல்லசிவங்களால்கூட முடியாது. அந்த நிலைமையில் வசதி உள்ளவர்கள்தான் ட்ராக்டர்களை உபயோகப்படுத்தி மணலை அகற்ற முடியும் என்ற காரணத்தால், ஐந்து ஏக்கர்களுக்குக் குறைந்த நிலங்கள் வைத்திருப்பவர்களுடைய பூமியிலே மணல் அடிக்கப்பட்டிருந்தால், அரசாங்கச் செலவிலேயே அந்த மணலை அப்புறப்படுத்தும் கடமையை அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும். சாலை அமைப்பது போலத்தான், வாய்க்கால் கரை அமைப்பதுபோலத்தான் இந்தக் கடமையும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதை அவசியம் ஏற்றுச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வெற்றிலைக் கொடிக்கால் அழிந்துபோன பகுதிகளில், கொடிக்கால் விவசாயிகள் ஏழைகளாக இருப்பதன் காரணத்தால், அவர்கள் மறுபடியும் கொடிக்கால் அமைப்பதென்றால் ஒரு ஏக்கருக்கு 1,500 ரூபாய் செலவிட வேண்டியிருக்கிறது; 5 அல்லது 10 ஏழைகள் சேர்ந்து ஒரு ஏக்காரவில் பயிர் செய்கிறார்கள். ஏக்காரவுக்கு 1,500 ரூபாய் விதம் அவர்கள் செலவு செய்ய முதல் போடப் பணம் கிடைப்பது கஷ்டம். கடனுக்கு வெற்றிலைக் கொடி தந்தாலுங்கூட, அவர்கள் பணத்தைத் திரும்பக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால், அந்த ஏழை எளியவர்கள் வாழ்வு பெறமாட்டார்கள். உண்மையிலேயே கொடிக்கால் விவசாயிகள் கூட்டு முறையில் இணைந்து பயிர் செய்கிறார்கள். அப்படிப் பயிர் செய்வதற்கு உதவி என்ற முறையில், அவர்கள் வாழ்க்கை வளம் பெற, வெற்றிலைக் கொடிகளை விலையின்றி அவர்களுக்குத் தந்து உதவவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

18th September 1961] [Sri K. Anbazhagan]

மற்றும் சில கருத்துக்களை இங்கே வற்புறுத்துவதற்கு வாய்ப்பு இல்லை. தீர்மானித்திருக்கும் மொத்த நஷ்டம் மிகவும் குறைவான நஷ்டம். கொடுக்கும் நஷ்ட ஈடு ஏழைகட்கு எதற்கும் காணாது; நஷ்டத்தை விரிவாக அறிந்து எல்லா நஷ்டத்தையும் மனதார ஏற்றுக்கொண்டு, அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முன்வர வேண்டும். மைசூர் அரசாங்கம் டில்லி சர்க்காரிடம் வெள்ளச் சேதத்திற்கு பத்து கோடி ரூபாய் உதவி கேட்டிருக்கிறார்கள். பூனாவில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்திற்கு பல கோடி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர்கள் கண்ணியம் மிக்கவர்கள். தங்களது அருமை பெருமைகளைத் தெரிந்தவர்கள். அனாவசியமாக யாரிடமும் கைநீட்ட மாட்டார்கள்—தேர்தல் நிதி ஒன்றுக்குத் தவிர. அப்பேர்ப்பட்ட அமைச்சர்கள் இந்த நேரத்தில் பெற வேண்டிய நன்கொடையை டில்லியிடம் கேட்டுப் பெறுவதற்கு முன்வரவேண்டும். டில்லி சர்க்காரிடத்தில் போராடியாவது இரண்டு கோடி ரூபாய் பெற்று இந்த அடிப்படையான கடமைகளைச் செய்யவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன்.

என்னைப்போன்ற ஏழை நிலையினரை அல்ல—செல்வந்தராக இருக்கும் செட்டிநாட்டு அரசர் அவர்களைப் பார்த்து மற்றொரு காங்கிரசு உறுப்பினர் சொன்னார், "டில்லிக்கு அமைச்சர் போவதைவிட அவரை அனுப்பலாமே" என்று. அப்படி அவர் கூறுவதிலிருந்து அவருக்கும் பணம் கேட்பதிலே அக்கறை இருக்கிறது என்று தெரிகிறது. அத்தனை பேர்களும் கூறியுள்ள இந்த முறையை ஏற்றுக்கொண்டு, டில்லி சர்க்காரிடமிருந்து பெற வேண்டிய உதவித் தொகையைப் பெற்று, தமிழ்நாட்டு மக்களுடைய அழிந்துபோன வாழ்வை மறுபடியும் மலரச் செய்வதிலே அமைச்சர்கள் ஏதோ செய்தோம் என்று அலட்சியமாகச் செய்யாமல், தேர்தலை எண்ணியாவது, இந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டு எனது உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் உப தலைவர் அவர்களே, இந்த விவாதத்திற்குப் பதிலளிப்பது மராமத் திலாகா அமைச்சருடைய பொறுப்பு. நான் ஏன் இதில் தலை நீட்டுகிறேன் என்றால் நிவாரண வேலையும் இதில் கலந்திருக்கிறது. ஆகையால் அதைப்பற்றிச் சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படிச் சொல்கிற சமயத்தில் எந்த எந்த வகையில் சிறப்பான முறையில் இந்த வேலை செய்யப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே விவாதம் எப்படி இருக்கிறது? போஸ்ட்-மார்ட்டம் என்பார்களே அதுபோல. இப்போது வெள்ளம் இல்லை; ஆபத்தான, நெருக்கடியான சமயம் இல்லை. அமைதியாக இப்போது உட்கார்ந்து அதைப்பற்றி விவாதிக்கிறோம். இந்தமாதிரியாக வெள்ளம் வந்தால் அதற்கு நிரந்தரப் பாதுகாப்பு என்ன என்பதைப்பற்றி

விவாதிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இந்த வெள்ளத்துக் காரணம் சர்க்காரோ, வேறு அதிகாரிகளோ ஆக முடியாது. சட்ட மொழியில் சொன்னால் ஆக்ட் ஆப் காட் என்று தான் சொல்ல வேண்டும். வெள்ளம் இது மாதிரி அடிக்கடி வருவதாய் இருந்தால் கூட நாம் கொஞ்சம் உஷாராய் இருந்திருக்கலாம். இதற்கு முதலிலே வெள்ளம் வந்து முப்பத்தாறு வருஷங்களாகி விட்டன. 1924-ல் முன்பு ஏற்பட்டது. ஆனால் இப்போது அதை விடக் கடுமையாக வந்தது. அதுபற்றி தகவல் கிடைத்தவுடனேயே இவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். அதுவும் வெள்ளம் வந்தது என்றவுடன் மராமத்திலாகா காரியதரிசி அவர்கள் மிகவும் படபடப்பாக இருந்தார்கள். நான் கூட அவர் ஏன் இப்படி அவசரப்படுகிறார் என்று எண்ணினேன். அவர் ஏற்கனவே ராணுவத்தில் இருந்தார். இப்படித்தான் ராணுவத்தில் ஏதாவது பிரச்னை ஏற்பட்டால் அவர்கள் உடனடியாகச் செயல்படவேண்டும். கொஞ்சம் தாமதித்தாலும் காரியம் கெட்டுப்போகும். அதுபோலவே இங்கேயும் உடனே அவர் தமக்குக் கீழே இருந்தவர்களை **team allocate** பண்ணி—லீவில் இருந்தவர்களை திரும்ப அழைத்து இப்படி மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றினார்கள். அந்தச் சமயத்தில் அவர் எடுத்துக்கொண்ட சிறந்த வேலைகளுக்காக அவரைப் பாராட்டுகிறேன். அவரும், அவரைச் சேர்ந்தவர்களும் செய்த உதவிக்காக நன்றி பாராட்டுகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையை வேகமாகப் படித்தால் ஒன்றும் பிரயோசனம் இல்லை. நிதானமாகவும், பொறுமையாகவும் படித்தால்—அந்தப் பிரச்னை அதற்குப் பரிகாரம் இரண்டும் அதில் நன்றாகத் தெரியும்.

இந்த அறிக்கையைப் பார்த்தாலே தெரியும்--2-ந் தேதி நான்கு மணிக்கு 63 ஆயிரம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்தது, இரவு 11 மணிக்கு ஒரு லட்சத்து பதினோராயிரம் க்யூசெக்ஸாக வந்துவிட்டது. 3-ந் தேதி 1·7 லட்சமாயிற்று—4-ந்தேதி இரவு 8 மணிக்கு 1·9 லட்சமாயிற்று. இப்படி இரண்டு, மூன்று நாளில் படிப்படியாக வெகு வேகமாக வெள்ளம் உயர்ந்துவிட்டது. வெள்ளம் உயர்ந்து கொண்டே போகும்போது விட்டிருக்கலாமே என்றால் மேட்டூர் அணையில் 104, 105 அடிக்கு மேல்தான் தண்ணீர் உயர்ந்தால் வெளி விட வழியுண்டு. அது ஒரு கஷ்டம். 105-க்கு மேல் கணிசமாக தண்ணீர் வெளியே விட்டுக்கொண்டிருக்கும்போது பவானி போன்ற ஆறுகளில் பெருகிவிட்டது. ஆகவே, அந்தச் சூழ்நிலையையும் சமாளிக்க வேண்டியிருந்தது. மிக அதிகமாக தண்ணீர் வருகிறபோது அதை வாங்க கொள்ளிடத்தில் வசதியில்லை. அதனால்தான் கோயிலடி உடைப்பு ஏற்பட்டது. "ஏன் அதை உடனே அடைக்கவில்லை; 10 அடி இருக்கும்போதே அடைத்திருக்கலாமே" என்றெல்லாம் சொன்னார்கள். அந்த இடத்தை அந்தச் சமயத்தில் பார்த்திருக்க வேண்டும். அதிவேகத்தோடு ஒரு சுழலும் இருந்தது. படகுகள் மூழ்க அடிக்கப்பட்டு,

18th September 1961] [Sri M. A. Manickavelu]

எத்தனையோ கஷ்டத்தோடு ராணுவத்தினர் அடைந்தார்கள். மனித எத்தனத்தில் என்ன என்ன செய்ய முடியுமோ அவ்வளவும் செய்யப்பட்டிருக்கிறது. ஒன்றும் செய்யவில்லை என்று வீணைகச் சொல்வதற்கில்லை. திடீரென்று வெள்ளம் ஏற்பட்ட போதிலும்கூட ஆடு, மாடுகளுக்குக்கூடச் சேதம் இல்லாமல் காப்பாற்றியிருக்கிறோம்.

நிவாரண வேலைகளும் நன்றாக நடந்திருக்கின்றன. அதுவும் அந்த வெள்ள சமயத்தில் லட்சத்திற்கு அதிகமான பேர்களுக்குச் சாப்பாடு போடப்பட்டிருக்கிறது. சாப்பாடு போடுவது என்பது சுலபமான காரியம் அல்ல. அதற்கு வேண்டிய காரியங்கள் எல்லாம் செய்யவேண்டும். அதிகாரிகள் மிகவும் திறம்பட அதைச் செய்திருக்கிறார்கள். வீடு இழந்தவர்களுக்கு ரூ. 40 வீதம் உதவி செய்திருக்கிறார்கள். நியாயமாகப் பார்க்கப்போனால் ரூ. 30 தான் கொடுக்க வேண்டும். உடை இழந்தால்தான் ரூ. 10; எப்படியோ இருக்கட்டும் என்று ரூ. 40 கொடுத்திருக்கிறார்கள். இப்படி ஏதோ ஓரளவுக்குத்தான் உதவ முடியும். முழுக்க கொடுப்பது முடியாத காரியம்.

இப்போது பொது முறையில் வீடுகள் கட்டிக்கொள்ள ஆயிரம் ரூபாய் வரையில் கடன் கொடுக்கலாம் என்று செய்திருக்கிறோம். இன்னும் பால் பவுடர், அரிசி எல்லாம் அனுப்புகிறோம். அழிந்து போன பயிர்களுக்கு எல்லாம் விதை சப்ளை செய்கிறோம். அதுவும் மூன்றில் இரண்டு பங்கு விலைக்குக் கொடுக்கிறோம். மணல் அடித்த பிரதேசங்களுக்கு டிராக்டர்களை அனுப்பியிருக்கிறோம். பொதுவாக இதை எல்லாம் மக்கள் நன்மைக்காக; கால்நடைகளுக்கும் கூட தொத்து நோய் பரவாதிருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்.

கொடிக்கால்களைப் பற்றிச் சொன்னார்கள். நூறு ரூபாய் உதவி என்றால் அதில் 50 ரூபாய் கடன் 25 ரூபாய் சப்ஸிடி நாம் கொடுக்கிறோம். இன்னொரு 25 அவர்கள் சேகரித்துக்கொள்ள வேண்டும். தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் ¾ பாகம் கடன் ¼ பாகம் சப்ஸிடி. இப்படி எந்த அளவுக்கு மனித முயற்சியினால் கஷ்ட நஷ்டங்களை சமாளித்துக் கொள்ளலாமோ அந்த அளவு சமாளித்திருக்கிறோம்.

அதோடு நதியோரங்களில் உள்ள கிராமங்களில் வெள்ளம் புகுந்து அழிந்து போகாமல் இருக்க பேஸ்மெண்ட் கொடுத்து விட்டால் இடைஞ்சல் இருக்காது. திருச்சியில், சிந்தாமணியில் கொஞ்சம் வெள்ளம் வந்தாலும் உள்ளே தண்ணீர் வந்துவிடும். இந்தத் தடவை ஒரு சுவர் போட்டிருப்பதால்தான் வெள்ளத்தால் அவர்கள் பாதிக்கப்படவில்லை. ஆக, இவைகள் எல்லாம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பின், "பெட் ஆப் தி ரிவரில்" மண்மேடு இட்டதாலும் இடைஞ்சல் ஏற்பட்டது. அது ஒரு பெரிய பிரச்னை. அதையும் ஓரளவு எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். கரைகளையெல்லாம் பலப்படுத்த வேண்டும். அணை கட்டும் விஷயமும் இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி விரிவாக பேசுவது

4-30 p.m.

உஜிதமல்ல. காவேரியைப்பற்றிய ஒரு உடன்பாடு இருக்கிறது, மைசூர் அரசாங்கத்திற்கும் நமக்கும். 1924-ல் ஒன்று, 1899-ல் ஒன்று. 1974 வரை அது இருக்கிறது. அது இருக்கிற வரைக்கும் நாம் எதுவும் செய்வதற்கில்லை. அணையை எங்கே கட்டுவது என்பதைப்பற்றி இன்வஸ்டிகேட் செய்யலாமே தவிர அதைப்பற்றி கூடுதலாக பேசுவது உஜிதமல்ல. அடுத்தபடியாக, உத்தியோகஸ்தர்களைப்பற்றி சொன்னார்கள். அவர்களுக்கு அமைச்சர்கள் சிறிதும் சளைக்கவில்லை. எல்லா அமைச்சர்களையும் விட இளம் வயதினராகவும், திடகாத்திரராகவும் இருக்கும் அமைச்சர் அவர்கள் உடனடியாக அவரது ப்ரோக்ராமைக் கான்ஸல் செய்துவிட்டு அங்கு நேரடியாகப் போய் தடுப்பு வேலைகளை நன்கு கவனிக்க முடிந்தது. முதல் அமைச்சர் அவர்களும் உடனடியாக விமானம் மூலம் போய் அந்த பிராந்தியத்தைப் பார்த்து மக்களுக்கு வேண்டியதையெல்லாம் செய்திருக்கிறார்கள். மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் ஆஸ்பத்திரியில் இருந்தாலும் உடனடியாக டிஸ்சார்ஜ் வாங்கிக்கொண்டு போய் வேண்டியதைச் செய்தார்கள். பொதுமக்களும் நிறைய ஒத்துழைத்தார்கள். இப்படிப்பட்ட ஒத்துழைப்பு எல்லா விஷயங்களுக்கும் வந்தால் நன்றாயிருக்கும். இப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான சமயத்தில் ஜாதிமத பேதம் ஒன்றும் பார்க்காமல் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்தார்கள். ஏராளமான துணிமணி கொடுத்தார்கள், பணம் கொடுத்தார்கள், ஆகாரத்திற்கு வேண்டியது கொடுத்தார்கள். நல்லது செய்யும்போது அதுபற்றி குற்றம் சொல்லிக் கொண்டிருந்தால் நல்லது செய்பவர்களுக்கு உற்சாகம் இல்லாது போய்விடும். ஆகவே, எந்த அளவிற்கு சொல்லவேண்டுமோ அந்தளவு சொல்லவேண்டுமே தவிர நல்லது செய்யும்போதும் அது தவறு என்று சொன்னால் நல்லது செய்யவே உற்சாகம் இருக்காது. வண்டி ஓட்டுகிறவன் குதிரையை எப்பொழுது அடிக்க வேண்டுமோ அப்பொழுது அடித்து, எப்பொழுது தட்டிக் கொடுக்கவேண்டுமோ அப்பொழுது தட்டிக் கொடுத்தும் ஓட்டுகிறான். அதேபோல் தட்டிக் கொடுக்கும்போது தட்டிக் கொடுக்கவும் வேண்டும். ஆரம்பத்திலிருந்தே குதிரையை சாட்டை கொண்டு அடித்துக் கொண்டேயிருந்தால் குதிரை எங்கேயாவது போய் படுத்துக்கொள்ளும். ஆக, நிவாரண வேலைகள் நன்கு நடந்திருக்கின்றன. பணம் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி ஏற்படாது. 65 ரூபாய் கொடுத்தால் 75 ரூபாய் கொடுக்கக் கூடாதா என்று நினைப்பார்கள். எவ்வளவு கொடுத்தாலும் ஜாஸ்தி கொடுக்க வேண்டுமென்று நினைப்பார்கள். நம் சக்தியையும் பார்க்கவேண்டும். மற்ற விஷயங்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். வேண்டியதெல்லாம் செய்யப்பட்டிருக்கிறதென்று கூறிக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

The Hon. Sri V. RAMAIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று இந்த விவாதத்திற்கு மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் தக்க பதில் சொல்ல இருக்கக்கூடிய நேரத்தில்

18th September 1961] [Sri V. Ramaiah]

நான் இதிலே குறுக்கிடுவதற்குக் காரணம், இந்த வெள்ள நிவாரண வேலைகளை நேரடியாகப் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் இந்த விவாதத்தை ஆரம்பித்து வைக்கும் நேரத்தில், காவேரியில் இதற்கு முன்பு ஏற்படாத ஒரு பெரும் வெள்ளம் இந்த ஆண்டு ஏற்பட்டதென்றார்கள். 1924-ம் வருட வெள்ளத்தையும் இப்பொழுது வந்த வெள்ளத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஏறத்தாழ இரண்டு மடங்கு அதிகமாக வெள்ளம் வந்திருக்கும் என்ற நிலையை நாம் தெரிந்துகொண்டோம். இந்த வெள்ளக் கொடுமையை நேரடியாகப் போய் பார்க்காமல் வெகு தூரத்தி லிருந்துகொண்டு பத்திரிகைகளில் படிக்கிறவர்களின் நினைப்பு எப்படியிருக்கும் என்றால் 1924-ல் எவ்வளவோ சேதம் ஏற்பட்டிருந்ததே, இப்பொழுது அதைவிட அதிகமாக வெள்ளம் வந்தும் அதிகச் சேதம் ஏற்படவில்லையே. ஆகவே, அரசாங்கம் கணக்குகளைக் கொடுக்கும்போது கொஞ்சம் குறைத்துக் கொடுத்து விட்டார்களோ என்று சிலருக்கு சந்தேகம். ஆனால் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கக் கூடியவர்களுக்கு அந்த சந்தேகம் உண்மையிலேயே ஒரு பாராட்டு வார்த்தையாகத்தான் அமைகிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். 1924-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தைவிட அதிகமாக வெள்ளம் இப்பொழுது நம் ராஜ்யத்தில் ஏற்பட்ட நேரத்திலும் அதிகப்படியான சேதம் விளையவில்லை. ஆனால் பக்கத்தில் மாநிலங்களைப் பொறுத்த வரையில் அதிகச் சேதம் விளைவித்திருப்பதை பத்திரிகைகளில் பார்க்கிறோம். அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய கோரிக்கைகளையும் பார்த்திருக்கிறோம். அன்பழகன் அவர்கள் பேசும்போது மைசூர் ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டி அவர்கள் பத்து கோடி ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதென்று சொல்லியிருக்கிறார்களே; அந்தளவிற்கு நாம் சொல்லா விட்டாலும், அத்தனை வெள்ளமும் தஞ்சையை நோக்கித்தானே வந்தது. ஆகவே, பத்து கோடி என்று சொல்லாவிட்டாலும் இரண்டு கோடியாவது சொல்ல வேண்டுமென்பது அவரது வாதம். வெள்ளத்தைப் பொறுத்த வரை, நாம் எடுத்திருக்கக்கூடிய முயற்சிகளை எடுக்காமல் இருந்திருந்தால் நமது சென்னை ராஜ்யத்தில் 10 கோடி அல்ல 20, 30 கோடி ரூபாய் கூட நஷ்டம் ஏற்பட்டிருக்கும். நமது முயற்சியின் காரணமாக பெருத்த நஷ்டம் தவிர்க்கப்பட்டிப்பதை நாம் உணர வேண்டுமென்பதற்காகத்தான் நான் இதில் குறுக்கிட்டு பேசுகிறேன். கோவிலடியில் ஏற்பட்டிருக்கக்கூடிய உடைப்பிற்கு, கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள், இது எதிர்பார்க்காமல் நடந்திருக்காது, அதிகாரிகள் சிறிது ஜாக்கிறதைக் குறைவாக இருந்ததால்தான் இது ஏற்பட்டிருக்கும் என்ற ஒரு நினைப்பை சொன்னார்கள். ஆனால் இந்த உடைப்பு ஏற்பட்ட நேரம், ஏற்பட்ட முறை, இதையெல்லாம் ஸ்தலத்தில் இருந்து பார்க்கக்கூடியவர்கள், இதற்கு முன்பு இருந்த அனுபவங்களை வைத்துக்கொண்டு என்ஜினியர்கள் சொல்ல முடியும். கோவிலடி உடைப்ப ஏற்பட்டதற்கு காரணமே

[Sri V. Ramaiah] [18th September 1961

கிடையாது என்று. அப்படியிருந்தும், அந்த உடைப்பு ஏற்பட்டு விட்டது. 1924-ம் ஆண்டு அனுபவத்தை வைத்துக்கொண்டு காவேரி பேஸினில் எங்கெங்கு உடைப்பு ஏற்படக்கூடிய பகுதிகள் இருக்கின்றனவோ அங்கெல்லாம் வெள்ளம் வரத் தொடங்கிய நேரத்திலிருந்து மராமத்து இலாகா என்ஜினியர்கள் தக்க பாது காப்பு நடவடிக்கைகள் எடுக்க முயற்சி எடுத்தார்கள். அதிலும் நமக்கு ஒரு பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. குறிப்பாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால் சீர்காழி தாலுகா பூராவும் அழிந்துவிடக்கூடிய ஒரு உடைப்பு ஏற்பட்டிருக்கும். சோத்திரியம் என்ற இடத்தில் உடைப்பு ஏற்படக்கூடிய ஒரு ஆபத்தான நிலை ஏற்பட்டது. ஆனால் அந்த ஜில்லாவைச் சேர்ந்த அதிகாரிகள், என்ஜினியர்கள், அந்தத் தொகுதியைச் சேர்ந்த சட்டசபை அங்கத்தினர் முத்தையா பிள்ளை அவர்கள் இவர்கள் இரவு பகலாக அந்த இடத்தில் எடுத்திருக்கக்கூடிய முயற்சியை நினைத்துப் பார்த்தால் நாம் சீர்காழி நகரத்தை, அந்த தாலுகா வையே காப்பாற்றி விட்டோம் என்று சொல்லலாம்.

இந்த சோத்திரிய அபாயத்தை தடை செய்தது வெள்ளக் குறைவு ஏற்பட்டதினால் மட்டுமல்ல, அங்குள்ள மக்களும் அதிகாரி களும் இரவு பகலாக எடுத்துக்கொண்ட முயற்சிதான். அந்த முயற்சி ஏற்படாது இருக்கும் பட்சத்தில் சீர்காழி நகரமே அழிந்து போயிருக்கும். சோத்திரியம் பகுதியில் 8-ம் தேதி பிற்பகலுக்கு மேல், கரைவழிந்து வெள்ளம் ஓடிக்கொண்டிருக்கிறது என்ற அபாய செய்தி கிடைத்தது. இதை தடுக்கவேண்டும் என்ற முயற்சியில் அந்தப் பகுதியிலுள்ள அனைவரும் ஈடுபட்டார்கள், அதன் காரணமாக அந்த இடத்தை காப்பாற்ற முடிந்தது. அதே தாலுகாவில் மற்றொரு இடத்தில் ஆலக்குடி என்ற இடத்தில் மற்றொரு அபாயம் ஏற்பட இருந்தது. அதாவது வேறொரு திசை யில் போய்க்கொண்டிருந்த கொள்ளிடம் ஊரை நோக்கி பாய்ந் தோடக்கூடிய நிலை ஏற்பட்டது. அதையும் அதிகாரிகள் பெரு முயற்சி எடுத்து தடுத்து நிறுத்திவிட முடிந்தது. குறிப்பாக இதில் ரெவின்யூ இலாகாவினரும் மராமத்து இலாகாவினரும் முழு மூச்சோடு வேலை செய்தார்கள். மணிக்கணக்காக, ஆங்கிலத்தில் சொல்லுவார்களே, round the clock என்ற அளவில் வேலை செய்ததின் காரணமாக அங்கு தாங்க முடியாத அளவில் ஏற்பட விருந்த நஷ்டத்தை தவிர்த்திருத்திருக்கிறார்கள். ரெவன்யூ இலாகா அதிகாரிகளும், மற்றுமுள்ள இன்சினியர்களும் இதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டதை நாம் மறந்து விடுவதற்கில்லை. திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொள்வோமேயானால், கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று நினைக் கிறேன், மகாதானபுரத்தின் அருகாமையில் ஏற்பட்ட உடைப்பு பெரும் அபாயக்கட்டத்தை அடைந்துவிட்டிருந்தது. (குறுக்கீடு) கனம் கல்யாணசுந்தரம் அவர்களுக்கு பொதுமக்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ அதே நம்பிக்கைக்கொள்வதில் என்னைப்பொறுத்தவரையில் சற்றும் தளர்ந்தவன் அல்ல நான் என்

18th September 1961] [Sri V. Ramaiah]

பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அதிகாரிகளை அவர்கள் செய்திருக்கக்கூடிய சேவைகளை பாராட்டாமல் இருந்தாலும், அவர்களை குறைகூறுவது என்பது மட்டும் நல்லதல்ல, அதனல் நமக்கு எந்தவிதமான நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. இந்த மகாதானபுரம் உடைப்பை தடுத்து நிறுத்தியதற்கு பொறுப்பாக இருந்தவர், அந்தப் பகுதியில் ரோந்து சுற்றிக்கொண்டிருந்த கரூர் சப் கலக்டர் பாங்கோ அவர்கள்தான். அவர்கள் செய்ததை நாம் மறைத்துக் கூறுவது சரியல்ல. அந்த இடத்தில் ஆறடி, ஏழடி கரை இருந்த இடத்தில் வெள்ளம் வந்து கரைந்து, அதிகாலையில் இரண்டு அடியில் கரை இருந்தபோதுதான் இந்த அபாயக்கட்டத்தை சமாளிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதை தவிர்ப்பதற்காக பங்கோ அவர்களும், அங்கிருந்த எக்ஸிக்யூட்டிவ் இன்சினியர் திரு. சாந்தப்பன் தீவிரமான முயற்சி எடுத்துக்கொண்டு, ரயில்வேயின் ஒத்துழைப்போடு இரண்டு ரயில் நிறைய போல்டர்ஸ் கொண்டு போட்டதின் காரணமாக அந்த அபாயத்தை தடுத்து நிறுத்த முடிந்தது. அதைப்போலவே முசிரி தாலுகாவை எடுத்துக் கொண்டோமேயானல் நகரத்திற்கு அருகாமையில் ஓடிக்கொண்டிருக்கும் காவேரியின் திசை மாறி நகரத்தை நோக்கி ஓடக்கூடிய நிலை ஏற்பட்டது. இந்த அபாயத்தை அங்குள்ள அதிகாரிகள் பொதுமக்களுடைய ஒத்துழைப்போடும், மற்ற இலாகாக்களின் ஆதரவோடு அங்கு ரெவன்யூ டிவிஷனல் ஆபீஸராக இருந்த திரு. சுப்பையா அவர்களும் மற்றுமுள்ள இன்சினியர்களும் பெருமுயற்சி எடுத்து தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, இந்த அறிக்கையை படிக்கும்போது இதில் 14 நடவடிக்கைகளைப்பற்றி சொல்லியிருக்கிறது. இதனல் ஏற்பட்ட நன்மைகள் என்ன என்று கேட்டார்கள். உண்மையில் இந்த 14 நடவடிக்கைகளை எடுத்துப் பார்ப்போமேயானல் தமிழ்நாட்டுக்கு ஏற்படவிருந்த பெரும் நஷ்டத்தை நாம் தவிர்த்திருக்கிறோம் என்பதை நம்மால் பார்க்க முடியும். அதை நேரில் பார்த்தவரையில் அந்த வட்டாரத்தைச் சேர்ந்த மக்களைக் கேட்டாலும் சரி, இந்தமாதிரியான நஷ்டங்கள் ஏற்படாமல் தவிர்த்தற்கு பொறுப்பு இந்த அரசாங்கமும் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் தான் என்பதை சொல்லுவார்கள். இந்த இடங்களை எல்லாம் நேரிடையாக வந்து பார்த்த மத்திய நீர்ப்பாசன கமிஷனுடைய விசேஷ அதிகாரி அவர்கள், தென் பிராந்தியத்தை ஏற்பட்டிருக்கக்கூடிய அபாயங்களை தவிர்த்திருப்பதைப் பார்த்து ஆச்சரியப்படுவதாக அவரால் டில்லி திரும்பும் போது சொல்லாமல் இருக்க முடியவில்லை. அந்த முறையில் முன்னெச்சரிக்கையாக அதிகாரிகள் நடந்து கொண்டதை பாராட்டியிருக்கிறார்கள். ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னது போல் இந்தப் பிரச்சனையை எட்டத்தில் இருந்து பார்த்துக்கொண்டு இருந்தவர்கள் இதைப்பற்றி பல குறைகளைச் சொல்லலாம். இருக்கக்கூடிய சூழ்நிலையில் எதை செய்திருக்கலாம் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப்பார்த்திருக்கவேண்டும். நேரடியாக கிடைத்த அனுபவத்தை கொண்டுதான் நான் இவைகளைச் சொல்லுகிறேன்.

[Sri V. Ramaiah] [18th September 1961

கனம் அன்பழகன் அவர்கள் அரசங்குடி கிராமத்தைப்பற்றி சொன்னார்கள். கோயிலடி உடைப்பைப் பற்றியும் சொன்னார்கள். அந்த இடத்தில் நானும் பிரதம இன்சினியர் அவர்களும் காரில் போய்க் கொண்டிருந்தபோது தான் கல்லணைக்கு 7-ம் தேதி காலை தகவல்கள் வந்தது. நாங்கள் கல்லணையிலிருந்து காவேரிக்கரையோரமாக திருச்சி நகரத்திற்குப் போய் சேர முடியுமா என்றுள்ள மனப் பீதியுடன் போய்கொண்டிருந்த நேரத்தில் குறுக்கே சூப்பிரண்டிங் இன்சினியர் ஒருவர் தகவல் கொடுத்தார். இன்னும் மேலேயிருந்து இரண்டு மடங்கு வெள்ளம் வரப்போகின்றது. அதாவது முன்னால் $4\frac{1}{4}$ முதல் $4\frac{1}{2}$ லட்சம் க்யூசெக்ஸ் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மேலும் 5 அல்லது 7 லட்சம் க்யூசெக்ஸ் வெள்ளம் வரும் என்று எதிர்பார்ப்பதாக சொன்னார்கள். இதை தெரிவித்தவுடன் நம்முடைய மன நிலை எப்படியிருக்கும் என்பதைப்பற்றி நாம் சற்று ஆலோசனை செய்து பார்க்கவேண்டும். இதைக்கேட்டவுடன் நமது பிரதம இன்சினியர் அவர்கள் பயந்துவிடவில்லை. எந்த விதத்திலாவது இதை கட்டுப்படுத்தியே யாகவேண்டும் என்ற உறுதியோடு, அவர்களோடு இருக்கக்கூடிய ஆட்களுக்கு எல்லாம் வேலைகளை பிரித்துக் கொடுத்துவிட்டு, மற்ற இடங்களில் இருக்கும் இன்சினியர்களை எல்லாம் 24 மணி நேரத்திற்குள் இந்தப் பகுதிக்கு வந்து சேர வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து அவர்களை எல்லாம் அந்த இடத்திற்கு தருவித்தார். எந்த விதமான கஷ்டங்கள் நேரிட்டாலும் யாரும் இந்த இடத்தை விட்டு அசையக் கூடாது என்று சொல்லி அதே இடத்தில் அவர்களும் இருந்து மற்ற ஊழியர்களுக்கு உற்சாகமூட்டி வேலைகளை துரிதமாக செய்து அங்கு நேரவிருந்த பெரும் ஆபத்தை தடுத்தார்கள். இந்த தடுப்பு ஏற்பட்டிருக்காவிட்டால் திருச்சி நகரத்திற்கே இந்த தண்ணீர் வந்திருக்கும். கல்லணையிலிருந்து திரும்பும் போது கூட இந்த கல்லணையை திரும்பி வந்து பார்ப்போமா என்ற சந்தேகம்கூட எங்களுக்கு இருந்தது. இதில் ரெவின்யூ இலாகா அதிகாரிகளும் மராமத்து இலாகா அதிகாரிகளும் ஒத்துழைத்தார்கள். அதோடு மட்டுமல்ல, அந்தந்த இடத்திலுள்ள பஞ்சாயத்து தலைவர்கள், பஞ்சாயத்து அங்கத்தினர்கள் ஒரு சில இடங்களைத் தவிர, மற்ற இடங்களிலுள்ளவர்கள் எல்லாம் ஒத்துழைத்தார்கள். சில இடங்களில் எல்லாம் ஏற்படவிருந்த அபாயத்தை நினைத்துப்பார்க்கக் கூட பயமாக இருக்கிறது. அம்மாதிரியான அபாயத்தை எல்லாம் தடுத்துநிறுக்கிறார்கள். இவைகளை எல்லாம் பார்க்கும்போது நமக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்தை ஒரு நஷ்டமாகவே என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் முன்னால் குறிப்பிட்ட மகாதானபுரம் உடைப்பு ஏற்பட்டிருந்தால், குளித்தலை தாலுகா முழுவதும் நஷ்டமடைந்திருக்கும். விளை நிலங்கள் எல்லாம் நஷ்டமடைந்திருக்கும். இந்த தடுப்பு இல்லாமல் இருந்திருக்குமானால் திருச்சி நகரமே வெள்ளத்தின் நடுவில் போயிருக்கும். அந்த வாய்க்காலில் புகுந்திருந்தால் என்ன ஆகியிருக்குமென்றால் அந்த நகருக்கே பெரும் சேதம் ஏற்பட்டிருக்கும். அதோடு மட்டுமல்ல. அந்த வெள்ளம் தொடர்ந்து போய் ஸி.எம்.பி. கெனலை உடைத்து

18th September 1961] [Sri V. Ramaiah]

தஞ்சைக்கு ஆபத்து வரக்கூடிய கொடுமையை அதிகாரிகள் தவிர்த்திருக்கிறார்கள். ஆகையால் இதையெல்லாம் மனதில் கொண்டு, உண்மையைத் தெரிந்துகொள்ள முயற்சியெடுத்தால் உண்மையிலேயே நமது அரசாங்க அதிகாரிகள், எல்லா இலாகா அதிகாரிகளும் செய்திருக்கக் கூடிய பெரும் செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்னொரு குற்றம் சொல்லப்பட்டது. கோவிலடி உடைப்பை அடைக்க எல்லா வசதிகளையும் பெற்று இந்தக் காரியத்தை நடத்தவில்லை என்று சொன்னார்கள். இதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல இலாகா காரியதரிசி நல்லதொரு அமைப்பை ஏற்படுத்தி, எல்லா இலாக்காக்களுடைய ஒத்துழைப்பையும் பெற்று, இந்த இராஜ்ய இலாக்காக்கள் மட்டுமல்லாமல் மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த இராணுவத்தையும் எடுத்துக் கொண்டு, எத்தனையோ பெரிய முயற்சி யெடுத்தாலும் தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டதற்குக் காரணம் வெள்ளப் பெருக்கு தொடர்ந்து அதிகமாகப் போனதே தவிர வேறு ஒன்றும் இல்லை. அப்படி இருந்தும் நடவடிக்கை எடுத்திருக்கும் முறையைப் பார்த்தால், நமக்கு முன் இருக்கக் கூடிய எல்லா வசதிகளையும் பயன்படுத்தியிருக்கிறோம் என்பது நன்றாக விளங்கும். இந்த உடைப்பை அடைக்க முயற்சி எடுத்ததைப் போல, இதற்கு வேண்டிய ஒத்துழைப்பைப் பெற்றது போல, இது வரையில் நமது மாநிலத்தில் வேறு எந்தவேலைக்கும் பெற்றிருப்பதாக எனக்குத் தகவல் கிடையாது. அவ்வளவு ஒத்துழைப்பு, அவ்வளவு ஆதரவு பொது மக்களும், இன்னும் அதிகாரிகளும் எல்லா இலாக்காக்களை சேர்ந்த அதிகாரிகளும் கொடுத்திருக்கிறார்கள். ஆக இந்த வெள்ளத்தைப்பற்றி பலர் இங்கேயிருந்து பத்திரிகைகளில் பார்க்கக் கூடியவர்கள், கேரளத்தில் ஏற்பட்டுள்ள நஷ்டத்தைப் பார்க்கக் கூடியவர்கள், மைசூரில் ஏற்பட்டிருக்கக்கூடிய நஷ்டத்தைப் பார்க்கக் கூடியவர்கள், சந்தேகப்படுகிறார்கள். நமது மாநிலத்திலும் நஷ்டம் அதிகமாக ஏற்பட்டிருக்கும், ஆனால் அதைக் குறைத்துச் சொல்லிவிட்டார்கள் என்று சொல்லக்கூடிய கருத்தை ஏற்றுக் கொள்ளமுடியாது. காரணம் என்னவென்றால், தக்க முன்எச்சரிக்கையுடன் அதிகாரிகள் தீவிரமாக பெரும் வேலையைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக நிவாரண வேலையைப் பொறுத்த வரையில் இவ்வளவு சுலபமாக நடத்தி விட்டார்களே என்று நினைக்கிறார்கள். தஞ்சையிலும், திருச்சியிலும் இது பெரும் வேலையாக இருந்தது. தஞ்சையிலும், திருச்சியிலும் இது போன்ற வெள்ளம் சமீபத்தில் ஏற்பட்ட காரணத்தினால் அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு, இரண்டு கலெக்டர்களும் முன் கூட்டி எல்லா முயற்சிகளும் எடுத்து, வெள்ளம் ஏற்பட்ட நிமிஷத்திலேயே நிவாரண வேலையைத் தொடங்கி விட்டார்கள். ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால், 7-ம் தேதி காலையில் கோவிலடியைப் பார்க்கப் போய்க்கொண்டிருந்தபோது, கிராமத்தை விட்டு வெளியே வந்திருந்த மக்கள் ரோட்டிலே நின்றுகொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களுக்கு

ஏதேனும் உதவி அளிக்கவேண்டும் என்று எண்ணியபோது, ஐந்து நிமிஷத்தில் அரிசியும், பால்பவுடரும் வந்ததைப் பார்த்தேன். நானே பிரமிக்கும் அளவில், முதல் நாளே இதற்கு ஏற்பாடு செய்திருப்பதைப் பார்த்தேன். இதில் உண்மை என்னவென்றால் அரசியல் கட்சிகள் தூங்கி விட்டார்களா என்று நினைக்கிறேன். முன் கூட்டி நிவாரண வேலை செய்ய போதுமான அவகாசம் கிடையாது. ஆகையால்தான் இந்த நிவாரண வேலையைப் பொறுத்த வரையில் அரசாங்க அதிகாரிகள் மக்களுக்கு எந்த விதமான மனக்கஷ்டம் ஏற்படாமல் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறார்கள். இந்த வெள்ளத்தை பொறுத்த வரையில் இதற்கு முன்பு உள்ள அனுபவத்தைக் கொண்டு முயற்சியெடுத்தாலும், இதற்கு முன்பு ஏற்பட்ட வெள்ளங்களைவிட, இந்த வெள்ளத்திலே மக்களுக்கு நிவாரணம் கொடுக்க வேண்டிய காலம் ஒரு நாள், இரண்டு நாள் அல்ல. ஏறத்தாழ 20 நாட்களுக்கு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, வசதிகளெல்லாம் கொடுத்து உணவு கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டிய கட்டத்தில் இருந்தோம். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நடத்திய அதிகாரிகள் குற்றம் குறை இல்லாமலேயே இந்தக் காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியும். பொது மக்கள் திருப்தியோடு இந்த நிவாரண வேலைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : The Hon. Minister can take five more minutes and finish his reply.

THE HON. SRI V. RAMAIAH : The Minister for Works will have to reply.

DEPUTY SPEAKER : Then the discussion on the resolution will have to be continued on the next non-official day.

THE HON. SRI P. KAKKAN : We can sit till 5-30 p.m.

DEPUTY SPEAKER : I think the House has no objection to sit till 5-30 p.m.

SRI M. KALYANASUNDARAM : The Hon. Minister may require about half an hour. I may require about 15 minutes.

DEPUTY SPEAKER : Then we can sit till 5-45 p.m.

THE HON. SRI V. RAMAIAH : இவ்வளவு அதிகமாகச் செயல் நடத்திய அதிகாரிகள் செய்த காரியங்கள் உண்மையில் பாதிக்கப்பட்ட மக்கள் அத்தனைபேரும் வரவேற்கக் கூடிய முறையில் அமைந்திருந்தது. நான் அதிகமாக நடந்த நடவடிக்கைகளைப் பற்றிச் சொல்லாவிட்டாலும், நம்முடைய அதிகாரிகள் இந்தப் பெரும் வெள்ள ஆபத்தைத் தவிர்க்கவேண்டுமென்ற முயற்சியோடு, தேச பக்தியுடன் தொண்டு செய்யவேண்டுமென்ற ஆர்வத்தோடு செய்திருக்கும் பெரும் செயலை சட்ட சபை உண்மையிலேயே

18th September 1961] [Sri V. Ramaiah]

பாராட்டவேண்டும் என்பது எனது விருப்பமும் ஆசையும் கூட. அதோடு நாம் தடுத்திருக்கக் கூடிய ஆபத்தை சட்ட சபை அங்கத்தினர்கள் போய்ப் பார்த்தால்தான் நாம் எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து மீண்டிருக்கிறோம் என்பதைக் கண்கூடாகப் பார்க்க முடியும்.

அதோடு இந்த மணல் மேடிட்டதைக் கொஞ்சம் அதிகமாக கனம் அங்கத்தினர் அன்பழகனும் மற்றவர்களும் பேசத் தொடங்கியிருக்கிறார்கள். அந்த இடங்களைப் போய்ப் பார்த்தால் நன்றாகத் தெரியும். ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் பாதிக்கப்பட்டு விட்டதாகக் கற்பனை செய்து பேசினால் அது பொருத்தமாகாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நஷ்டம் ஏற்படாத நேரத்தில் அதிக நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகப் பிரசாரம் செய்ய முயற்சியெடுத்தாலும் மக்கள் ஆதரிக்க மாட்டார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

இன்னொன்று கோயிலடி உடைப்பு நேரத்தில், கொள்ளிடம் கரை புரண்டு ஓடும் நேரத்தில் கல்லணையிலிருந்து பிரிந்துபோகும் வெண்ணாறு, வெட்டாறு, ஸி.எம்.பி. கெனால் ஆகியவைகளில் அதிகத் தண்ணீர் விடவில்லை என்று ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டது. அவைகள் எவ்வளவு தண்ணீர் எடுத்துக்கொள்ளுமோ அந்த அளவுக்குத் திறந்து விட்டால் என்ன என்று சொல்லப்பட்டது. காரணம் அந்தக் கால்வாய்களெல்லாம் ரிப்பேர் ஆகிக் கொண்டிருந்த காரணத்தினால் அதில் அதிகமாகத் தண்ணீர் திறந்து விட்டால், பிறகு பட்டுக்கோட்டை வாய்க்காலில் ஏற்பட்ட உடைப்பைப் போல ஏற்பட்டுவிடக் கூடுமோ என்று அதிகாரிகள் தயங்கியிருக்க வேண்டும். இருபத்தி-ஐந்து நாட்களுக்குப் பிறகு பட்டுக்கோட்டை வாய்க்காலில் திறந்து விட்டபோது உடைப்பு ஏற்பட்டது. அதிகமாகத் திறந்து விட்டால் அதிகமாக உடைப்பு ஏற்பட்டு தஞ்சை ஜில்லாவில் விவசாயமே ஸ்தம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடலாமென்று சிலர் நினைக்கலாம். அதிகாரிகள் மிக மிக எச்சரிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார்கள். ஆகையால் இதில் எந்த விதமான குறையும் இருக்கக் காரணம் இல்லை என்று சொல்லிக்கொண்டு, கடைசியாக வெள்ளத் தடுப்பு வேலைகளில் அரசாங்கமும், ஜில்லா ரீதியாக இருக்கக்கூடிய அதிகாரிகளும் செய்திருக்கக்கூடிய பெரும் வேலையை மனப்பூர்வமாகப் பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொண்டு, பல சிறந்த ஆலோசனைகளைச் சொன்னதற்காக அவர்களுக்கு முதன் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று ஏற்கனவே பி.டபிள்யூ.டி. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நன்கு ஆலோசனை செய்து, இந்த அறிக்கையில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் என்னென்ன நடவடிக் 5-00 p.m.

[Sri P. Kakkan] [18th September 1961

கைகளை, எப்போது, எந்தவிதமான ஆபத்தும் வரமுடியாது உதவி செய்யலாமோ, அந்த வகையில் உதவி செய்யப்படும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு மட்டுமல்ல, நாம் ஒன்று நினைக்க, தெய்வம் ஒன்று நினைக்க என்பதுபோல், மனித சக்திக்கு மேல் மழை ஜாஸ்தியாக பெய்ததால், அதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாத அளவுக்கு மழை ஜாஸ்தியாக பெய்த தால், அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. மனித சக்திக்கு எந்த அளவுக்குத் தடுத்து நிறுத்த முடியுமோ, அந்த அளவுக்கு அதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருக்கிறார்கள். அதற்கும் மேலாக வந்ததால், இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்பட்டது என்பதை இந்தச் சபையிலுள்ள ஒருசில அங்கத்தினர்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மதிப்பிற்குரிய கல்யாணசுந்தரம் அவர்கள் முதன் முதலில் பேசும்போது ஜூன் மாதம் 1-ம் தேதியிலிருந்து, ஜூலை 24-ம் தேதி வரையில் மழை பெய்தது உங்களுக்குத் தெரியாதா என்று கேட்டார்கள். அப்போது பெய்த மழையினால் வெள்ளம் ஏற்பட வில்லை. 28-ம் தேதியிலிருந்து, 30-ம் தேதிக்குள்ளாக பெய்த அதிக மழையினால்தான் இந்த வெள்ளம் ஏற்பட்டது. குறிப்பாக, இந்த அறிக்கையைப் பார்த்தீர்களானால், ஜூலை மாதம் மேட்டூரில் நீர் மட்டம் 89·75 அடிக்கு உயர்ந்து விட்டது. தேக்கம் பூராவும் நிரப்புவதற்கு சுமார் 30·25 அடி பாக்கி இருந்தது. ஜாஸ்தியாக பருவ மழை பெய்தால்கூட தேக்கம் நிரம்புவதற்கு முடியாத ஒரு நிலைமை இருந்தது. ஜூலை 4-ம் தேதி 105.9 அடியாக உயர்ந்தது. ஜூலை 5-ம் தேதி இரவு 11 மணி வரையிலும் தேக்க முழுமட்ட அள வுக்கு கீழாகவே நீர்மட்டம் இருந்தது. இதுதான் உண்மை நிலைமை, இதை விட்டுவிட்டு அணையிலிருந்து தண்ணீரை ஏன் முன்னதாகத் திறந்து விடவில்லை என்பது. அதனால்தான் வெள்ளம் ஏற்பட்டது என்று அதிகப்படுத்திச் சொல்வதுதான் கற்பனை. 5-ம்தேதி இரவு வரையில் அணையின் முழு மட்டத் திற்கே தண்ணீர் வரவில்லை. 105 அடிக்கு அதிகமாக தண்ணீர் வந்தால் தான் அணையைத் திறந்து விட முடியும். ஸ்ரீ கல்யாண சுந்தரம் அவர்கள், இந்த தண்ணீரை திறந்து விட்டிருக்கலாம் என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி மேலே திறந்து வைத்தால், எப்படித் தண்ணீர் போகும். அதன் மட்டத்திற்கு மேலே தண்ணீர் வந்தால் அல்லவா முழு அளவுக்கு தண்ணீர் போக முடியும். கீழே திறந்து விட்டால், மின்சாரம் எடுப்பதற்கு வருகின்ற தண்ணீர் தான் வெளி வரமுடியும். ஆகவே அணையைத் திறந்து விட்டு விட்டார்கள் என்று சொல்வதெல்லாம் தவறு என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்தத் தண்ணீர் எவ்வாறு, எவ்வளவு மழை, எந்தக் காலத்திற்குள் பெய்தது என்பதை தயவு செய்து இந்தச் சபையிலுள்ள அங்கத்தினர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். ஜூலையில் மூன்று வாரத்தில் மட்டும் மேட்டூர் அணை யில் ஏற்பட்ட உபரி நீரின் கொள்ளளவு மொத்தம் 30,000 கோடி

18th September 1961] [Sri P. Kakkan]

கன அடியாகும். மேட்டூர் அணையில் மொத்தக் கொள்ளளவைப் போல் இது மூன்று மடங்குக்கும் அதிகமானது. இவ்வாறே, பவானி, அமராவதி நீர்த் தேக்கங்களிலும் 4 வாரங்களுக்கு தொடர்ந்து உபரி நீர் இருந்து வந்தது. பவானியில் மொத்தக் கொள்ளளவைப் போல் 1½ மடங்கு ஜாஸ்தி தண்ணீர் வந்தது. அதைப்போல், அமராவதியில் மொத்தக் கொள்ளளவைப் போல் 2 மடங்குத் தண்ணீர் வந்தது. இவ்வளவு அதிகத் தண்ணீர் முன் எப்போதும் வந்ததில்லை. இவ்வளவு தண்ணீரையும் கணக்கிட்டுப் பார்த்தால், காவேரியில் எவ்வளவுத் தண்ணீர் வந்திருக்கும் என்பதை அறிந்து கொள்ள முடியும். இதை அங்கத்தினர்கள் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்வளவு அதிகமான அளவுக்குத் தண்ணீர் வந்ததிலே, 3 லட்சம் கியூசெக்ஸ் தண்ணீர் விடவேண்டிய நிலைமை ஏற்பட்டது. அப்படி விட்டதிலே சிற்சில இடங்களிலே கரைகள் உடைந்திருக்கின்றன. சில இடங்களிலே சேதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. இந்த உண்மை நிலையை அறியாது, பி.டபிள்யூ.டி. அதிகாரிகள் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார்கள், கும்பகர்ண படலத்தில் ஆழ்ந்து விட்டார்கள் என்று நமது எதிர்க் கட்சித் தலைவர் ஸ்ரீமான் கல்யாணசுந்தரம் அவர்கள் கூறியதைக் கேட்டு, நான் உண்மையிலேயே வருத்தப்பட்டேன், இவர்கூட இப்படிக் கூறுகிறாரே என்பது தான் எனக்கு வருத்தத்தைத் தருகிறது. உழைத்துக் கஷ்டப்பட்டு, பாடுபட்டு தமிழகத்திலே உள்ள திருச்சி, தஞ்சை ஜில்லாக்களைக் காப்பாற்றிய அதிகாரிகளைப் பார்த்து, கும்பகர்ணப் படலத்தில் ஆழ்ந்து விட்டார்கள் என்று சொல்வது அவ்வளவு நல்லதல்ல என்பதை மிகவும் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு ஸ்ரீமான் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, அதிகாரிகள் பொறுப்போடு நடந்திருந்தால் கோயிலடி உடைப்பெல்லாம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னபடி, 69,000 கியூ செக்ஸ் அளவுக்குத் தண்ணீர் விட்டாலும், அல்லது வேறு எந்த வகையில் தண்ணீர் விட்டாலும்கூட, அதனால் இந்த நிகழ்ச்சிகளைத் தடுத்திருக்க முடியாது. அப்போதும் நிகழ்ந்தது நிகழ்ந்துதான் இருக்கும். அந்த அளவுக்கு எதிர் பாராத வகையில் தண்ணீர் வந்துவிட்டது. உண்மையிலேயே என்னைக் கேட்டால், பி.டபிள்யூ.டி. சீப் என்ஜினியர், சூபரின் டெண்டிங் என்ஜினியர், எக்சிகியூடிவ் என்ஜினியர் போன்றோர் முதலிலே கிராண்டு அணைக்கட்டு, கல்லணை போன்ற அணைக் கட்டுக்களை பாதுகாப்பதிலே அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், முறைகளையும், ஏற்பாடுகளையும், நாம் முதலிலே கிராண்டு அணைக்கட்டு, கல்லணை போன்ற அணைக் கட்டுக்களை பாதுகாப்பதிலே அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும், முறைகளையும், ஏற்பாடுகளையும், நாம் முதலிலே பாராட்ட வேண்டும். இல்லாவிட்டால், தஞ்சை ஜில்லாவே இன்றைக்கு அழிந்திருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக, சில இடங்களிலே

[Sri P. Kakkan] [18th September 1961

சில ஏக்கர் நிலங்கள் தண்ணீரால் பாதிக்கப்பட்டாலும், சில வீடுகளிலே தண்ணீர் ஓரளவுக்குப் புகும்படியான ஒரு நிலைமை ஏற்பட்டாலும், நேர இருந்த நஷ்டத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவர்கள் செய்தது நாட்டிற்கு ஒரு பெரிய சேவையே யாகும். ஆகவே, நாம் அந்த அதிகாரிகளுக் கெல்லாம் முதலிலே நன்றி செலுத்திக் கொள்ள கடமைப்பட்டவர்கள் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதோடு அவர்கள் அனைவரும் நம் பாராட்டுதலுக்கு உரியவர்கள் என்பதையும், இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயிலடி உடைப்பை வெகு சீக்கிரம் அடைக்க முடியவில்லை என்று கனம் அங்கத்தினர் அன்பழகன் அவர்கள் சொன்னார்கள். இவர் 9-ம் தேதி தான் அங்கு வந்து பார்த்திருக்கிறார்கள். 7-ஆம் தேதி, 8-ஆம் தேதி வந்து பார்த்திருந்தால், அங்கு ஏற்பட்ட கோரக் காட்சிகளை அவர்கள் பார்த்திருக்கலாம். அப்போது தான் அதிகமான அளவில் வெள்ளம் வந்தது. முதலில் மிலிடரி அன்பர்களை அழைத்து வந்தோம். பின்னர் போர்ட் ஆபீசர்களை அனுப்பி வைத்தோம். அவர்கள் பெரும் கஷ்டப்பட்டு, 23 நாட்கள் பிரயாசைப்பட்டு உடைப்பை அடைத்தார்கள் என்பதெல்லாம் உங்கள் அனைவருக்கும் தெரியும். இவ்வளவு வேகமாக தண்ணீர் வரும்போது, யாருமே தங்கள் உயிரையும் மதிக்காது, இந்த வேலையில் ஈடுபட முன்வர மாட்டார்கள் என்பதையும் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். முதலில் முளையடித்தார்கள். இரும்பால் முளையடிக்க பிரயத்தனம் செய்யும் பாறைகளாக இருந்ததால், அந்த இடத்தில் முதலிலே முளை அடிக்க முடியவில்லை. இப்போது போய்ப் பார்த்தாலும், அந்த இடத்தில் பாறைகள் இருப்பது தெரியும். பின்னர் போர்ட் ஆபீசர்கள் வந்து, இரும்பும் கற்களும் போட்டு நிரப்பிய படகுகளை கீழே இறக்கி அடைக்க முடிந்தது. இந்தக் கஷ்டங்களை யெல்லாம் நாம் உணர்ந்து, அந்த அதிகாரிகளையும், மற்றவர்களையும் பாராட்டவும், நன்றி செலுத்தவும் கடமைப்பட்டவர்கள் என்பதை இந்தச் சமயத்திலே மீண்டும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

ஸ்ரீமான் கல்யாணசுந்தரம் அவர்கள் 1924-ம் வருஷத்தில் ஏற்பட்ட மைசூர்-மதராஸ் அக்ரிமெண்டைப் பற்றிச் சொன்னார்கள். அதை இப்போது எடுத்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை, 1974-ல் அதைப் பற்றி பரிசிலனை செய்வது நல்லது என்று அரசாங்கம் கருதுகிறது. அதை இப்போது எடுத்துக் கொள்வதில் சில கஷ்டங்கள் இருக்கிறது. அது அவர்களுக்குத்தெரியாது. அரசாங்கமும் தற்போதைக்கு எடுத்துக்கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறது. ஆகவே, அதை 1974-ல் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. இப்போது எந்த அளவுக்கு இரு மாகாணங்களும் கலந்து பேசி முடிவு காண வேண்டுமோ, அந்த அளவுக்கு முயற்சிகள் செய்துகொண்டிருக்கிறோம். அதற்கு மேலும் அதைப்பற்றி ஜோனல் கவுன்சில் கூட்டத்திலே விவாதித்து நல்லமுறையில் முடிவெடுக்கப்படும்

18th September 1961] [Sri P. Kakkan]

என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சில நண்பர்கள் சில ஆலோசனைகளைச் சொன்னார்கள். மேலே அணை கட்டுவது, கால்வாய் வெட்டுவது, நீர் தேக்கங்கள் கட்டுவது போன்ற சில ஆலோசனைகளைச் சொன்னார்கள். இதற்கு முன்பே நாங்களே, பி.டபிள்யூ.டி. செக்கரடரி, சீப் என்ஜினியர், இன்னும் சில அதிகாரிகள் கலந்து பேசி என்னென்ன திட்டங்கள் மேற்கொள்ளவேண்டும் என்பது பற்றி நல்ல முறையில் பரிசீலனை செய்து, திட்டமிட்டுத்தான் இந்த அறிக்கையிலே சமர்ப்பித்திருக்கிறோம். மேலும், மத்திய அரசாங்கத்துடன் கலந்து பேசி இந்த மாநிலத்திற்கு எவ்வாறு நன்மைகள் செய்யலாம் என்றெல்லாம் பரிசீலனை செய்துகொண்டு தான் வருகிறோம். குறிப்பாக காவேரியில் ஓடுகிற தண்ணீரை பயன்படுத்துவதற்கு; அதிக மழை பெய்தால் வீணாக சமுத்திரத்தில் போய் விழுகிற தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்தும் நோக்கத்தோடு ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகிறோம். அங்கத்தினர்கள் சொல்லிய ஆலோசனைகளும் பரிசீலனை செய்யப்படும் என்று உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நிவாரணம் அளிப்பதிலே எங்களால் இயன்றமட்டும் செய்திருக்கிறோம். வெள்ளம் வந்ததினால் எந்த இடத்திலும் சாப்பாட்டுக்கு கஷ்டப்படவே இல்லை. அரிசியை மூட்டை மூட்டையாக அனுப்பிவைத்தோம். திருச்சி, தஞ்சை, சேலம் முதலிய ஜில்லாக்களுக்கு ரயில்வேயுடன் கலந்து பேசி விரைவிலே கொண்டுபோய் மக்களுக்கு வேண்டிய அரிசியைக் கொடுத்து, அவர்கள் உணவு இல்லாமல் கஷ்டப்படக்கூடாது என்று ஏற்பாடுகள் செய்தோம். அவதிப்பட்ட மக்களுக்கு உணவு நல்ல முறையில் அளிக்க ஏற்பாடு செய்திருந்தோம். குறிப்பாக மக்களுக்கு உணவு அளித்த முறையை, வரலாற்றினை தஞ்சையில் அரண்மனையில் பார்த்திருந்தால் தான் தெரியும். இவ்வளவு நல்ல முறையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து அவர்களுக்கு சாப்பாடு போடுவதற்கும், இன்னும் கால்நடைகளுக்கு தீவனங்கள் வைப்பதற்கும், டாக்டர்களை வரவழைத்து தொத்து நோய் வராத வண்ணம் பாதுகாப்பதற்கும் தக்க முறையில் ஏற்பாடுகள் செய்து மாநிலத்து மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிறோம். மதிப்பிற்குரிய கலியாணசுந்தரம் அவர்கள் மந்திரிகள் அறியாவிட்டாலும் மக்கள் நன்றாக அறிவார்கள் என்று சொன்னார்கள். மக்கள் நன்கு அறிந்து தான் இருப்பார்கள் அரசாங்கத்தினுடைய சேவையை. வெள்ளத்தை தடுப்பதற்கு எங்களால் இயன்ற மட்டும் முயற்சி செய்தோம் என்பதை தமிழகத்து மக்கள் நன்கு அறிவார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திருச்சியில் உணவு அளிக்கும்பொழுது சாப்பாடு பொட்டலத்தில் ஏதோ கமிட்டியின் பெயரைப் போட்டுக் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஏதோ சொல்லவேண்டுமென்று ஆசையினால் தான் சொன்னார்கள். நல்லெண்ணத்தோடு தான் காங்கிரஸ் கமிட்டியார் செய்தார்கள். விளம்பரத்திற்காக ஒன்றும் அப்படிச் செய்யவில்லை. அவர்களும் . . .

[18th September 1961

SRI M. KALYANASUNDARAM: உண்மை தெரியாமல் பேசுகிறார்கள். அவர்கள் தான் முத்திரை போட்டுக் கொடுத்தார்கள். நாங்கள் தான் முதலில் உணவுப் பொட்டலம் கொடுத்தோம். மூன்று நாட்கள் கழித்துத்தான் அவர்கள் கொடுத்தார்கள் . . . .

THE HON. SRI P. KAKKAN: நான் சொல்லுவது என்னவென்றால், கட்சிப் பிரதி கட்சி இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தோடு அநேக நண்பர்கள் உணவுப் பொட்டலம் கொடுத்து மக்களுக்கு ஒத்தாசை உதவி செய்தார்கள். அவர்களைப் பாராட்டவேண்டும். ஒரு சிலர் அவர்கள் சொன்னபடி ஏதோ பெயர் போட்டுக் கொடுத்திருக்கலாம். ஏதோ ஆசையால் அம்மாதிரி கொடுத்தார்கள். நல்லெண்ணத்தோடுதான் கொடுத்தார்கள். நல்ல நோக்கத்தோடு தான் கொடுத்தார்கள். அவர்களும் இம்மாதிரி கொடுத்தார்கள். தஞ்சை நகரில் சில அரசியல் கட்சிக்காரர்கள் இம்மாதிரி பொட்டலங்களை வண்டிகளில் ஏற்றி சுற்றி வந்து கொடுத்தது எனக்குத் தெரியும்.

SRI K. ANBAZHAGAN: அமைச்சர் அவர்கள் பல்வேறு கட்சியினர்கள் பொதுமக்களுக்கு வழங்கிய உணவைப்பற்றி குறிப்பிட்டார்கள். மற்ற அரசியல் கட்சியினர்களெல்லாம் பொது மக்களிடத்திலிருந்து நன்கொடை வசூலித்து அந்த பொருளைக் கொண்டு உணவு கொடுத்தார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அரசாங்கத்தினுடைய அரிசியைக் கொண்டு காங்கிரஸ் பெயரைக் குறித்து அந்த உணவுப் பொட்டலத்தை வழங்கினார்கள். அரசாங்கம் தங்கள் கட்சியினர்கள் மூலம் தான் இதை வழங்கவேண்டுமா? வேறு வழி இல்லையா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: யார் கொடுத்தார்கள், எவ்வாறு கொடுத்தார்கள் என்பது மக்களுக்கு நன்றாகத் தெரியும். சில அங்கத்தினர்கள் தங்களுடைய கையிலிருந்து பணத்தைப் போட்டு நல்ல முறையில் மக்களுடைய பசியை தீர்த்திருக்கிறார்கள். (குறுக்கீடு). அரசாங்கம் கொடுத்தது வேறு. அவ்வாறு பொது மக்களும் பங்கு கொண்டார்கள் என்று சொன்னால் மிகையாகாது. (குறுக்கீடு). கட்சியை பலப்படுத்துவதற்காக என்று சொன்னார்கள். அதற்காகத்தான் பதில் சொன்னேன். மக்களும் கொடுத்தார்கள் பாதிக்கப்பட்ட மக்களுடைய நன்மையைக் கருதி ஏதோ உதவி செய்தால், அரயலுக்கு பயன்படுத்துவதற்காக அம்மாதிரி செய்தார்கள் என்று நினைக்கக்கூடாது என்பதனால் தான் இதற்கு பதில் சொல்ல ஆரம்பித்தேன்.

முத்தையா செட்டியார் அவர்களும் சொன்னார்கள். கலியாண சுந்தரம் அவர்களும் சொன்னார்கள். கண்ணம்பாடியில் உயர்தர அதிகாரியை வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அப்படி உயர்தர அதிகாரியை வைத்து நிலைமையை நன்றாக கவனித்தால் ஓரளவுக்கு நல்லதாக இருக்கும் என்று நானும் நினைக்கிறேன். அந்த யோசனை நல்ல முறையில் பரிசிலிக்கப்படும் என்று உங்கள்

18th September 1961] [Sri P. Kakkan]

மத்தியில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முத்தையா செட்டியார் அவர்கள் பேசும்பொழுது பார்லிமெண்டு அங்கத்தினர்களைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்கள் அநேக தடவை இது பற்றி பேசியிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுமே பண்ணவில்லை என்று சொல்லுவதை நான் ஒத்துக்கொள்ள முடியாது. அவர்கள் எல்லோரும் இயன்றமட்டும் நம்முடைய மாநிலத்திற்கு தொண்டு செய்துவருகிறார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஜேடர்பாளையம் கால்வாயை வெட்டி புதுக் கோட்டைக்கு கொண்டு வரவேண்டுமென்று பல முறை சொன்னார்கள். அதுபற்றி முன்பு பரிசீலனை செய்யப்பட்டு, அது சாதகமாக இல்லாததினால் நிறுத்தப்பட்டது. மீண்டும் அது மட்டுமல்ல, பல இடங்களில் கால்வாய்கள் வெட்டுவது, நீர்தேக்கங்கள் கட்டுவது பற்றி பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதற்காக ஒரு சூபரிண்டெண்டிங் என்ஜினியர் நியமித்து அவர்கள் தலைமையின் கீழ் நீண்ட காலத் திட்டங்கள் பற்றி பரிசீலனை செய்வதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். அதனால் சில நன்மைகள் ஏற்படலாம் என்று இந்தச் சபை முன்பு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சீனுவாசய்யர் அவர்கள் இருக்கிற நிலைமையை உள்ளபடி சொல்லி, பாராட்டுதலையும் தெரிவித்தார்கள். அதேமாதிரி இதர சில அங்கத்தினர்களும் அதிகாரிகளைப் பாராட்டினார்கள். எப்பொழுதும் தங்கள் கடமையைச் செய்தவர்களுக்கு பாராட்டுதல் தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி பாராட்டுதல் தெரிவிக்காமல், என்ன செய்தாலும் ஒன்றும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. 'குற்றம் உள்ள நெஞ்சு குறு குறு என்கும்' எப்பொழுது பார்த்தாலும் பாராட்டுதலை தெரிவிக்காமல் குற்றம் சொல்லுவது நல்லதல்ல. எதிர்க்கட்சி நண்பர் ஸ்ரீ. கே. ஆர். நல்லசிவம் அவர்கள் கூட அதிகாரிகளுக்கு பாராட்டு தலைத் தெரிவித்துவிட்டு, சில இடங்களில் செய்ய வேண்டி இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டார்கள், செய்யத் தவறியதைக் குறிப்பிட்டார்கள். அப்படியில்லாமல் எவ்வளவு செய்தாலும், கும்பகர்ணப் படலம், தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டார்கள் என்றெல்லாம் குற்றம் சாட்டுவது நல்லதல்ல. உண்மையிலேயே நான் அதுபற்றி வருத்தப்படுகிறேன்.

ஸ்ரீ. கருத்திருமன் அவர்களும், ஸ்ரீ. குருமூர்த்தி அவர்களும் பவானி ஆற்றில் வெள்ளம் வந்ததினால் பாதிக்கப்பட்ட கிணறுகளைப் பற்றி சொன்னார்கள். கிணறுகளை நல்ல முறையிலே கட்டுவதற்கு ஒத்தாசை உதவி செய்யவேண்டும், மின்சாரம் கொடுத்து உதவ வேண்டும் என்று சொன்னார்கள். அதையும் அதிகாரிகள் பரிசீலனை செய்வார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீ. சுவாமிநாத மேற்கொண்டார் 'பம்பிங் ஸ்கீமைப்' பற்றி சொன்னார்கள். ஜேடர்பாளையம் கால்வாயைப் பற்றிச் சொன்னார்கள். தஞ்சை ஜில்லாவில் பல இடங்களில் பம்பிங் ஸ்கீமை பரீட்சார்த்தமாக அமுல் நடத்திப்பார்த்து வெற்றியும் கண்டிருக்

[Sri P. Kakkan] [18th September 1951

கிறேம். இப்பொழுதுதான் மேலக்கட்டளை வாய்க்காலில் தண்ணிர் விட்டு உதவி செய்துகொண்டிருக்கிறேம். இதைப் பின்னல் பார்த்து செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஸ்ரீ. கே. பி. எஸ். மணி அவர்களும் பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். அவர் ரொம்பவும் நேரிலே பாடுபட்டவர். வெள்ளத்திலே நீஞ்சி மக்களுக்கு தொண்டு செய்தவர். அவரை பாராட்டுவது மிகவும் பொறுத்தமானது. ராமசுவாமி தேவர் அவர்களும், சம்பத் அவர்களும் பாராட்டுதலை தெரிவித்தார்கள். சம்பத் அவர்கள் வெட்டாறு மேடிட்டிருப்பதால் அதை சீர்படுத்த வேண்டுமென்று சொன்னர்கள். அரசலாறு கரையை உயர்த்த வேண்டுமென்று சொன்னர்கள். இவ்வளவு பெரிய வெள்ளம் வரும் என்று எதிர்பார்க்கவே இல்லை என்பதை மீண்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கத்தினர்கள் சொன்ன விஷயங்களிலெல்லாம் கவனம் செலுத்துவோம். என்ன செய்தாலும், ஒன்றுமே செய்யவில்லை என்று வெறும் குற்றச்சாட்டை மட்டும் தெரிவிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இவ்வளவு பெரிய வெள்ளம் வரும், இவ்வளவு க்யூசெக்ஸ் தண்ணீர் வரும், இவ்வளவு பாதிக்கும் என்ற நிலைமையை எதிர்பார்க்கவே இல்லை. 1924-ம் வருஷத்தில் வெள்ளம் வந்தபிறகு மேட்டூர் அணையைக் கட்டுவதற்கு யத்தனித்தார்கள். அதேமாதிரி அதற்குப் பிற்பாடு மேலக்கட்டளை வாய்க்கால் திட்டம் புள்ளம்பாடி திட்டம் ஆகியவைகளை நிறைவேற்றியிருக்கிறேம். நொய்யலைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்கிறது. அதை மூன்றாவது திட்டத்தில் எடுத்துக் கொள்ள இருக்கிறேம். தண்ணீர் வீணுக்கப் படுவதைத் தடுத்தே ஆகவேண்டும். அதுதான் சொன்னேன், அது பரிசீலனையில் இருக்கிறது, ஒரு முடிவு எடுப்போம் என்று.

கனம் சம்பத் எச்சரிக்கையாக சொன்னர்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரைப் பற்றியும் பலபேர்கள் சொன்னர்கள். ஆனல் அவர்கள் சொன்னதற்கும், மற்றவர்கள் சொன்னதற்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. அவர்கள் நல்ல முறையிலே சொன்னர்கள். அதைச் சிந்தனை செய்து பார்க்க வேண்டும். எப்படியாவது அரசாங்கத்தைக் குற்றம் சாட்ட வேண்டும், சர்க்கார் பேரில் கெட்ட எண்ணத்தை உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில அங்கத்தினர்கள் சொல்லுகிறார்கள். ஆனல், கனம் சம்பத் சொல்வது அப்படியில்லை. நக்கீரனர் சொன்னது போல, நெற்றிக் கண்ணைக் காட்டினலும், குற்றம் குற்றமே என்ற தன் பொருளை அவர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். பல குற்றங்களைச் சொன்னர்கள் நண்பர்கள். எவ்வளவு தூரம் பிரயத்தினம் செய்தாலும், சில சந்தர்ப்பங்களில் நம்மையும் மீறிப் போய்விடுகிறது என்பதைத்தான் நண்பர்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீமான் நல்லசாமி நொய்யலைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதேமாதிரி ஸ்ரீமான் கல்யாணசுந்தரமும் சொன்னர்கள். அதை

18th September 1961] [Sri P. Kakkan]

யெல்லாம் மூன்றாவது திட்டத்தில் பரிசீலனை செய்கிறோம், பின்னால் தான் முடிவு எடுக்கப்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்ரீமான் நல்லசிவம் சொன்னார்கள், நஷ்டஈடு கொடுப்பதில் ரூ. 250 இனாமாகவும், ரூ. 250 கடனாகவும் கொடுத்து மணல் எடுக்கும் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். நானே இரண்டு நாட்களுக்கு முன்பு மறுபடியும் சென்று கோயிலடி, பழமானேறி முதலிய பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்டேன். கோவிலடி பெரிய உடைப்பாக இருப்பதால், அதை அவ்வளவு பூரணமாகச் சீர்திருத்தியாகவில்லை. பழையமாதிரி ரோடு இன்னும் அமைக்கவில்லை. அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அந்த ரோட்டையும் போட்டுவிட்டால், போக்குவரத்தும் பழையமாதிரி சரியாகிவிடும்.

ஸ்ரீமான் கரிய கௌண்டர் அவர்கள் தெரிவித்த பாராட்டுதல்களையும் நன்றியையும் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன்.

ஸ்ரீமான் அன்பழகன் அவர்கள் சில கால்வாய்களில் தண்ணீரே விடவில்லை என்று குறிப்பிட்டார்கள். கொள்ளிடத்தில் எவ்வளவு தண்ணீர் வேண்டுமானாலும் விடலாம். ஆனால், மற்ற கால்வாய்கள் அப்படியில்லை. அதிகத் தண்ணீரை விட்டு இருந்தால், அந்த ஆறுகளின் கரைகளும் உடைப்பெடுத்துப் போயிருக்கும் என்பதையும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்படி ஏதுவும் நேராமல் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பெரிய வெள்ளம் வந்ததால், அப்பொழுது, நானே மக்களுக்கும் சொன்னேன், வெகு சீக்கிரம் பார்த்து தண்ணீர் விடுகிறோம் என்று. இந்த சந்தர்ப்பத்தில், கடைசியில் ஸ்ரீமான் அன்பழகன் ஒரு கொள்கையை ஒத்துக் கொண்டார்கள். அதற்கு என் மகிழ்ச்சி. மத்திய சர்க்காரிடம் பணம் கேட்டு வாங்கி திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஒப்புக்கொண்டார்கள். எப்பொழுதும் அவர்கள் மத்திய சர்க்காரோடு சேரக் கூடாது என்று சொல்பவர்கள். அவர்களே இப்பொழுது மத்திய சர்க்காரிடம் பணம் வாங்கிச் செய்ய வேண்டும் என்று, மத்திய சர்க்காரோடு சேர்ந்து வாழ வேண்டும் என்ற கருத்தை ஒப்புக் கொண்டார்கள். (குறுக்கீடு). சொன்னதை ஒத்துக் கொள்ளுங்கள். ஆகவே, மத்திய சர்க்காரோடு நல்ல முறையிலே சேர்ந்து இயங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM: உதவி சபாநாயகர் அவர்களே, இந்த தீர்மானத்திற்கு மூன்று மந்திரிகள் பதில் சொன்னதிலிருந்தே, இது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் புரிந்துக்கொள்ள முடிகிறது. ஆனால், ஒவ்வொருவரும் பிரச்சினையைத் தொடாமல் விட்டு விட்டார்கள். நான் கொண்டு வந்த

தீர்மானம் அதிகாரிகளைப் பொறுப்பற்ற முறையிலே குறைகூறுவதாக இருக்கிறது என்று சொல்லி, பழியை, பொறுப்பை அதிகாரிகள் மேல் போட்டு விட்டு, தங்களைத் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

THE HON. SRI P. KAKKAN : என்னைச் சொல்லியிருந்தால், ஒப்புக் கொண்டு இருப்பேன். அதிகாரிகளைச் சொன்னதால்தான், நான் அதைச் சொல்லவேண்டி யிருந்தது.

SRI M. KALYANASUNDARAM : அதிகாரிகள் பாராட்டு தலைக் கண்டு, புகழ்ச்சியைக் கண்டு மகிழ்வதில் அர்த்தமில்லை. அதிகாரிகள் விஞ்ஞானிகள். விஞ்ஞான அறிவு பெற்றவர்கள். விஞ்ஞானிகளின் இயல்பு, புகழ்ச்சியை விட குற்றச் சாட்டுகளைச் சொல்பவர்களைத்தான் நண்பர்களாக மதிப்பார்கள். அப்படி யில்லை என்றால் அவர்கள் விஞ்ஞானிகளாக இருக்க முடியாது. அதனால் ஆபத்துதான் ஏற்படும். பொதுப்பணித் துறையில் இருப்பவர்கள் அறிவில் குறைந்தவர்கள் என்று நான் என்றுமே சொல்ல மாட்டேன். ஆகவே, அவர்கள் குறை சொல்வதை வரவேற்பார்கள் என்று நினைக்கிறேனே தவிர, புகழ்ச்சிக்கு மட்டும் மகிழ்ச்சி யடைவார்கள் என்று நான் நினைக்க வில்லை. ஆகவே, அமைச்சரவர்களும், அதிகாரிகளும் இந்தத் தீர்மானத்தையும், என் பிரசங்கத்தையும் வரவேற்றிருந்ததால் அது அவர்கள் கையைப் பலப்படுத்தும். மூன்றாவது திட்ட காலத்தில் திட்டங்களுக்கு விசேஷக் கவனம் செலுத்த, திட்டங்களுக்கு திட்ட கமிஷனின் அனுமதி பெற, மத்திய சர்க்காரில் அனுமதி பெற, இந்த தீர்மானமும், விவாதமும், அவர்கள் கையைப் பலப்படுத்துமே தவிர, பலஹீனப் படுத்தாது. அப்படிப் பலஹீனப் படுத்தும் என்று சொன்னால் அப்படிச் சொல்பவர்கள் நன்கு விஷயங்களைத் தெரிந்து கொள்ளாமல் பேசுகிறார்கள் என்பது தான் நாம் நினைக்கக் கூடியதாக இருக்கும். இது அமைச்சர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம். அதை மூன்று அமைச்சர்களும் புரிந்து கொள்ளாமல், தீர்மானம் கொண்டுவந்ததற்காக என்னைக் குறைகூறி, இது இவ்வளவு பெரிய ஆபத்தாக இருக்கும் என்று தெரியாது, இது
5–30 p.m. மனித சக்திக்கு அப்பாற்பட்டது, குறை சொல்ல வேண்டுமானால், ஆண்டவனையும், காவிரி நதியையும்தான் சொல்லவேண்டுமென்று பழியைத் தள்ளி விட்டு, எவ்வளவோ முயற்சிகள் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அதற்காகவாவது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அது உண்மையா? வெள்ளம் வருவதைக் கண்டு அதை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டாமா? அது உயர்ந்து கொண்டே இருக்க வேண்டிய நிலைமையில் இருக்க வேண்டுமா? அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டாமா? இப்பொழுது என்ன சகாப்தம் நடக்கிறது? இயற்கையை மனிதன் வெல்லக்கூடிய சகாப்தம் நடக்கிறதல்லவா? இயற்கையை மனிதன் ஒடுக்குகிறான் அல்லவா? இயற்கையை மனிதன் கீழ்ப்படிய வைக்கிறான் அல்லவா? காவிரி

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

ஆறு அப்படி மூர்க்கமான ஆறு அல்ல. அதை அடக்க முடியாது என்பதல்ல. அது மனிதனுடைய முயற்சிக்கு அப்பாற்பட்டது அல்ல. 1924-ம் வருஷம் அதாவது 27 வருடங்களுக்கு பிறகு இப்பொழுதுதான் வெள்ளம் வந்திருக்கிறது. அதனுடைய அனுபவம் நமக்கு வேண்டாமா? அதனுடைய அனுபவத்தை நாம் வீண் பண்ணக்கூடாது. வெள்ளத்தை தடை செய்ய முடியா விட்டாலும் வெள்ளம் வந்தால் அதை சமாளிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்கு முயற்சி செய்ய வேண்டாமா? எவ்வளவு அதிகமாக மழை பெய்தாலும் அதை சமாளிக்கக்கூடிய அளவில் நாம் தயாராக இருக்க வேண்டும். இப்பொழுதுள்ள அனுபவத்தை வைத்துக்கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாமா? வெள்ளம் எவ்வளவு வந்தாலும் அதை பயன்படுத்திக்கொள்ளக்கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாமா? வெள்ளம் வருவதை நம்மால் தடுக்க முடியாவிட்டாலும் வெள்ளம் வந்த பிறகு அதை சமாளிக்கக்கூடிய அளவுக்கு நாம் தயாராக இருக்க வேண்டும். கனம் மின்சார அமைச்சர் பேசும்போது உண்மைக்குப் புறம்பாக சிலவற்றைச் சொன்னார். சில அதிகாரிகளைப் புகழ்ந்தார். அதற்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியும். அந்த அதிகாரிகள் அப்படி புகழப்படுவதற்கு தக்கவர் அல்ல. அவர்கள் தவறான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை பாராட்டிப் பேசி இருக்கிறார். அது அவசியம் அல்ல. அதைப் பற்றி எனக்கு கவலை இல்லை. இந்த வெள்ளம் மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்டது அல்ல. இந்த வெள்ளத்திற்கு தமிழ் நாட்டின் மீது என்ன கோபமோ? காவிரி நதிக்கு ஏன் இப்படி கோபம் வந்ததோ தெரியவில்லை. திடீர் என்று மழை பெய்தால் அதை பயன்படுத்திக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும். அதற்குத்தான் ஒரு மாஸ்டர் ப்ளான் வேண்டும் என்று சொல்லுகிறேன். அதைப்பற்றி கனம் அமைச்சர் ஒரு வார்த்தை கூட பதிலில் சொல்லவில்லை. அதைப்பற்றி தொடாமலே பேசிவிட்டார். அதைச் சொல்லி இருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இந்த வெள்ளத்தால் படிப்பினை என்ன என்பதைப்பற்றி செய்ய வேண்டாமா? காவிரி நதியில் இன்றைய தினம் இவ்வளவு க்யூசெக்சுக்கு மேல் தண்ணீர் போகாது என்று கண்டுபிடித்திருக்கிறார். அதன் சக்தி என்ன, அந்த நதியின் திறன் என்ன என்பதைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டாமா? மேட்டூர் தேக்கத்தின் அளவில் இன்னும் அதிகப்படியாக உயர்த்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாமா? மேட்டூர் தேக்கத்தின் அளவை இன்னும் நாம் மிதப்படுத்திக்கொண்டிருக்கிறோம். எந்த அளவிற்கு அதில் தண்ணீரைத் தேக்கலாம் என்ற நிலைமையை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைய நிலைமையில் எந்த அளவுக்கு நதியில் தண்ணீர் போகலாம், என்று பார்க்க வேண்டும். எந்த நேரத்தில் பார்த்தாலும் 3½ லட்சம் க்யூசெக்சுக்கு மேல் தண்ணீர் போனதாகத் தெரியவில்லை. உயர்ந்த பட்சம் நான்கு

லட்சம் க்யூசெக்சுக்கு தண்ணீர் போனதாகத் தெரிய வருகிறது. கனம் மின்சார அமைச்சர் சொல்லும்போது இது இரண்டு மடங்கு தான் அதிகம் என்று சொல்லுகிறார். 1924-ம் வருஷ வெள்ளத்தை விட இது இரண்டு மடங்குதான் அதிகம் என்றும் சொல்லுகிறார். அப்பொழுதுள்ள மழையைவிட இப்பொழுது 1¼ மடங்குதான் அதிகம் என்றும் சொல்லுகிறார். அந்தப் பத்து தினங்களிலும் 30 சத விகிதம் தான் அதிகமாக மழை பெய்திருக்கிறது என்று புள்ளி விவரம் காட்டுகிறது. இதைப் பார்த்தால் காவிரியின் திறனை கண்டுபிடித்துவிடலாம். ஆறு லட்சம் க்யூசெக்சுக்கு தண்ணீர் வந்தாலும் அதை சமாளிக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே இப்பொழுதுள்ள வெள்ளத்தை பயன் படுத்திக்கொண்டு காவிரியின் திறனை நாம் கண்டுபிடித்துக்கொள்ள லாம். அதற்குத் தகுந்த அதை சமாளிக்க வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். மைசூர் அரசாங்கத்துடன் கலந்து கொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு மாஸ்டர் ப்ளான் வேண்டும் என்று சொன்னேன். மாஸ்டர் ப்ளான் என்று சொன்னவுடன் வேறு என்னவோ என்று நினைத்துவிட்டார்கள். அங்குள்ள இஞ்சி னியர்களையும் இங்குள்ள இஞ்சினியர்களையும் அது சம்பந்தப் பட்ட அதிகாரிகளையும் கொண்ட ஒரு கமிட்டியைத்தான் நியமிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. 1924 வருஷ வெள்ளத்தைப் பார்த்திருக்கிறோம். அப்பொழுது அதை பயன்படுத்திக்கொள் ளாமல் இருந்து விட்டோம். இப்பொழுதாவது வெள்ளம் ஏற்பட்டதை பயன்படுத்திக்கொண்டு மைசூர் அரசாங்கத்துடன் கலந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும். அப்பொழுது இருந்த சந்தர்ப்பத்தை இப்பொழுதும் கைவிடக்கூடாது. அதிகாரிகளைக் குறை சொல்ல வேண்டும் என்பதற்காக இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வரவில்லை. கனம் அமைச்சர்களை குறை கூறு வதற்கும் கொண்டு வரவில்லை. அவர்களை குறை கூறி எனக்கு என்ன பயன்? நான் குறை சொல்லிவிட்டால் அவர்களுடைய திறனும் சக்தியும் மாறுபட்டு விடுமா? அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். அவரவர்கள் இருக்கும் இடத்தில் தான் இருக்கிறார்கள். இது தனி நபர் பிரச்னை அல்ல. நிகழ்ந்த அனு பவத்தைச் சொல்ல வேண்டும் என்பதற்காகத் தான் இதைக் கொண்டு வரப்பட்டது. 1924-ம் வருஷம் கிடைத்த படிப்பினையை இப்பொழுது கைவிடக்கூடாது என்பதற்காகத்தான் இதைக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அப்பொழுது அந்த படிப்பினையை பயன்படுத்திக்கொள்ளாவிட்டாலும் இப்பொழுதாவது பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் கொண்டு வரப் பட்டிருக்கிறது. இதற்கு முன் ஏற்பட்ட நிகழ்ச்சியை எழுதி வைக்கவில்லை. அப்பொழுது அன்னிய அரசாங்க ஆட்சி நடந்தது. இப்பொழுது நம் அரசாங்கம் நடக்கிறது. எந்த கட்சி அரசாங் கத்தை நடத்தினாலும் பின் சந்ததிகள் தெரிந்து கொள்வதற்கு இதைப்பற்றி எழுதி வைக்க வேண்டாமா? அன்று அவர்

18th September 1961] [Sri M. Kalyanasundaram]

களுடைய கடமையைத் தவறி விட்டார்கள். அதை நாமும் செய்யக்கூடாது. இது அரசியல் பிரச்னை அல்ல. அரசியல் நோக்கத்துடன் இதை நான் கொண்டு வர வில்லை. தீர்மானத்தைக் கொடுக்கும்போது கூட அரசியல் நோக்கத்துடன் கொடுக்கவில்லை. சோற்றுப் பொட்டலம் விஷயமாகச் சொன்னபோது அரசியலைக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். அந்த முறையில் நான் சொல்லவில்லை அது சின்ன விஷயம். அதற்கு பதில் சொல்ல வேண்டியதில்லை.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் சோற்றுப் பொட்டலத்தைப்பற்றி சொன்னதால் தான் நானும் அதைப்பற்றி சொன்னேன்.

SRI M. KALYANASUNDARAM : அது சிறு விஷயம் தான் அது எதற்கு பிரமாதப்படுகிறது. அதற்கெல்லாம் போகக்கூடாது. இப்படி நிகழ்ச்சிகள் ஏற்படாத வண்ணம் நிபுணர்களை நியமிக்க வேண்டும். காவிரியின் திறனைக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு என்று ஒரு மாஸ்டர் ப்ளானை அமைக்க வேண்டும். இப்பொழுது ஏற்பட்டுள்ள வெள்ளத்தின் பயனை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் . உத்தரவு அனுப்பப்பட்டது என்று சொல்லுகிறார்கள். எவ்வளவோ அதிகாரிகள் என்ன செய்வது என்று குழப்பமாக இருக்கும்போது உத்தரவுகளை அனுப்பி என்ன பயன்? அங்குள்ள நிலைமையில் இலாகாவுக்கு இலாகா தொடர்பு கிடையாது. திடீர் என்று உத்தரவு வந்தால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அதற்கு வேண்டிய அனுபவம் கிடையாது. அதனால்தான் இஞ்சினியரிங் டிபார்ட்மெண்ட் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் மற்ற டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று சொல்லுகிறேன். இதைத் தான் நான் நிபுணர் கமிட்டி என்று சொல்லுகிறேன். இதற்கு வேண்டிய செலவைப்பற்றி டிசம்பர் மாதத்தில் தான் சப்ளிமெண்டரி கிராண்டு கொண்டுவரப்போகிறார்கள். அப்பொழுது அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்றில்லாமல் இப்பொழுது இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். 19-ஆவது பாராவில் கொடுத்திருக்கிற 14 யோசனைகளும் என்னுடைய கருத்தை வலியுறுத்துகிறது. நான் கூறக்கூடியவைகள் எல்லாம் அதில் இருக்கிறது. நான் தீர்மானம் கொடுத்த பிறகுதான் இந்த யோசனைகளை யெல்லாம் கூறியிருக்கிறார்கள். அது இன்றைக்கு விவாதத்திற்கு வந்திருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் இதைப்பற்றி குறிப்பிட தவறி விட்டது. நானும் அதில் அங்கத்தினராக இருந்தும் கூட இதைப்பற்றி சொல்ல தவறிப் போய்விட்டது. அதை அரசாங்கமும் எடுத்துச் சொல்ல தவறி விட்டது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ப்ளட் கன்ட்ரோல் என்பதற்கு என்று பணம் ஒதுக்கி இருக்க வேண்டும். அது விட்டுப்போனதற்கு நானும் பொறுப்பு என்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். இப்பொழுதாவது இதை வலியுறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். கடந்த

[Sri M. Kalyanasundaram] [18th September 1961

நிகழ்ச்சியின் படிப்பினையாக என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி ரிகார்டில் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இஞ்சினியர்கள் அடங்கிய கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்க்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். நிவாரண வேலைக்கு இரண்டாம் இடம் தான் நான் கொடுத்திருக்கிறேன். நிவாரண வேலை இரண்டாம் பட்சமாகத்தான் செய்ய வேண்டும். கனம் அன்பழகனுடைய கருத்து உண்மையானது. ஆகையால்தான், மத்திய அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மற்ற ராஜ்யங்களுக்கு ஒதுக்கிய தொகையின் அளவு சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கவில்லை. இப்பொழுதும் மற்ற ராஜ்யங்களுக்கு, குறிப்பாக பம்பாய் போன்ற ராஜ்யங்களுக்குத் திடீரென்று உதவி கொடுத்திருக்கிறார்கள். அதே அளவு போதுமான அளவு உதவி பெற்று, நிவாரண வேலைகளைத் துரிதமாகச் செய்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபித்திருக்கிறேன். அமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை ஆட்சேபிக்க வேண்டியதில்லை, இதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கின்றேன்.

THE HON. SRI P. KAKKAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முப்பது வருஷங்களாக நாம் சும்மா இருந்து விட்டோம் என்று கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் மீண்டும் சொன்னார்கள். சும்மா இருக்கவில்லை, பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை அவர் தெரிந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் . . . .

DEPUTY SPEAKER: The Hon. Minister has already replied to the points raised by the hon. Mover of the Resolution and other Members. The Hon. Mover of the Resolution, who has the right of reply, has replied to the discussion. Now, at this stage, I think the Hon. Minister need not speak again on the same points.

THE HON. SRI P. KAKKAN: The hon. Mover of the Resolution has referred to me and by way of personal explanation, I wish to say a few words to clarify the position.

DEPUTY SPEAKER: Yes, the Hon. Minister may do so.

THE HON. SRI P. KAKKAN: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என்னைப்பற்றி கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதற்குத்தான் விளக்கம் தருகின்றேன். இந்த மாநிலத்தின் நன்மையைக் கருதி நல்ல முறையிலே தீர்மானம் கொண்டுவந்ததாக கனம் அங்கத்தினர் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—அவருடைய ஆலோசனையைக் கேட்பதற்கு முன்பே, அவர்கள் பேசுவதற்கு முன்பே அரசாங்கம் திட்டமிட்டு

18th September 1961]   [Sri P. Kakkan]

அப்பேர்ப்பட்ட நல்ல காரியங்களை நடைமுறையில் செய்வதற்குத் தயாராயிருக்கிறது. சொன்ன பிறகுதான் நடந்தது என்பது அல்ல.

Sri M. KALYANASUNDARAM : தீர்மானத்தை நான் கொண்டுவந்ததனால் ஆட்சேபிக்கவேண்டும் என்று வைத்துக் கொள்ளவேண்டாம்.

The Hon. Sri P. KAKKAN : அவர்கள் சொல்வது சரியல்ல. அவர்கள் தீர்மானம் கொடுப்பதற்கு முன்பே நாங்கள் நன்கு திட்டமிட்டிருக்கிறோம் என்று தான் நான் சொல்கிறேன்.

DEPUTY SPEAKER : Is the hon. Member Sri Kalyanasundaram withdrawing his resolution?

Sri M. KALYANASUNDARAM : No, I am pressing it, Sir.

DEPUTY SPEAKER : The question is—

"That this House recommends to the Government to appoint a Committee of Experts to enquire into and report to the Government on the following points :—

(*a*) whether any avoidable administrative lapses have occurred during the recent floods in the Cauvery system;

(*b*) whether the meterological fore-casting arrangements covering the Cauvery system are adequate; and what further improvements are needed;

(*c*) whether the maintenance of bunds and desilting of river-beds have been carried out properly and adequately in the Cauvery delta; and

(*d*) the adequacy or otherwise of flood-control measures in the Cauvery delta and what further measures should be taken."

The Resolution was put and lost.

DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 5-43 p.m.

IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

A. Statutory rules and orders.

344. *Notification issued with G.O. Ms. No.* 2079, *Home, dated* 20*th June* 1961 *regarding amendments to Rule* 10 *of the Madras Liquor (Licence and Permit) Rules*, 1960, *published with Home Department Notification S.R.O. No. A*-291 *of* 1960, *dated* 18*th August* 1960 *at pages* 3—121 *of the Supplement to Part V of the* Fort St. George Gazette, *dated the* 14*th September* 1960. [*Laid on the table of the House under section* 54 (3) *of the Madras Prohibition Act*, 1937 (*Madras Act* X *of* 1937).]

345. *Notification issued with Memorandum No. 22492-U/61-6, Revenue, dated 3rd July 1961 regarding amendments to Rules framed under section 116 (2) (i) and 34 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 published with Notification S.R.O. No. A-3470 of the* Fort St. George Gazette, *dated the 18th May 1960. [Laid on the table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

346. *Notification issued with Memorandum No. 21032-U/61-5, Revenue, dated 28th June 1961 regarding amendments to rules framed under section 18 of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 issued with Revenue Department Notification S.R.O. No. A-709 of 1960, published at pages 680–681 of Part V of the* Fort St. Georg Gazette, *dated the 21st December 1960. [Laid on the table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

347. *Notification issued with G.O. Ms. No. 2496, Home, dated 15th June 1961, appointing 13th July 1961 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 which have already come into force, shall come into force in Narayanapuram Kalappai inam estate in Mannargudi taluk of Thanjavur district. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

348. *Notification issued with G.O. Ms. No. 1883, Revenue, dated 3rd May 1961 appointing 2nd June 1961 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948, other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68 which have already come into force, shall come into force in Kuttadivayal inam estate in Arantangi taluk of Thanjavur district. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

349. *Notification issued with G.O. Ms. No. 2495, Revenue, dated 15th June 1961 appointing 13th July 1961 as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 other than sections 1, 2, 4, 5, 7, 8, 58-A, 62, 67 and 68, which have already come into force, shall come into force in Muriyappanjam inam estate in Sivaganga taluk of Ramanathapuram district. [Laid on the table of the House under section 67 (4) of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948 (Madras Act XXVI of 1948).]*

350. *Notification issued with Memorandum No. 64632-U/61-Revenue, dated 17th July 1961 regarding amendments to the Rules issued with Revenue Department Notification S.R.O. No. A-599 of 1961, published at pages 629-630 of Part V of the* Fort St. George

Gazette, *dated the 7th June* 1961. [*Laid on the table of the House under section* 29 (3) *of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Act*, 1959 (*Madras Act* 30 *of* 1959).]

351. *Notification issued with G.O. Ms. No.* 3032, *Revenue, dated 20th July* 1961 *appointing 17th August* 1961 *as the date on which the provisions of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 *other than sections* 1, 2, 4, 5, 7, 8, 58-*A*, 62, 67, *and* 68 *which have already come into force, shall come into force in inam estates of Chennapalli, Chinpalthradi and Kaminaickenpalayam in Hosur taluk of Salem district* [*Laid on the table of the House under section* 67 (4) *of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Act*, 1948 (*Madras Act XXVI of* 1948).]

352. *Notification issued with G.O. Ms. No.* 3173, *Revenue, dated 29th July* 1961 *regarding restoration of exemption from payment of entertainments tax in respect of film shows run for the benefit of the service personnel in the Indian Air Force Stations in Avadi and Tambaram, withdrawn in G.O. Ms. No.* 3097, *Revenue, dated 21st October* 1959. [*Laid on the table of the House under section* 16 (4) *of the Madras Entertainments Tax Act*, 1939 (*Madras Act X of* 1939).]

353. *Notification issued with G.O. Ms. No.* 3219, *Revenue, dated 31st July* 1961 *exempting Sri Subramaniaswami temple, Chetput, Madras, from all the provisions of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959. [*Laid on the table of the House under section* 116 (3) *of the Madras Hindu Religious and Charitable Endowments Act*, 1959 (*Madras Act* 22 *of* 1959).]

354. *Notification issued with G.O. Ms. No.* 1181, *Public (Services-A), dated 10th July* 1961 *regarding amendments to the Madras Public Service Commission Regulations* 1954, *published with Public (Services) Department Notification No.* 50, *dated 5th May* 1954 *at pages* 759 *to* 768 *of Part I of the* Fort St. George Gazette, *dated the 9th June* 1954. [*Laid on the table of the House under Article* 320 (5) *of the Constitution of India.*]

B. Reports, Notifications and other papers.

197. *Report of the Committee of Privileges on the 'The Mail'*.

198. *Report on the activities of various departments under the control of Food and Agriculture Department for the half year ending 30th September* 1960.

199. *Assurance No.* 1191—*Answer to Legislative Assembly Starred Question No.* 69 (65) *put on 21st January* 1961 *regarding number of Block Advisory Committees constituted in the year* 1960.

APPENDIX

[*Vide* Answer to Starred Question No 1595 asked by Sri T. S. Ramaswami at the meeing of the Legislative Assembly held on 18th September 1961, page 21 supra.]

On two occasions, after the reorganisation of the States, Forest Guards in Kanyakumari district had resorted to opening of fire while performing their official duties.

2. In the first case, a Forest Guard named Rajarathnam, while on duty in the Asambu Forest Reserve on 18th May 1958, opened fire when a group of smugglers attacked some forest officials. A certain Esakkimuthu Pillai sustained a gun-shot injury, to which he succumbed later.

3. In the second case, a Forester named Sri Kanagarajan of the Azhagiyapandipuram Forest Reserve and his men went to Asambu Forest Reserve for patrolling it. They saw three persons (who had also gone there to collect fuel) running away on seeing them. Forest watcher Marappa Thevar opened fire. One Thambiran Pillai was injured.

4. On each of the occasions, an enquiry was conducted by the Revenue Divisional Officer (E.F.C.M.), Padmanabhapuram.

5. In the first case, the Revenue Divisional Officer held that the Forest Guard was justified in having opened fire in self-defence. The Collector of Kanyakumari did not agree with the Revenue Divisional Officer. After investigation by the Police, the forest official concerned was prosecuted on a charge of murder. He was acquitted by the Court.

6. In the second case, the Revenue Divisional Officer held that forest watcher was not justified in having opened fire. Both the Forest Guard and the Forest Watcher were charged before the appropriate Court. They were acquitted by the Court.